உ

ஆனந்த போதினி [illegible]

பிப்ரவரி, 1924

23

JL
ம11 N26AG
N28 2 23
167833


ANANDA GUNA BODHINI
Regd. No. M. 2151
ஆநந்தகுணபோதினி.
24 FEB 1928
கோபால முதலியார்
சாலைத் தெரு, மதராஸ்

## விஷய அட்டவணை. (மாசி மீ)


1. ஆநந்த தரிசனம் ... 525
2. இறைவனை உணர்ந்து தொழுதல் ... 529
3. நட்பு ... 535
4. நமது கதாப் பிரசங்கி ... 537
5. விகடப்பிரதாபன்—'லீப்—நய'ரின் லீலைகள்! ... 540
6. பிரபஞ்ச தரிசனம் ... 544
7. சிறுமணித்திரள் ... 547
8. பெரியாரின் மொழிகள் ... 549
9. ஆசிரியருக்குக் கடிதங்கள் 551
10. பழமொழிக் குறிப்புகள் ... 553
11. ஆங்கில தமிழ் கடிதங்கள் ... 556
12. செடிகள் பரவும் விதம் ... 557
13. பரிசுத்தமே பாக்கியம் ... 559
14. ஸ்ரீ ஸ்வாமி தயாநந்த சரஸ்வதி ... 561
15. பிரபஞ்ச நவீனங்கள் ... 564
16. நூலாசிரியர்களும் அவரது நண்பர்களும் ... 566
17. மாதர் மனோரஞ்சிதம் ... 568
18. அநுபவ முறைகள் ... 570
19. நமது கையொப்ப நேயர்கட்கு ... 572
20. மதிப்புரை ... 573
21. யாத்திரையின் பயன் ... 575
22. பணத்தை யநுசரித்துக் கௌரவம் ... 578
23. சென்ற மாதம் ... 579


### "ஆநந்த குணபோதினி"யின் வருஷ சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளிநாடுகளுக்கு ரூபாய் 1–4–0. தனிப்பத்திரிகை அணா 2.

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயிண்டு செய்வதற்குச் சௌகரியமாய் அவ்வருஷத்தின் முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

கடிதம் எழுதுகையில் இவ்வருஷம் கொடுத்திருக்கிற தங்களின் புதிய நெம்பரைத் தெரிவிக்காவிடில் பதில் தரப்படமாட்டா. பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெறாதோர் பிரதி தமிழ் மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதாவிடில் அனுப்பப்படமாட்டா. அன்னோர் விலை கொடுத்துப் பெறவேண்டும்.

### "ஆநந்த குணபோதினி" முதல் வருஷ வால்யம்.

முதல் வருஷத்திய வால்யத்தின் 12 ஸஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து நேர்த்தியான முழு காலிகோ பைண்டு செய்துள்ளது. விலை ரூ. **1—6.** 630-பக்கங்களுக்கு மேல்கொண்ட அருமையான அநுபவ ஞான நூலாகும். விரைவில் எழுதிப் பெறுக.

### நமது நிருப நேயர்கட்கு அறிக்கை.

☞ பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாசத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். பிரசுராகாத வியாசங்களைத் திரும்பிப் பெற ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம்:— பத்திராசிரியர், "ஆநந்த குண போதினி" ஸ்ரீரங்கம்.

☞ "ஆநந்த குணபோதினி"க்குச் சந்தாதாராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலிய நிர்வாக விஷயங்கட்கு தீ. இராஜகோபால் முதலியார், "ஆநந்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை, என்று எழுதுக.

☞ இனாம்:— இதுவரையிலும் சேராதிருந்து இரண்டு புதிய சந்தாதாரர்களைச் [illegible] தருவோருக்கு [illegible]

## சங்கீதானந்த வல்லபன்.

குயிலைப்போலவே இசையைத் தரக்கூடியது தொண்டையின் ரணம் கரகரப்பு தொண்டை கம்மலையும் மாற்றி நாபிமுதல் நெஞ்சு குழைவரையிலும் நல்ல வலுவைத் தந்து பாடும் சக்தியைத் தரக் கூடிய சித்தர் முறை. பத்தியம் கிடையாது.

டப்பி 1-க்கு விலை ரூபா 1 0 0

---

## குன்ம பரிஹாரி.

ஜடாராக்கினி கோபித்து உண்டாகும் குன்ம வியாதிக்கு எங்கள் ஔஷதம் குறிதவறாத ஓர் திவ்விய அஸ்திரம் என்றே சொல்லவேண்டும். ஆகாரம் உட்கொண்டவுடன் காணும் வயிற்றுவலி, ஜீரணச் சமயத்தில் காணும் வயிற்றுவலி, வெறும் வயிற்றில் காணும் வயிற்று வலி, எப்போதும் வயிறு நிறைந்ததுபோலவே இருத்தல், சாப்பாட்டின்மேல் பிரியமில்லாமல், வயிற்றில் வேதனை, உண்ட ஆகாரத்தை ...ந்தி எடுத்தபின் ரோகிக்கு கொஞ்சம் சௌக்கியமாய் இருத்தல், ...ந்தம், அக்னி மந்தம், குலை எரிவு, குத்திக் குத்தி வரும் புளியேப்... வயிற்றுக்குள் காற்று அங்கும் இங்கும் ஓடுவதுபோலிருத்தல், ...ற்றில் பந்துபோல் எழும்பி கீழும் மேலும் உலாவுதல் முதலிய ...ய்களெல்லாம் நமது ஔஷதத்தை எண்ணிக்கையாக 10-நாட் ...ள் சேவித்த மாத்திரத்தில் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் ...ந்துபோகும். வயிறு உப்பிசம், வயிற்றுப் பொருமல், அடிக்கடி காற்றுப்பரிதல், கட்டிபோல் திரண்டு மார்புக்கு ஏறுதல் தொப்பு ளைச்சுற்றி நம நம வென்னும் நோக்காடு முதலியவைகளை வெகு சுரு க்காய்க் குணஞ் செய்துவிடும். எவ்வளவு சாப்பிட்டாலும் வயிற்றில் பசித்துக்கொண்டே இருக்கும் ஓர்வித சக்தியை இம்மருந்து உண் டாக்கிவிடும். இதன் விலை மிகவும் சொற்பம்.

இம் மருந்தின் விலை புட்டி 1-க்கு ரூபாய் இரண்டு.

---

## கண்கட்டு வித்தைகள்.

300-பக்கங்கள்கொண்டது. நான்கு பாகம் விலை ரூபா 2—0—0.

இப்புத்தகத்தில் ஒவ்வொரு தேசத்தில் நடக்கும் வித்தைக ளும், இன்னும் ஸ்தம்பனவித்தை, கணிதவித்தை, கைபுரட்டு வித்தை, காடிவித்தை, பீதாம்பரவித்தை, புருஷவசியம், ஸ்திரீ வசி யம் முதலிய அநேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

---

...இராஜகோபால் ...லியார். 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

திருத்தணி க்ஷேத்திர மஹாத்மியமென்னும்

## தணிகை புராண வசனம்

இத்தணிகை புராணம் இதுவரையில் பாட்டாக இருந்தன. அதை வசன ரூபமாக எல்லோருக்கும் தெளிவாக தெரியும்பொருட்டு அச்சிட்டு இருக்கிறோம் இதில் தணிகையிலிருக்கும் பச்சரிசி, கிரி மலை இவ்விரண்டு மலைகளின் பிரபாவங்களும் சுவாமிகள் நந்திக்குவுபதேசித்த பதிபசு பாச விளக்கமும், நந்தி ஆற்றின் பிரபாவங்களும், நந்தி ஆற்றின் கரையிலுள்ள வீரஹட்டகாச சுவாமிகள், ஆறுமுகக்கடவுள், விஜயராகவ சுவாமிகள் இம்மூவரின் பிரபாவங்களும், தீர்த்த பிரபாவங்களையும் இன்னும் அனேக பிரபாவங்களும் அடங்கியிருக்கின்றன. இப் புஸ்தகத்தின் விலை அணா 8.

---

## அராபிக் கதை.

பூர்வீக கதைகளில் இக்கதை மிகவும் சிறப்புவாய்ந்த தென்பதை யாவருமறிவார்கள், இதன் மேன்மையைக் கருதியே இது பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு இவ்வுலக முழுதும் பரவியிருக்கிறது. இக்கதையின் தொடக்கம் ஷாரேயர், ஷாஜமான் என்பவர்களால் உண்டாக்கி ஷயாலாட் என்னும் ஸ்திரீயால் சொல்லப்பட்ட அனேக ஆச்சரியக் கதைகள் அடங்கின பெரிய ஒரு கதாசாகரம். இதில் அனேக கதைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையும், ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். மூன்று பாகங்களும் ஒன்றாய்ச் சேர்த்து டிம்மி அளவில் 680-பக்கங் கொண்ட பெரிய புஸ்தகம். காலிகோ பயிண்டு விலை ரூபா 2-8-0.

---

## சப்தரிஷி வாக்யம் (5500)

187-சக்கரங்களடங்கியது.

மனிதர்களின் சகல வைதீக லௌகீக கிரியைகளுக்குரிய நட்சத்திராதிகளை யறியவும், அவர்களின் ஜனனகாலத்திலமைந்திருக்கும் கிரகநிலைகளை யறிந்து அதனாலடையத்தக்க நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்ளவும், தீமைகளினின்று நீங்கவேண்டிய பிராயச்சித்தாதி சாந்திகளை யுணரவும், இந்நூல் தெய்வீகமாக ஏற்பட்டதென்பது யாவருமறிவார். ஆனால் அது எளிதில் அறியத்தக்கதன்று. கிரந்தமா யிராமையால் காசிபர், அத்திரி முதலிய சப்தரிஷிகள் வாக்கியத்தைத் தெளிவான தமிழில் அருளிச் செய்ததைத் திருவள்ளூர் சோதிடம் செங்கல்வராய முதலியாரால் கணிக்கப்பட்ட 187-சக்ரங்கள் அமைக்கப்பெற்று வெளியிட்டிருக்கிறது. இது ஒவ்வொரு சோதிட அப்பியாசிக்கும், ஏனையோருக்கும் மிகவும் அவசியமானது.

திக்கு கடிதம் காலிகோ பயிண்டு விலை ரூபா 3-8-0.
கிளேஸ் காலிகோ பயிண்டு 5-8-0.

# ச ரோ ஜ னி

தமிழ் உலகமே பிரம்மித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிருங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நாவல். அழகே ஓர் உருவமாய் அமைந்த பத்துச் சித்திரப்படங்கள் அடங்கியது.

“பகற் கொள்ளை! பகற் கொள்ளை!! கௌரவமான வியாபாரி கொள்ளைக்காரனை மாறினான்!!!” என்று இக்கதையின் முதல் அத்தியாயத்தில் அலங்காரமாக ஆரம்பிக்கப்பட்ட இந்நாவலை கையெடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். அதிகமாய்ப் புகழாமல் ஒரேவார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், இது இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்நாவல்தான்.

புஸ்தகம் அச்சிட்டு வெளிவந்த பத்து நாட்களுக்குள் சுமார் 1,500 பிரதிகள் செலவாகிவிட்டனவென்பது தமிழ் நாட்டில் இதுவரையிலும் கேட்டறியாத ஆச்சரியமல்லவா? இருபத்திரண்டு அழகிய அத்தியாயங்களைக் கொண்ட இவ்வற்புத நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் மெஸ்மரிசம்போல் மனதைக் கவருமென்பது நிச்சயம்.

தமிழ் நாட்டில் இதைப்போன்ற அபூர்வமான நாவல் வெளிவந்ததில்லையென்று ஆயிரக்கணக்கானஜனங்கள் சொல்லுகின்றனர்.

விலை ரூபா இரண்டே.

---

## சோதிட பேரகராதி

இது 61வது பஞ்சாங்கம் ஆக்கியவரும், சிற்பநூற் பொக்கிஷ ஆசிரியருமான சோதிடசாஸ்திரி எஸ். கூடலிங்கம் பிள்ளை அவர்களால் பற்பல சொற்பொருள் விளக்கத்தோடு ஆக்கப்பெற்றது. இதில், சோதிடம் கற்றுக்கொள்வோருக்கும், சோதிடத்தில் தேர்ச்சியடைந்தவர்களுக்குங்கூட தெரியாத அநேக பதங்களுக்கு பொருளை விளக்கிக்காட்டி மிகவும் உபயோகப்படத்தக்கதாக இருக்கிறது. இப் புஸ்தகத்தின் விலை ரூபா 2—4—0.

---

இ. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெரு, சென்னை.

# வேமன்ன பதிகம்.

**1000-பிரம்ம வித்தியா சுலோகங்கள்)**

திருந்தமான] மூலமும் - உரையும் [2-ம்பதிப்பு

வடதேசத்தின் கண் மிகவும் பிரக்யாதி பெற்றிருந்த வேமன்ன யோகீஸ்வரர் என்னும் வேதாந்த நிபுணரைப் பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். இவர் முற்றும் துறந்த முழுஞானியாய்ப் பல அற்புதங்களைச் செய்து முடிவில் வேதாந்தத்தின் தத்துவப் பொருளை பலரும் அறிந்துய்யும் வண்ணம் தெலுங்கு பாஷையில் அழகிய சிறு கவிகளாகச் செய்துள்ளார். பண்டை நாற்களில் இவருடைய கிரந்தம் மிகவும் சிறந்ததாகும். இதிலுள்ள ஒவ்வொரு செய்யுளும் தத்துவார்த்தத்தைத் தன்னிடங்கொண்டு மனத்தை யானந்திக்கச் செய்யும். ஆனால் தெலுங்கு பாஷையறியாத நண்பர்கள் அதனையுணரக் கூடாத தன்மையிலிருப்பதால், அக்கவிகளைத் தமிழில் பொழிப்புரையுடன் யாவருக்கும் நன்றாய் விளங்குமாறு அநேக சீர்திருத்தங்களுடன் பரிசோதித்து, சுத்தப் பதிப்பாக டபுல்கிரௌன் 16 பேஜ் அளவில் அச்சிட்டு காலிகோ பயிண்டு செய்திருக்கிறது.

விலை ரூபா 1—0—0.

---

# நளவீம பாகசாஸ்திரம்.

புத்திமான்களே ! இந்து தேசத்துப் புராதன சமையற் பாகங்களில் மிக மேலானதாய் உருசிகரங்கொண்டு சமையற் பாகங்களுக்கென்று சேகரித்து வைத்துக்கொண்டு அச்சிட்டிருக்கும் இச் சாஸ்திரத்தில் பிரிஞ்சி, புலவு, சட்னி, ஊறுகாய் பாயாஸ் வகைகள் தயிர் வகைப் பதார்த்தங்கள், பால்வகைக் கரிகள், கரிக் குழம்புகள், குருமா, மீன்வகை பதார்த்தங்கள், கோழி, புறு முதலிய பட்சி ஜீவகாருண்ணியங் கருதி, மாம்ஸ பதார்த்தங்களை நீக்கி யுண்பவர்களுக்கு வேண்டிய மரக்கரி கிழங்குவகை, கீரை, காய்வகைப் பதார்த்தங்கள் பிராமண விதிப்படி சமைக்கும் முறைமைகள், நானாவித ஷர்ப்பத்துக்கள் செய்யும் அளவுப்பிரமாணம் இவைகளைப் புசிப்பதால் வயித்திய சாஸ்திரத்தின்படி இன்னின்ன பதார்த்தங்கள் உடலுக்கு இன்ன குணங்களைச் செய்யுமென்றும் விவரித்திருக்கிறது. இது நம் நாட்டுப் பெண்களுக்கு மிகவும் பிரயோஜனந் தாத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு புத்தகமிருந்தால் ஒருவர் சகாயமில்லாமலே சமையல் பாகங்களையும் பலகாரபட்சண பூந்தி லட்டு மிட்டாய் வர்க்கங்களைத் தாமே செய்து சாப்பிட்டுச்சந்தோஷமடையலாம். விலை ரூ. 1.

---

இ. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெரு, மதராஸ்.

---

நீங்கள் வெகுநாளாய் எதிர்பார்த்திருந்த

# இன்பரகசியம்!

வெளிவந்து விட்டது! வாங்கி வாசித்துப்பாருங்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| ஜீவவசிய பரம ரகசியம் | ... ... | 3 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மம் | ... ... | 2 | 4 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியம் | ... ... | 2 | 0 | 0 |
| மதிமோசக் களஞ்சியம் 2-பாகம் | ... ... | 2 | 0 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | ... ... | 1 | 8 | 0 |
| கைத்தொழில் வணிகரகசியம் | ... .... | 1 | 8 | 0 |
| மாயாஜால விநோதம் | ... ... | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | .... ... | 1 | 0 | 0 |
| சரீரமூர்ம சாஸ்திரம் | ... ... | 1 | 0 | 0 |
| பிரமஞான பரம ரகசியம் | ... ... | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ மகத்துவம் | .... .... | 1 | 0 | 0 |
| மதனரதி ரகசியம் | ... .... | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | ... ... | 1 | 0 | 0 |
| இரதிமதன சிருங்கார ரகசியம் | ... .... | 0 | 12 | 0 |
| சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி | .... ... | 0 | 8 | 0 |
| இரகசிய சாஸ்திர சிந்தாமணி | .... ... | 0 | 8 | 0 |
| [illegible] சித்தர் கோவை | .... ... | 0 | 8 | 0 |
| [illegible]லின் வெற்றி | .... | 0 | 6 | 0 |

# சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி.

இது மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சிறந்த நூல். இதில் ஸ்திரீகளின் இலட்சணங்களும், சத்சந்தானங்களை விருத்தி செய்யும் முறைகளையும், ஆண் பெண் ஆகிய இருபாலாரும் அநுசரிக்கவேண்டியச் சில விதி விலக்குகளையும், கர்ப்போற்பத்தின் இரகசியங்களையும் இன்னும் பல அரிய ஆச்சரியக் கருத்துக்களையும் விவரமாய்த் தெரிவித்திருப்பதால் ஒவ்வொருவருக்கும் இது அத்தியாவசியமானது. இப்புத்தகத்தின் விலை அணா 8.

---

இ. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

# கோகிலா

# கூந்தல் வளரும் தைலம்.

5-பலம் தைலம் அடங்கிய டின் 1-க்கு விலை அணு 12.

நேயர்களே! தாங்கள் அநேகவித கூந்தல் தைலங்களை உபயோகித்திருக்கக்கூடும். இருந்தபோதிலும் எமது கோகிலா கூந்தல் வளரும் பரிமளத் தைலத்தை ஒரு தடவை உபயோகிப்பீர்களாகில், அதன் குணம், மணம் என்றும் தங்களைவிட்டகலா தென்பது உண்மை.




இந்த கோகிலா கூந்தல் வளரும் பரிமளத் தைலமானது அநேகவித திவ்விய வன மூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதன்பரிமளம் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்குநிகராகயிருக்கும். இது மயிரை உதிர்க்காமலும், கூந்தலை நீளமாக வளரச் செய்யும், மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல ரோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் கண்டு புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், ஆகிய இவைகளைப் போக்கடித்து தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

| | | |
|---|---|---|
| மல்லிப்பூ எண்ணெய் | 0 | 12 |
| சம்பகி ,, | 0 | 12 |
| மருடம்பூ ,, | 0 | 12 |
| தாழம்பூ ,, | 1 | 0 |
| ரோஜாப்பூ ,, | 1 | 0 |

தி. இராஜகோபால் முதலியார் 302 தங்கசாலை தெரு, மதராஸ்.

வெளிவந்துவிட்டது! 2-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!!

கண்ணைக் கட்டி காலங்கழிக்கும்

மிஸ்டர் திண்ணைத் தூங்கி

# தடிராமன்

மிஸ்டர் திண்ணைத்தூங்கி தடிராமன் கதையைப் படிக்கக் கேட்போர் அன்றே கல்வியில்லா பலரும் கல்வி கற்க முயலுவார்கள். காரணம் நமது மிஸ்டர் தடிராமன் தன் தாய் தந்தையரிடமும், உபாத்தியாயரிடமும், தன் மாமன் மாமியிடமும், தன் ஊராரிடமும், ஜமீன்தாரிடமும், குஸ்தி கோதா பந்தயத்திலும், தாசி சதுர் கச்சேரியிலும், தன் அபிமான ஸ்திரீயிடமும் செய்யும் அகடவிகட விநோத வேடிக்கைகள், மிடா நகைப்பை உண்டாக்கும். இதன் விலை அணு 6.

# சோடா லெம்நெட் பவுடர்.

இது லெம்நெட் வாட்டரைப்போல் இனிப்பு, வாசனை ஆவி கிளப்புகிறது இதுகளெல்லாம் உண்டு. பிரயாணம் செய்பவர்களுக்கும் யாத்திரை செய்பவர்களுக்கும் இது ஓர் நேசன். லெமனெட் சாப்பிட இஷ்டமிருக்கும்போது ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை லெம்நெட் பவுடர்போட்டால் சாதம்பொங்குவதைப் போல் பொங்கும் அப்போது சாப்பிடலாம். சில கிராமங்களில் லெமனெட் அகப்படாது அதற்குப்பதிலாக இதை செய்து சாப்பிடலாம் அப்படி அகப்பட்டாலும் விலையுமதிகம்.

லெமனெட் பவுடர் புட்டி 1-க்கு அணு 10.

சோடா பவுடர் புட்டி 1-க்கு அணு 8.

# பொன்னுங்கண்ணி ஸ்நானத் தைலம்.

இத்தைலத்தைக்கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கண் கைகால் எரிச்சல், தேகக் கொதிப்பு, மேக [illegible] மூளையின் வரட்சி உள்ளங்கை உள்ளங்கால் எரிவந்தம் கண்புகைச்சல் கண்ணை மூடித்திறந்தால் அனலாய் இருத்தல் பீனிசம் நாசியில் நீர்வடிதல் இரத்தம் வடிதல், கண்ணோய் கண்சிகப்பு, பீலிசார்த்தல், கண் இமை அரிப்பு, காதிரைச்சல், தலைநோய், கிறுகிறுப்பு இன்னும் கண்டத்திற்கு மேற்பட்ட எல்லா வியாதிகளையும் கண்டித்து மூளையைப் பலப்படுத்தும் கண்கள் குளிர்ந்து பிரகாசிக்கும் மூளையின் அனலை ஆச்சரியப்படும்படி குணஞ்செய்து உஷ்ணத்தினால் சரீரம் எப்போதும் கதகதவென்றிருப்பதை மாற்றி தேகத்தைக் குளிரபண்ணும் மூத்திரச் சூடு மூத்திர எரிச்சல் முதலியவைகளை மாற்றும். இதன் விலை மிகவும் சொற்பம்.

இதன் 4-அவுன்ஸ் டப்பி 1-க்கு ரூபா 1 0 0

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

# மதன மனோகர லேகியம்

இந்த திவ்விய ஔஷதம் ஸ்திரீ, புருஷர்களுக்கு அநந்தம் நன்மையை அளிக்க வல்லது. பலஹீனத்தை மாற்றி பலத்தையும், அஜீர்ணத்தைப் போக்கி ஜீர்ண சக்தியையும், நபும்ஸகத்தைப் போக்கி புருஷஸத்துவத்தையும், சோம்பலை நீக்கி சுறுசுறுப்பையும், விருத்தாப்பியத்தை மாற்றி வாலிபத்தையும், நிச்சயமாயும் நிரந்தரமாயும் அளிக்கவல்ல தெய்வீக ஔஷதம் இது ஒன்றே. உஷ்ண மிகுதியால் தாதுக்கள் பலமிழந்து போவதால் உண்டாகும் சர்வ ரோகங்களையும் கண்டிப்பதற்கு இதைவிட சிறந்த ஔஷதம் எங்கு தேடினும் கிடைப்பது அரிது. துரித ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம் என்னும் தன்னையுமறியாமல் பலவகையிலும் வீரிய நஷ்டமாகும் துக்ககரமான கொடிய வியாதிக்கு இந்த லேகியந்தான் குறிதவறா பாணம். வெள்ளை, நீர்சுருக்கு, நீரிழிவு, மதுமேகம் முதலிய நீர்தாரை சம்பந்தமான வியாதிகளை நிர்மூலப் படுத்தும். சிறு பிராயத்தில், ஜீவ நரம்புகளை. பல வகையிலும் சின்னபின்னப் படுத்தி, அதன் பயனாக ஜீவ நரம்புகள் தளர்ந்திருப்பினும், இராப்பகலில்லாமல் சிற்றின்பம் துய்த்தலால் உண்டான பலஹீனமாயினும் சரியே இந்த லேகியத்தை எண்ணிக்கையாக 40-நாட்கள் சேவித்தால், தளர்ந்த நரம்புக் கூடுகள் பலப்பட்டு, புஷ்டி அடையும். மூளைக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியைக் கொடுத்து தாதுவைக் கெட்டிப்படுத்தும்.

புருஷர்களின் உஷ்ணம் ஸ்திரீகளுக்குப் பற்றுவதால், ஸ்திரீகள் நாளுக்கு நாள் இளைத்துப்போதல், அவயவங்கள் சுருங்குதல், சரீர கதகதப்பு, சிணுக்கிருமல், எரிச்சல், வாய் நாற்றம், கெர்ப்பாசய சம்பந்தமான கோளாருகள், மலச்சிக்கல், வயிற்றுவலி, ரத்தக் குறைவால் சூதகம் தடைபடல், உஷ்ண மிகுதியாலும், பலஹீனத்தாலும் வீட்டு விலக்கம் காணல் முதலான பல சங்கடங்களையும் போக்கி சற்புத்திர சந்தானத்தை அளிக்கும். சுருக்கிச் சொல்லில் இந்த லேகியத்தை விடாமல் 40-நாட்கள் சேவித்தால், கிழவன்—குமரனாவான், கிழவி குமரியாவாள், மலடிக்குப் பிள்ளைப்பேறுண்டாகும். ஸ்திரீ புருஷர்களுக்கு ஓர்வித ஒற்றுமையும், இன்பத்தையும் விருத்தி செய்யும்.

20-நாள் சேவிக்கக்கூடிய 1-டப்பி லேகியம் ரூபா 2—0—0 தபால் சார்ஜ் 0—8—0. (இரண்டு டப்பி லேக்கியம் ஒரே காலத்தில் வரவழைத்தால் தபால் சார்ஜ் இனும்).

---

[illegible]. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

# மதன மனோகர லேகியம்

இந்த திவ்விய ஒளஷதம் ஸ்திரீ, புருஷர்களுக்கு அநந்தம் நன்மையை அளிக்க வல்லது. பலஹீனத்தை மாற்றி பலத்தையும், அஜீர்ணத்தைப் போக்கி ஜீர்ண சக்தியையும், நபும்ஸகத்தைப் போக்கி புருஷஸத்துவத்தையும், சோம்பலை நீக்கி சுறுசுறுப்பையும், விருத்தாப்பியத்தை மாற்றி வாலிபத்தையும், நிச்சயமாயும் நிரந்தரமாயும் அளிக்கவல்ல தெய்வீக ஒளஷதம் இது ஒன்றே. உஷ்ண மிகுதியால் தாதுக்கள் பலமிழந்து போவதால் உண்டாகும் சர்வ ரோகங்களையும் கண்டிப்பதற்கு இதைவிட சிறந்த ஒளஷதம் எங்கு தேடினும் கிடைப்பது அரிது. துரித ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம் என்னும் தன்னையுமறியாமல் பல வகையிலும் வீரிய நஷ்டமாகும் துக்ககரமான கொடிய வியாதிக்கு இந்த லேகியந்தான் குறிதவறாத பாணம். வெள்ளை, நீர்சுருக்கு, நீரிழிவு, மதுமேகம் முதலிய நீர்தாரை சம்பந்தமான வியாதிகளை நிர்மூலப் படுத்தும். சிறு பிராயத்தில், ஜீவ நரம்புகளை. பல வகையிலும் சின்னாபின்னப் படுத்தி, அதன் பயனாக ஜீவ நரம்புகள் தளர்ந்திருப்பினும், இராப்பகலில்லாமல் சிற்றின்பம் துய்த்தலால் உண்டான பலஹீனமாயினும் சரியே இந்த லேகியத்தை எண்ணிக்கையாக 40-நாட்கள் சேவித்தால், தளர்ந்த நரம்புக் கூடுகள் பலப்பட்டு, புஷ்டி அடையும். மூளைக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியைக் கொடுத்து தாதுவைக் கெட்டிப்படுத்தும்.

புருஷர்களின் உஷ்ணம் ஸ்திரீகளுக்குப் பற்றுவதால், ஸ்திரீகள் நாளுக்கு நாள் இளைத்துப்போதல், அவயவங்கள் சுருங்குதல், சரீர கதகதப்பு, சிணுக்கிருமல், எரிச்சல், வாய் நாற்றம், கெர்ப்பாசய சம்பந்தமான கோளாறுகள், மலச்சிக்கல், வயிற்றுவலி, ரத்தக் குறைவால் சூதகம் தடைபடல், உஷ்ண மிகுதியாலும், பலஹீனத்தாலும் வீட்டு விலக்கம் காணல் முதலான பல சங்கடங்களையும் போக்கி சற்புத்திர சந்தானத்தை அளிக்கும். சுருக்கிச் சொல்லில் இந்த லேகியத்தை விடாமல் 40-நாட்கள் சேவித்தால், கிழவன்—குமரனாவான், கிழவி குமரியாவாள், மலடிக்குப் பிள்ளைப்பேறுண்டாகும். ஸ்திரீ புருஷர்களுக்கு ஓர்வித ஒற்றுமையும், இன்பத்தையும் விருத்தி செய்யும்.

20-நாள் சேவிக்கக்கூடிய 1-டப்பி லேகியம் ரூபா 2—0—0 தபால் சார்ஜ் 0—8—0. (இரண்டு டப்பி லேக்கியம் ஒரே காலத்தில் வரவழைத்தால் தபால் சார்ஜ் இனாம்).

---

இ. ராஜகோபால் முதலியார், 802, தங்கசாலைத் தெரு, சென்னை.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

FEB 1928
MADRAS

கமலம் - 2. } சென்னை: பிரபவஞூ மாசிமீ 1உ } இதழ்-23.
Vol. II. } 1928-ம்ஞூ பிப்ரவரிமீ 13உ } No. 23.

## ஆநந்த தர்சனம்

"நித்யாநந்த மயீ" என்று மீனாம்பிகையை ஸ்ரீமத் சங்கராசாரியர் ஸ்தோத்திரம் செய்திருக்கின்றார். நித்யமான ஆநந்த மயமா யிருப்பவள் மீனாக்ஷியம்மை யென்பது சிவாவதாரமாகிய பகவான் சங்கராசாரியரின் கொள்கை. மீன்கள் ஸ்திரீகளின் நேத்திரங்களுக்கு உவமையிடப் படுகின்றன. கண்ணின் உருவம் மீனைப்போல் இருக்கிறதென்பது ஸாதாரண அர்த்தமாயினும், வாள், தாமலா முதலியவற்றை உபமானங்களாகக் கொள்ளாமல் மீனை யுபமானமாகக் கொண்டதற்கு ஒரு காரண மிருக்க வேண்டும். சாமான்ய ஸ்திரீயின் கண்களை நீலோத்பலமென்றும், தாமரையென்றும் கூறலாமே யன்றி, ஸர்வலோக ஜநநியாகிய பார்வதியின் கண்களை மீனுக்கே உபமேயமாகக் கொள்ளவேண்டும். ஒரு ஆற்றின் கரையிலிருந்து தெளிந்த ஜலத்தைப் பார்த்தோமானால், பெரிதாகிய தாய் மீன் முந்தியும், அதன் பின்னால் சிறியவைகளான அநேக குட்டி மீன்களும் போய்க்கொண்டிருக்கும். பசியால் பீடிக்கப்பட்ட குட்டி மீன்களை ஒரு முறை தாய் மீன் சற்றுத் திரும்பி நோக்கினால் உடனே அவைகளின் பசி யடங்கும். இம்மாதிரியே அம்பிகையின் பாதமே கதியென்று ஸ்துதி செய்யும் பக்தகோடிகளான புத்திரர்களை லோகநாயகி ஒரு முறை கடைக் கண்ணால் பார்த்தால் க்ஷணமே அவர்களைப் பீடித்துக்கொண்டிருந்த கர்ம பந்தங்கள் விலகி முக்தி

☞ இப்பத்திரிகையின் வருஷ சந்தாவான ரூபா ஒன்றை உடனே முன்பணமாகச் செலுத்துவோர்க்குக் கிடைக்கும் லாபங்களை இப்பத்திரிகையை முற்றிலும் படிப்பதால் அறிந்துகொள்ளலாம்.

யுண்டாகும். அதனால் நித்யாநந்தத்தைப் பெறலாம்: இவ்வுண்மையை யறிந்த மகான் மீனாம்பிகையை 'நித்யாநந்த மயீ' என்றார். உலகத்தில் பணத்தை விரும்புவோன் பணக்காரனிடம் சென்று யாசிப்பான். அதுபோல் உண்மையான ஆநந்தத்தை யடைய இச்சிப்போன் நித்யாநந்த மயீயாகிய மீனாம்பிகையின் கிருபைக்குப் பாத்திரனாக வேண்டும். ஆதலின் நித்யமான சுகத்தை விரும்பும் நாம் ஜகதீசுவரியை ஸதா ஸ்தோத்திரம் செய்யக் கடவோம்.

***

"கனவிற் கண்ட பணம் கைக்குதவாது" அதுபோல் கர்மங்கள் செய்வதற்கென்றேற்பட்ட இச்சரீரம் நித்யமான சுகத்தைத் தாராது. உலகத்தில் எது பார்க்கப்படுகிறதோ அது அழிந்துபோகும். தோற்ற முண்டாயின் அழிவும் உண்டு. இவ்வுண்மையைச் செவ்வையாய் அறிந்து நமது ஊன்கண்ணை நம்பாமல் அந்தர்திருஷ்டியால் ஆத்மாவின் இருப்பையறிந்து, அதன் குணத்தை விசாரித்து, அது என்றும் அழியாதது — ஆநந்தமயம் என்பதை ஸ்வானுபோகத்தில் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி நித்ய வஸ்துவை யறிவதையே ஞான மென்கிறோம்.

***

"அவித்தையானது செழிப்பான நிலம்போல." அந்த நிலத்திலிருந்தும் ஸகல துஷ்கிருத்தியங்களும் முளைத்து விருத்தியாகின்றன. (1) அநித்யமான சரீரத்தை நித்யமென்று நினைப்பதும், (2) அசுத்தத்தை சுத்தமென்று கொள்வதும், (3) துக்கத்தை சுகமென்றெண்ணுவதும், (4) இல்லாததை உள்ளதென்று பிரமிப்பதும் அவித்தையாகும். இந்நான்கினால் உலகத்தில் ஸகல கோர கிருத்யங்களும் செய்யப்படுகின்றன. தன்னயம், பொறாமை, துராசை, முதலியன இந்த அவித்தையா லுண்டாகின்றன. சில நிமிஷங்கள் வரை இன்பமாய்த் தோன்றி, பின் ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்க்குமிடத்து, வெளியிற் கூறுவதற்கும் நாணமாய் அருவருப்பை விளைக்கும் விஷய சுகம் மனிதனுடைய அஞ்ஞானத்தை விருத்தி செய்து முக்தி வழியைத் தேடாமல் தடுக்கிறது.

***

"கருமங்கள் இரண்டு வகை." புண்ய கர்மம், பாப கர்மம்; இவ்விரண்டு கர்மங்களிற் சில மனதாலும், சில வாக்காலும், சில காயத்தாலும் செய்யப்படுகின்றன. எந்தக் காரியம் செய்தாலும் அது முதலில் மனதில் தோன்றவேண்டும். அநேகமாய் மனிதர்கள் அப்போதப்போது தங்களுடைய மனதில் தோன்றுவதையே வார்த்தையாக மொழிகின்றனர். ஆதலின் வார்த்தைகள் எண்ணங்கள் என்ற வகுப்பில் அடங்கிவிடும். சூக்ஷ்மமான மனதில் தோன்றும் எண்ணங்களை யார் அறிய முடியும்? அவை வார்த்தைகளாக மாறினால் செவியால் அறியலாம். செய்கைகளாயின் கண்ணாற் பார்க்கலாம். ஒரு பிரதிமையைச் செய்வோன் அதன் உருவ நிதானத்தையும் அளவையும் மனதில் தியானித்துக் கொள்கிறான். மனதில் அப்பிரதிமையைச் செய்து ஒருவித நிர்ணயத்துடன் முடித்த பின்புதான், வெளியே அது செய்யப்பட்டு எல்லோருடைய கண்களுக்கும் தெரிகிறது. ஆதலின் மனதை அவித்தையின் வசமாக்காது சுத்தப்படுத்தினால் கருமங்கள் புண்யகரமா யிருக்

169833



கும். சுத்த மனத்தினர் பேசும் வார்த்தைகள் இனிமையா யிருக்கும். செய்யும் காரியங்கள் ஸந்தோஷத்தை விளைவிக்கும்.

***

"ஷட்குணம்" என்பது ஐசுவரியம், கீர்த்தி, வீரியம், ஸம்பத்து, வைராக்கியம் ஆகிய இவைகளே. (1) ஈசுவரானுக்கிரகம் எந்த மனுஷ்யனுக்குப் பூர்ணமா யிருக்கிறதோ அவன் எடுத்த காரியம் வெகு எளிதாயும் இனிதாயும் முடியும். ஈசுவரப் பிரஸாதமே ஐச்வரிய மாகும். (2) கீர்த்தியானது லோகோபகாரமான ஸத்கருமங்களால் லபிக்கத் தக்கது. இதை யடையத்தக்கவன் தயாள ஹிருதயனே. எவனுக்குப் பிராணிகளிடம் கருணை யில்லையோ அவனுக்குக் கியாதி உண்டாகாது. எவனுக்கு ஸகல ஜனங்களிடமும் துவேஷம் இருக்கிறதோ அவன் அபகீர்த்தியை யடைவான். (3) வீரியம் என்பது இங்கு பலத்தைமட்டும் குறிக்கும். இது இரண்டு வகை: ஒன்று சரீர பலம்; மற்றொன்று மனோபலம். எவ்விதமான கஷ்டத்தையும் ஏற்று அநுபவிக்கும் வன்மையுள்ளவனே வீரியவான். அரோகதிட சரீரமில்லாத மனுஷ்யன் பிரேத ஸமானனாவான். பிறந்தும் பிரேதமெனத்தக்கவன் பலஹீனனே. மலைபோல் பருத்த தேகம் இருந்தாலும், இரத்தம், மாம்ஸம், என்பு முதலியன அளவுக்கு மிஞ்சி வளர்ந்தாலும் திருட மனஸ் இல்லையேல் எவ்வித கருமமும் நிறைவேறாது. இன்ன காரியத்தைச் செய்துதான் முடிக்கவேண்டுமென்ற தீர்மானமும், அவ்விதமே செய்து முடிக்கும் ஆற்றலு முள்ளவனே வீரியவான். (4) ஸம்பத் என்பது பொருளையும் சுகமனுபவிப்பதற்கேதுவான மற்ற வஸ்துக்களையும் குறிக்கும். ஸகல ஸம்பத்துகளு முள்ளவன் இவ்வுலகத்தில் எல்லா ஸுகங்களையும் அநுபவிப்பதோடு, தனது சுற்றத்தார், நண்பர், அதிதிகள் முதலிய ஸகல ஜனங்களுக்கும் உபகாரம் செய்து, இறந்தபின் ஸ்வர்க்காதி போகங்களையும் அனுபவிப்பான். (5) வைராக்கியத்தால் விளைவது ஞானமாகும். ஞானம் என்பது பகுத்தறியுந் தன்மை; நித்திரை செய்வோன் ஸுகஸம்பாஷணையால் அடையக்கூடிய ஆநந்தத்தை யடையாமல் ஏமாந்து போவதுபோல் ஞானமில்லாதவன் எத்தனை ஸுகங்கள் இருக்கப் பெற்றாலும் அவற்றை யனுபவிக்கிறோமென்கிற அறிவில்லாமல் மண்ணையும் கல்லையும் போலிருக்கிறான். ஆதலின் ஞானம் பிரதானம். உத்தமமான ஞானம் வைராக்கிய மொன்றாலேயே ஸித்திக்கும். வைராக்கியத்தாலே துக்கம் ஸமனமாவதால் அந்த குணம் சிரேஷ்டமுள்ளதாகிறது. ஆகவே, மேலே கூறிய ஷட்குணங்களும் பொருந்தியவனே ஸர்வோத்தமன்.

***

"பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம்" இவைகளில் இருக்கும் தோஷங்களை யறியவேண்டும். (1) பிறப்பில் கர்ப்பவாஸம் என்னும் தோஷம் இருக்கிறது. சிசுவானது தாயினுடைய உதரத்தில் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. (2) மரண காலத்தில் ஜீவன் கூட்டை விட்டுப் பிரியும்போது வெகு அவஸ்தைப் படுகிறது. இதற்கே மரணாவஸ்தை யென்கிறோம். ஸகல அவஸ்தைகளிலும் அதிகமானது மரணாவஸ்தை; இதுதான் இறப்பிலுள்ள தோஷம். (3) இனி மூப்பிலிருக்கும் தோஷங்களாவன:— ஸ்வ ஜனங்கள் செய்யும் ஏளனம், இன்பம் அநுபவிக்க முடியாத அசக்தி,

வலிவு இன்மை, விருப்ப மிருந்தும் முடியாமை முதலியன. (4) நோயி லுள்ள தோஷங்களாவன:—பசியின்மை, நாவரக்ஷி, சரீர பலக்குறைவு முதலியன. (5) துக்கத்தால் எந்தக் காரியமும் நடைபெறுகிற தில்லை. இந்த ஜன்ம மேதுக்கு என்ற கேள்வி அடிக்கடி யுண்டாகிறது. முகத்தில் ஒளி மழுங்கி மனதில் இருளடைந்து ஆவி சோர்கின்றது. எனவே, மேற்கூறிய பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம் முதலியன நம்மை அணுகாதபடி ஸதா ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கக் கடவோம்.

***

“மதத் துவேஷம்” இது ஒரு தப்பு வழி, மனிதர்களிடத்தில் மதத் துவேஷம் கொண்டாடுவது அவிவேகமே. யாராகட்டும், தங்கள் மதத்தை உயர்வாகவும் பிறர் மதத்தைத் தாழ்வாகவும் பேசுவது வழக்கம். இதனால் வரும் சுகம் என்ன ? ஞானம் உண்டாயிற்ற ? மோக்ஷம் கிட்டியதா ? நற்பெயர் கிடைத்ததா ? ஸன்மார்க்க ஸகவாஸம் லபித்ததா ? மனம் சாந்தி எய்தியதா ? ஒன்றுமில்லை. நாம் நமது மதத்தின் கிரந்தத்தையாவது, அயலார் மதத்தின் கிரந்தத்தையாவது குறைவறப் பரிசோதித்திருக்கிறோமா ? ஒன்றும் அறியாமல் இகழ்வதும், ஆக்ஷேபிப்பதும் மதியீனமாகும். யார் யாருக்கு எவ்விதமாய் பகவானை ஸ்தோத்திரம் செய்ய இஷ்டமோ அவரவர்கள் அந்தப்படி செய்து தங்கள் ஆத்மாவைத் திருப்தி செய்து கொள்ளட்டும். நாலுபேர் ஒப்பக்கூடிய நீதி வாக்யங்களைச் சொல்லட்டும். அது ஸந்தோஷமான காரியம். அப்படிக்கின்றி நமது அற்பாயுளைக்கொண்டு மத நிந்தனைகளைக் கண்டபடி வழங்கி மகா பாவியாவதிற் பயனென்ன ? மத வைரத்தை விட்டொழித்து மனிதர்கள் ஒருவருக்கொருவர் நேசமா யிருத்தலே க்ஷேமகரம்.

***

“மதத்தின் பிரிவுகள்” ஒரு உன்னதமான மலையிலிருந்து புறப்படும் நதி அம்மலையினின்று பாறை வழியாய் இறங்கும்போது பளபளவென்று பிரகாசிக்கிறது. நீர்த்துளிகளெல்லாம் இனி பிரிவதில்லை யென்ற கட்டுப்பாட்டுடன் ஒரே மயமாய்க் காணப்படுகின்றன. பின்னர் பூமியில் விழுந்த க்ஷணம் பற்பல பிரிவுகளாய்ப் பிரிந்து போகின்றன. மறுபடி அக்கிளைகள் சேருவதில்லை. இதைப்போல் ஒரே கடவுளை வணங்கும் பிரஜைகளெல்லாம் வெவ்வேறு மதஸ்தராயும், வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டவர்களாயும் பிரிந்து போயினர். பெரிய நதிகளெல்லாம் முடிவில் ஸாகரத்தில் ஒன்றாய்க் கலப்பது போல், ஸகல மதங்களும் இறுதியில் வேதாந்தமாகிய பெருங் கடலில் கலந்து விடுகின்றன.

தலைபலவாய்ப் பெயர்பலவா நதிகளெல்லாஞ்,
சாகரத்தி லொருநீராந் தன்மைபோலப்,
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ்சொல்லப்,
பட்டதொரு பொருளினையாம் பணிதல்செய்வாம்.

---

அன்புள்ள மனது என்ன ஒரு சொட்டுச் சொல்லு சொல்லி யிருப்பினும் அதை யெண்ணாது விரைந்து செல்ல வைக்கிறது. அன்பு இல்லாத நெஞ்சு எத்தனைப் பிரியங் காட்டிக் கூப்பிடினும் செல்ல மனம் வருகிறதா ?

ஆநந்த குணபோதினி
பிரபவ ஹூ மாசி மீ 1 உ

# இறைவனை உணர்ந்து தொழுதல்.

## ஒரு ஆராய்ச்சி.

ஆணென்றும், பெண்ணென்றும் கடவுளை இரண்டு கலைகளாக வழங்குதல் புராதன தேசங்கள் யாவற்றிலுமே யுண்டு. சில இடங்களில் சக்தியே பிரதானமென்று கொள்கை யிருந்தது. உதாரணமாக கிறிஸ்துநாதரின் மாதாவுக்கு ‘மாரி’ யென்று பெயர். (இதனை ஆங்கிலேயர் ‘மேரி’ என்று பிழையாக உச்சரிக்கிறார்கள்.) இந்த ‘மாரி’ யென்னும் பெயர் பாலஸ்தின தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்குமுன் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கி வந்தது. அங்கு மாத்திரமன்று; அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல் வரையிலுமுள்ள நில முழுவதிலும் மிகவும் பழமைக் காலங்களிலே ‘மாரி’ என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தாநெல் (இங்கிலீஷ்—டார்டனெல்ஸ்) ஜலசந்திக்கும் இடையே (ஸங்கரியுஸ்—என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும்) சங்கரி நதிக்கரையில் முற்காலத்திலே, ‘பிஸ்கேனு’ (Piscenus) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கே பெருங் கோயிலொன்று கட்டி ‘மாரியம்மா’ என்ற தெய்வத்தை வணங்கினார்கள். அதற்கருகே ‘மரியாந்தினி’ என்றோர் நகரிருந்தது இந்த மாரியை உலகத்தின் தாயென்றும், எல்லா தேவர்களுக்கும் ஆதாரமான மஹா சக்தி யென்றும், அந்த நாட்டிலும் அதன் சுற்று வட்டங்களிலும் இருந்தோர் கொண்டாடினார்நள்.

‘இயற்கைத் தெய்வமே’ மஹா சக்தி என்று சொல்லப்படுகிறது; அதனையே பூர்வ காலத்தில் பல்வேறு தேசத்தார் பல பெயர் கூறி ‘ஈஸிஸ்’ (ஈசி) என்றும், மாரி என்றும், துர்க்கை யென்றும் வணங்கி வந்தார்கள். அதனை அரசர் வீர தேவதையாகவும், சில இடங்களில் ஸம்ஹார தேவதையாகவும் கொண்டாடினர். பொது

---

ஊருக்குச் சென்றிருந்து திரும்புவதில் தன் வீட்டினரது ஆவலுடன் கூடிய வரவேற்பு மிக உன்னதமும் முதல்தரமுமானது. சாதாரணமாய் வெளியிற் சென்றிருந்து திரும்பினால் அந்த வரவேற்பு இரண்டாந் தரமானது.

ஜனங்கள் அரசர் வழியை அநுஸரித்தனர். யோகிகளும், ஞானிகளும், கவிகளும் அதனைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் ஆதியான 'மோனவெளி' யென்று போற்றினர். எல்லாம் ஒன்றுதான். "வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருளை" ஆணென்று சொன்னாலென்ன, பெண்ணென்று சொன்னாலென்ன? தாயென்றாலென்ன?—தந்தை யென்றாலென்ன? எனினும் தெய்வத்தைக் கருதும்போது, "**வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருள்**" என்று மாத்திரம் நினைப்பது பிரயோஜனமில்லை.

* * *

"**சுத்த அறிவே சிவம்**" என்பர். வாஸ்தவந்தான்; இந்த உலகம் என்னது? இதுவும் சிவமே. அறிவுக்கெட்டாதது, பெயர் சொல்ல முடியாதது. ஆதலால் அந்தப் பொருளுக்கு வெறுமே **'தத்'** (அது) என்று பெயர் காட்டி வேத ரிஷிகள் போற்றினர். பின் அதையே **அதிதி** என்றும், **விஷ்ணு** வென்றும், **ருத்ர** னென்றும், ப்ரம்மணஸ்பதி யென்றும், **இந்திரன், வாயு, ஸூர்யன், அக்நி, வருணன், பூமி, சிந்து**—என்றும் பல வகைகளிலே வணங்கினார்கள்.

தெய்வம் உண்டென்பதை எப்படி யறிந்தோம்? உலக மிருப்பதாலே யறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன் வடிவம். **உலகமும் தெய்வந்தான்; உலகத்து செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே.** உலகத்தின் நடைகளிலும் விதிகளிலும் **தெய்வத்தை உணரவேண்டும்.** இந்த வழி யறியாதோர் உலகத்துக்குப் பயப்படுகிறார்கள். இவ்வுலகத்தை விட்டுத் தப்பினால் இன்பமுண்டாகுமென்று நினைக்கிறார்கள். இந்நினைவிலிருந்து பல்வேறு பிழைகளும் தொல்லைகளும் ஏமாற்றங்களும் விளைகின்றன.

இந்த உலகம் நாராயணனுடைய லீலை. அவன் தனது சக்தியுடன் விளையாடும் விளையாட்டு. சக்தி மார்க்கத்தில் இவ்வுலகத்து ஞானம் அதிகப்படவேண்டும். பராசக்தி தெய்வம். ஆத்ம ஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்த்ரமும் அவளுடைய வேதந்தான். பௌதிக சாஸ்த்ரம் (ஸயன்ஸ்) சக்தி தர்மத்துக்கு முதலாவது வேதம், வேதாரம்பம். **ஸ்தூலத்தை யறிந்தாலொழிய ஸூக்ஷ்மத்தை நன்கு தெரிந்துகொள்ள முடியாது.** இஹலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் "ஆத்ம சாஸ்திரம் பொய்". உண்மையான ஆத்ம சாஸ்த்ரம் இஹலோக

சிலர் விரோதித்துக் கொண்டும் அன்பு தோய்ந்த மனத்தினராயிருக்க, வேறு சிலரோ நெருங்கிப் பழகினும் உதட்டுறவும் உட்பகையுமாய் முடிகின்றனர். ஏனோ இது?



ஞானத்தை வளர்க்கும். வான சாஸ்த்ர மில்லாத நாட்டில் ஞான வாசிட்டம் பயன்தரமாட்டாது. எந்த மதமும் ஆரம்பத்தில் லௌகிக ஞானத்தை இகழவில்லை. எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு எப்போதும் சிவனைத் தியானம் செய்துகொண்டிருந்தால், சிவன் கோயில் எதுவும் கட்டியிருக்க முடியாது. ஒரு வேலையும் நடக்காது. கண்ணைத் திறந்து உலக காரியங்கள் செய்துகொண்டே சிவனை (கடவுளை) யறிய முயல்வதுதான் சரியான ஞானம். எல்லா மதங்களிலும் இதுதான் உண்மை. "**உள்ளத்துறவுடன் இன்பங்களை நுகர்ந்திடுக**" என்று ஈசோப நிஷத்து கூறுகின்றது.

ஆனால், கிறிஸ்து மதம், மகமதிய மதம், பௌத்தம் முதலிய புறமதங்களிலும், நமது தேசத்து மதங்கள் சிலவற்றிலும் பிற்காலத்துப் பாதிரிகளும், பக்கிரிகளும், பிக்ஷுக்களும், ஸந்யாஸிகளும் ஒரே முழக்கமாக லௌகிக ஞானத்தையும், லௌகிக அனுபவத்தையும், பழிக்கத் தொடங்கிவிட்டார்கள். சக்தி தெய்வம்—சக்தி தர்மம் இவ்வகையான வார்த்தைக்கே இடம் கொடுக்காது. ஏன்?

எதையும் துறக்கும்படி சக்தி தர்மம் சொல்லவில்லை; எதிலும் இறைவனைக் கண்டு போற்றும்படி அது சொல்லுகிறது. இகலோக இன்பங்களைக் கேவலமென்று அது சொல்லவில்லை; எவ்வகை இன்பத்துள்ளும் தெய்வச் சாயலை நேர்பட அறிந்து பரவசம் பெறு என்றே அது போதிக்கின்றது. வெறுமனே ஸாதுவாக இரு என்று அது சொல்லவில்லை; கையில் வீரவாளுடனும், நெஞ்சில் வீர நினைவுகளுடனும், ஆனால் திருஷ்டி நோக்கத்திலே சாந்தமே ததும்பிய கருணை விழிகளுடனும் அறத்தைக் காத்து நில் என்று ஆக்ஞாபிக்கின்றது. இவ்வுலகத் துறந்து மாண்டபின் தான் கடவுள் தரிசனம் என்று அது சொல்லவில்லை; இவ் வுலகிலேயே இறைவனைக் கண்டு வணங்கு என்று உபதேசிக்கின்றது.

பராசக்தியை (அதாவது தெய்வ சக்தியை) முதலாவது இவ்வுலகத்திலே கண்டு வணங்குதல் வேண்டும். நக்ஷத்திரங்களெல்லாம் அந்த சக்தியின் விழிகள்; தீயும் காற்றும் அந்த சக்தியின் வேகம்; மண் அந்த சக்தியினுடைய திருமேனி; இருப்பதெல்லாம் அந்த சக்தியினுடைய கலை தான். அந்த சக்தியை (இறைவனை) இஹத்திலேயே கண்டு போற்றி நலம் பெற வேண்டும்.

* * *

பூமண்டலத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு காலங்களிலே, பிறந்து, மனுஷ்ய ஜாதியாருக்கு ஞானதானம் செய்த சில

சிலர் குணம் சதாகாலமும் சிடு சிடு கொடு கொடு வென்றே யிருக்கிறது. ஸாத்மீகமே வடிவான குழந்தைகளிடமும் இவர்களின் திவ்ய குணம் தாண்டவமாடிவிடுகிறது. கடவுளது பலவித பிறவிகளில் இது ஒரு தினுசு!

பெரியோர்களின் வசனங்களை, மேலே சொல்லியிருப்பனவற்றைத் தெளிவுபடுத்துதற் பொருட்டாக இங்கு கோர்த்தெழுதுகிறோம்.

தெலுங்கு தேசத்து ஞானியாகிய **வேமன்ன கவி** சொல்லுகிறார் :—

—"கல்லைக் குவித்துப் பெரிய கோயில்கள் என் கட்டுகிறீர்கள்? தெய்வம் உங்களுக்குள்ளே இருப்பதை யறியாமல், வீணாக என் தொல்லைப்படுகிறீர்கள் ?"

**ஸ்வாமி விவேகாநந்தர்** :—ஒவ்வொரு மனிதனுடைய அறிவிலும், பரமாத்மா மறைந்து நிற்கிறது. வெளியுலகத்தையும், உள்ளுலகத்தையும் வசப்படுத்தி, உள்ளே மறைந்திருக்கும் தெய்வத்தை வெளி முகமாகக் காண்பதே—வெளிப் படுத்துவதே நாம் செய்ய வேண்டிய காரியம். செய்கை, அன்பு, யோகம், ஞானம் இவற்றினால் அந்தப் பொருளை யடைந்து விடுதலை பெற்று நில்லுங்கள். தர்ம முழுதும் இஃதேயாம். மற்றப்படி மதங்கள், கொள்கைகள், கிரியைகள், சாஸ்திரங்கள், கோயில்கள், ஆசாரங்கள்—எல்லாம், இரண்டாம் பக்ஷமாகக் கருதத் தக்க உபகரணங்களே யன்றி வேறில்லை."

அமெரிக்கா தேசத்து மஹா வித்வானும் ஞானியுமாகிய **எமர்ஸன்** சொல்லுகிறார்:—

—"எவன் வந்தாலும் சரி, அவனிடமுள்ள தெய்வத்தை நான் பார்ப்பதற்குத் தடை யுண்டாகிறது. ஒவ்வொருவனும் தன்னுள்ளே யிருக்கும் திருக்கோயிலின் கதவுகளை மூடிவைத்துவிட்டு, மற்றொருவனுடைய தெய்வத்தையும், மற்றொருவனுக்கு வேறொருவன் சொல்லிய தெய்வத்தையும், பற்றிய பொய்க் கதைகளை என்னிடம் சொல்ல வருகிறான்."

"**த்ஸென்–த்ஸே–த்ஸங்–யுங்**" என்ற சீனதேசத்து ஞானி சொல்லுகிறார்:—

—"பழய காலத்திலிருந்து வந்ததென்று கருதி ஒன்றை உண்மையென்பதாக நிச்சயித்து விடலாகாது. உண்மை இதற்கு நேர்மாறானது. மனிதஜாதி நாளாக நாளாக வாழ்க்கையின் உண்மை விதியை நன்றாகத் தெரிந்துகொள்ளுகிறது. நமது பாட்டன்மாரும் பூட்டன்மாரும் நம்பிய விஷயங்களையே நாமும் நம்பவேண்டுமென்று சொல்லுதல்—குழந்தையாக இருக்கும்போது தைத்த உடுப்புகளையே, பெரியவனானபோதும் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்வதற்கொப்பாகும்."

மேற்கூறிய பண்டிதரின் சிஷ்யரும், நல்ல ஞானியுமாகிய '**தோரோ**' சொல்லுகிறார்.

—"என்ன ஆச்சரியம்! உண்மையின் பிரகாஸங்களில் நமது காலத்திற்குப் பயன்படாத பழையனவற்றை உலகம் ஒப்புக்கொள்ளுகிறது. இப்போது புதிய ஞானிகள் கண்டு சொல்லும் உண்மைகளை வீணாக மதிக்கிறது. சில சமயங்களில் பகைக்கவும் செய்கிறது. என்ன ஆச்சரியம்!"



**ராமகிருஷ்ண பரமஹம்ஸர்** :—

—"ஆச்சரிய சித்திகள் காட்டுவதாகச் சொல்லும் மனிதர் இருக்குமிடத்துக்குப் போகவேண்டாம். அவர்கள் உண்மை நெறியிலிருந்து தவறிவிட்டார்கள்."

ருஷியா தேசத்து ஞானியாகிய "**டால்ஸ்டாய்**" சொல்வதாவது :—

—"நமது மதக்கொள்கையில் பயனில்லாதது, ஜடமாவது, புறவடிவமாவது, தெளிவில்லாதது, நிச்சயமில்லாதது, இவற்றை நாம் பயமில்லாமல் தள்ளிவிடவேண்டும். அதன் ஸாரத்தை மாத்திரம் கொள்ளவேண்டும். எத்தனைக்கெத்தனை இந்த ஸாரத்தை நாம் சுத்தப்படுத்துகிறோமோ அத்தனைக்கத்தனை ஜகத்தின் உண்மைவிதி நமக்குத் தென்படும்.'

## எது தெய்வம்?

'**ஹேர்மேஸ்**' என்ற புராதன 'மிசிர' (ஈஜிப்டு) தேசத்து ஞானி சொல்லுகிறார் :—

—"உடலில்லாதது, தோற்றமில்லாதது, வடிவமற்றது, ஜடமில்லாதது, நமது புலன்களுக்கு எட்டாதது—இது தெய்வம்."

**ராமகிருஷ்ண பரமஹம்ஸர்** :—"ஈசனே ஒளியாம். எல்லாப் பொருள்களிலும் திரைக்குள் மறைந்ததுபோல் மறைந்து நிற்கும் ஒளியே தெய்வம்."

**பட்டினத்துப் பிள்ளை** :—"எட்டுத் திசையும் பதினாறு கோணமும், எங்குமொன்றாய், முட்டித் ததும்பி முளைத்தோங்கும் ஜோதி."

**தாயுமானவர்** :—"சுத்த அறிவே சிவம்."

**ரிக்வேதம்** :—"உண்மைப் பொருள் ஒன்று, அதனைப் புலவோர் பலவாறு சொல்லுகிறார்கள்."

**நம்மாழ்வார்** :—"திடவிசும்பு, எரி, வளி, நீர்நிலம், இவை மிசைப்படர் பொருள் முழுவதும் ஆய் அவையவை தோறும், உடல் மிசை உயிரெனக் கரந்துளன்."

**ஹேர்மேஸ்** :—"தெய்வம் எது ?—ஜகத்தின் உயிர்."

---

*சிலர் வயது முதிர்ந்த நிலைமையிலும் குழந்தைப் புத்தி கொண்டோரா யிருக்கின்றனர். சிலர் பார்வையிற் சிறியவராய்க் காணினும் அவர்கள் உள்ளம் பெரும் பெரும் குணங்கள் நிறைந்ததா யிருக்கிறது. இதன் காரணமென்னமோ ?—*

முடிவுரை

எனவே, உலகின்கண்ணுள்ள எல்லா மதங்களும் உண்மை தான். ஒரு மதமும் முழு உண்மையன்று. இடைக் கலப்புகள் அநந்தம் உண்டு. ஸாரத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். ஸாரமற்றதைப் பிறர் கூடை கூடையாய் வாரி வைத்துக்கொண்டு பழிக்கும் தூஷணைகளுக்கு ஒருபோதும் செவி சாய்க்கவேண்டாம். உண்மை கண்டு அறியும் உன் தொழில் ஒன்றிலேயே நீ நில். மதப் பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்துவிடக்கூடாது. எல்லா மதஸ்தரும் "ஒரே தெய்வத்தை"த் தான் வணங்குகிறார்கள். லௌகிக விஷயங்களைப் போலவே மத விஷயங்களிலும், ஒப்பு, உடன்பிறப்பு, விடுதலை-மூன்றும் பாராட்டப்பட வேண்டும்.

(1) ஒப்பு:—யாவற்றையும் ஸமமாகக் கருதல். உயர்வாகவும், தாழ்வாகவும் நோக்கும் வித்தியாஸ திருஷ்டி இல்லாமை. ஸமத்துவ உணர்ச்சி பெருகி நிற்கும் பான்மை.

(2) உடன் பிறப்பு:—யாவரையும் தம் ஸகோதரமாகப் பாவித்து எங்கும் அன்பு மயமாதல்.

(3) விடுதலை:—லௌகிகத்திலே இதன் பொருள்:—அடிமை நிலையை வெறுத்து சுதந்தர ஆக்கத்தை நாடி விடுதலை பெற்று வாழ்தல். (மத) வைதிகத்திலே இதன் பொருள்:—இறைவனை உணர்ந்து தொழுது முக்தி நிலை யெய்துதலாம்.


## தர்மத்தை நம்பியிரு

ஏமாற்றம், ஸஞ்சலம், அவமானம் அநியா நிந்தை, அலக்ஷியம் இவற்றால் வெந்து எரிந்து கொண்டிருக்கும் மாந்தரது உள்ளத்து அக்கினியை, அவற்றை விளைத்தோர்கள் அதன் பயனாகப்படும் சோதனைகளிலிருந்தும் விடுகிற கண்ணீரால் அணைத்து ஆறுதல்படுத்த அதற்குரிய வேளையை ஈசன் எதிர்பார்த்திருக்கிறார். ஆகவே நீ தர்மத்தை நம்பி ஸாந்தப்படு. அந்த உனது ஸாந்தம் உண்மையான அக்கினியைவிட அதிக ஜ்வாலையை வீசி நிற்கும்.

அதிகார பதவியிலுள்ளோர் வேலைக்காரர்களிடம் அதிக அன்பு கொண்டிருக்கினும் அதை அவர்கள் முழுதும் அறியக் காண்பிக்கக்கூடாது. காண்பிக்கின் வேலைக்காரர்களுக்கிருக்கும் எஜமான பயம் அற்றுப் போக அது ஒரு காரணமாய்விடுகிறது.

# நட்பு

(454—ம் பக்கத் தொடர்ச்சி.)



உண்மை நண்பனை ஒரு நல்ல கண்ணாடிக்கு ஒப்பிடலாம். கண்ணாடி, அதனுட் பார்ப்பவனின் முகத்திலுள்ள குற்றங் குறைகளைச் சிறிதும் பேதமின்றிப் பிரதிபலிப்பதுபோல், உண்மை நண்பனும் தனது நேசனின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி விடுகிறான். அதனோடு அவனே அதைச் சீர்திருத்துஞ் சக்தி வாய்ந்தவன்.

**ஐந்தாம் பயன் ஒழுக்கந் திருந்தப் பெறல்.**

தன் தவறுகளைத் தானே யறிந்து திருத்திக்கொள்ளுதல் இயலாததனாலும், நீதி நூல்களைப் படித்தும் பிறரைப் பார்த்தும் அறிந்துகொள்ளலா மாயினும் அதைத் தனக்கே யுபயோகப் படுத்திக்கொள்ளல் மிகக் கடினமாகையினாலும், தாய்தந்தையர்க்கு அடுத்த படியாக நண்பனே குற்றங் கண்டித்துக் குணம் போதிக்க ஏற்றவனாகிறான்.

தனிமையில் தவித்த பெருந் தனவானொருவர், உண்மை நட்பைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக, வேண்டுமென்றே வெறுக்கத்தக்க ஏழ்மை நிலை தாங்கி மிக்க கஷ்டத்துடன் ஒரு நல்ல சிநேகனைப் பெற்றுப் பேரின்ப வாரிதியி லாழ்ந்தாராம். அன்னார் கூற்றைக் கவனியுங்கள்:—

**நண்பன் சிறப்பும் நட்பின் சக்தியும்**

"ஒரு உண்மை நண்பன் பொன்னிலும் அருமையாய் வைரத்திலுஞ் சிறந்தவன்; துயரத்திற்கு நல்ல மருந்து: நிகரற்ற பொக்கிஷம். இவ்வுலகத்தில் மிகச் சிறந்ததும், அழகுடையதும், இன்பமளிப்பதும், அநேகங் காணப்படுகின்றன; ஆனால் உண்மை நண்பனின் முகத்தைப்போல் சிறந்ததும், அழகு பொருந்தியதும், இன்பங் கொடுப்பதும், அருமையானதும் வேறொன்றுங் காணப்படுவதில்லை. அந்தகாரத்திலும் அவன் முகம் மிக அழகியதே. பல சப்தங்கள் காதுக்கு மிக்க இனிமையாய் ஆனந்தத்தைக் கொடுக்கின்றன; ஆனால் உண்மை நண்பனின் குரலைப்போல் கர்ணாமிருதமாயிருப்பது வேறொன்றில்லை. அது எப்போதும்—பெருத்த புயலிலும் இனிமை யுடையதே. * * * * * நட்பு வியாதியை நீக்குவதில் நல்ல வைத்தியனின் தேர்ச்சியையும், மனோ நிலைமையை யூகித்தறியுந் தன்மையில் துப்பறியும் நிபுணனின் திறத்தையும் பெற்றது; ஜாக்கிரதையாய் கவனித்துபசரிக்குங் குணத்தில் நோயாளியின் மனைவியை யொத்தது; பொறுமையிலும் அன்பிலும் பெற்ற தாய்க்குச் சமமானது."

---

குழந்தை எதையோ நினைத்து அழுதுகொண்டு தாயிடம் ஓடிவரும் வழியில் ஒன்றைப் பார்த்ததும் விளையாட்டின் ஞாபகம் வந்துவிட உடனே சிரிக்கத் தொடங்கிவிடுகிறது. குழந்தைகளின் மனம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறக்கூடியது.

நல்லோர் சொல்லும் சொற்களைக் கேட்டலும், அவர் உபதேசங்களைப் படித்தலும், அவர் சரிதத்தைப் பிறர் சொல்லக் கேட்டலும், அவரது நற்குணங்கள் நம்மிடம் நிலைபெறக் காரணமாகின்றன; அவர்களை நண்பராகக் கொண்டு சேர்ந்து பழகினாலோ "நாடோறுந் தித்திக்கும்; தேவர் பெறற்கருந் திருவுஞ் சித்திக்கும்படி யருளும்." இவை மட்டுமேயோ?

ஆறும் பயன் ஞானமெய்தி முக்தி பெற.

"முத்திதனை யளிக்கும் மோனநிலை சேர்க்கும்
பத்திமிகப் பெருக்கும் பண்ணிய—சித்தியெலாங்
கூட்டுவிக்கும் நீர்சூழ் குவலயத்தே நன்னெறியி
னூட்டுவிக்கும் நல்லோர்தம் நட்பு."

இத்தகைய நட்புக்கு மூலகாரணம் யாது. மனவுருக்கமே, அன்பே. அன்பு பூக்கும் மரமே நட்பையுங் காய்க்கிறது; அதன் வளர்ச்சிக்கு ஆதாரமாயிருப்பது விருப்பமும் நம்பிக்கையுமே. நிம்முன் நம்பிக்கையும் விருப்பமும் ஏற்படுதலே கடவுள்மேல் நம்பிக்கையும் பக்தியும் ஏற்படுதற்குக் காரணமாம். எனவே உண்மை நட்பால் தெய்வபக்தி விருத்தி யடைந்து, உலகத்தை உண்டாக்கினவரை உறுதியாக உபாசிக்கக் காரணமேற்பட்டு என்றும் மாறாத பற்றை நண்பனிடத்தும் ஈசுவரனிடத்துங் கொள்ள வகை யுண்டாகிறது. இவ்வாறு, எல்லாம் வல்ல இறைவரது சக்தியையும் அன்பையும் யோசித்தறிந் தானந்திக்கவும், நல்லோர்க்கு அவர் இட்ட கட்டளையையும், அதன்படி யொழுகினால் பெறும்பேறு என்னவென்பதை யறியவும், காரணமா யிருக்கிற எல்லாம் வல்ல, கள்ளமின்றி யுள்ள மொன்றாகும் அன்புவெள்ளத்தினாலாய நட்பு,—சுற்றிலும், எங்கும், சுகம், சந்தோஷம், இன்பம் முதலியவற்றைப் பரப்பி, புகழ்படைக்கும் புதிய நண்பரைப் பிணைத்து இன்ப சாகரத்தி லாழ்த்திக் கடவுளைத் துதிக்க வழி காட்டுகிறது. என்னே! நட்பின் சிறப்புஞ் சக்தியும்!

முடிவுரை நட்பு பக்திக்கு வழி காட்டும் வகை.


"நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளு
மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே."

—பட்டினத்தடிகள்

லக்ஷ்மீ வெங்கடரமணன்.

நட்புக்கு மங்களம்

சிலர் தங்கள் பழைய கதைகளைக் கூறுவதில் அதிக விருப்பங்கொள்ளுகின்றனர். கேட்போர் கவனிக்கின் இன்னும் பிரமாத இராமாயணம். இது முன்னர் வாழ்ந்து தற்போது தாழ்ந்திருப்போர் சங்கதி. புதியதாக வாழ்வு பெற்றோர் வாயையே திறக்கிறதில்லை.




சரசர வெனத் தெருவிற்கு வந்தான். சிறிது தூரத்திற்கு அப்பால் ஒரு உருவம் செல்வதைக்கண்டு, தனியே அதைப் பின் தொடர்ந்தான். தனக்கு முதல் முதலில் எந்த விடத்தில் துரைதாசரின் உறவு ஏற்பட்டதோ, அதே மேரி ராணியார் கலாசாலைக் கெதிரில், கடற்கரையருகிற் சென்று நின்றது அந்த உருவம். சுந்தரமும் ஓசை செய்யாது அந்த உருவத்திற்கு மிகச் சமீபமாகச் சென்று விட்டான்.

***

தன் பெற்றோரின் ஏழ்மை நிலையைக் கண்டு, வருந்திப் புலம்பிய துரைதாசர் ஸ்ரீனிவாசனால் தேற்றப்பட்டு; நேரே சென்னை சென்று, தம் 'அதிகாரப் பதவியை உதறியெறிந்து தன் மனைவியோடு தன் ஊர்போந்து, ஈன்ற தாய் தந்தையர்க்குத் தொண்டு செய்வதோடு, இனிமைத் 'தமிழ்த் தாய்க்கும்' தொண்டு செய்யுமாறு ஸ்ரீனிவாசனால் வற்புறுத்தப்பட்டார். அதை ஒப்புக்கொண்ட துரைதாசர், "நான் என்மனைவியோடு இங்கு வந்து முற்கூறிய தொழிலில் ஈடுபடினும், நம் இனத்தார்கள் என்னைத் தனியாகத்தானே ஒதுக்கிவைத்திருப்பர். அந்தக் கொடுமையை எவ்வாறு மறந்து வாழ்வது?" என்று ஓர் ஆட்சேபனையைக் கிளப்பினார். "அதை எவ்வாறாவது சரிப்படுத்தி விடலாம்" என்றான் ஸ்ரீனிவாசன். தன் மனைவியின் தன்மையை ஒரு சிறிதும் அப்பொழுது நினைத்துப் பார்க்கவில்லை துரைதாசர். அவர் சென்னைக்கு வந்ததும் நிகழ்ந்த விஷயம் நேயர்கள் அறிவர். அதனால் மனம் ஒடிந்த துரைதாசர் 'தற்கொலை' செய்துகொள்வது தான் முடிவு என்று கருதி கடற்கரை சேர்ந்தார்.

***

"பெண்கள் யாவரும் அன்புமயமானவர்கள் என்று கருதியிருந்தேன்; ஆ! அவர்கள் 'காதல்' என்று கூறுவதெல்லாம் முயற்கொம்பே! அவர்கள் உடல் முழுதும் வஞ்சனையாலேயே நிரப்பப்பட்டிருக்கவேண்டும். அந்தோ! பிறரை எதற்காக யான் நோதல் வேண்டும்? யான் செய்த வினையையே யான் இப்பொழுது அநுபவிக்கின்றேன். என் தித்திக்கும் தேனே! தெவிட்டாத தெள்ளமுதே! சில வருடங்களுக்கு முன்பு, இதே இடத்தில் நீயும்

கருமிக்குக் காரியம் ஆயிற்றே என்கிற நினைவு தோன்றுகிறதில்லை. பணம் போயிற்றே என்கிற கவலைதான் அவன் மனதில் குடிகொண்டு விடுகிறது.

நானும், ஐயோ! எவ்வளவு அன்போடு கூடிக் குலாவி மகிழ்ந்தோம்? ஈசா! இனி இந்த உலகில் யார் மீதும் எனக்கு வெறுப்பில்லை; உன் திருவடிகளையே தஞ்சமென அடைந்தேன். தாய் தந்தையர்க்குத் துரோகஞ் செய்தவன்; "தாய்மொழி"யை அவமதித்தவன் என்று என்னை வெறுக்காதே. என்னை நீ எப்படி வெறுத்தாலும் எனக்கு உன்னையன்றி வேறு யார் கதி?

'இன்பத்துள் ஏதும் உவட்டாதது என்றில்லை,
மன்பெரிய செல்வாக்கும் மாட்சிமையும் மாய்வுறுமால்,
அன்பர் அகங்கனியும் அன்பும் அழிவுறுமால்,
என்பெருமான் இன்அருளே எல்லாம் எனக்காமே.'

அகன்ற பெரிய கடலே! என் போன்ற எத்தனையோபேருக்கு இடந்தந்து உதவிய நீ இதோ இந்த ஏழைக்கும் இடம் தந்தருள்வாய்" என்று கூறிக் கடலில் விழப்போனார் துரைதாசர். "ஆ! எனது இன்பக்கனியே! இருவிழியின் கருமணியே! நான் முதலில் விழுந்த பின்பு நீங்கள் விழலாம்" என்று கூறி அவரைத் தாவிப் பிடித்தாள் சுந்தரவல்லி. தன் காதலி தன்னைத் தொடர்ந்து வருகிறாள் என்பதை அவர் அறியார். அப்படியே மரம்போல் நின்றுவிட்டார். பின்னர் பேதைச் சுந்தரம் கண்களில் நீர் வடிய, "அன்பரே! நான் தங்களுக்குச் செய்த தவறு யாது? எதற்காக இவ்வித கோலம் பூண்டீர்?" என்று கேட்டாள். அவர் தன் மனதில் உள்ளவற்றை யெல்லாம் அப்படியே கொட்டிவிட்டார். "நான் மறுபடியும் என் 'மதத்'தையே சேரப்போகிறேன்; உன் விருப்பம் யாது?" என்று தன் மனைவியைப் பார்த்துக் கேட்டார் துரைதாசர். முதலிற் சிறிது தயங்கி நின்ற சுந்தரம் காமனைக் காட்டிலும் கட்டழகனாய், கல்வியிலும் சிறந்தவனாய்த் தன் முன்னே நிற்கும் காதலனைப் பிரிய மனமின்றி, தானும் அம்மதத்தையே தழுவுவதாகக் கூறினாள்.

—"நீ மட்டும் போதாது; உன் பெற்றோரும் உன்னோடு வரவேண்டும்." என்றார் துரைதாசர்.

"என்னைப் பொறுத்தமட்டிலும் உங்களுடைய எவ்வித ஆணைக்கும் கீழ்ப்படியத் தயார்."

"நீ உன் தாய்தந்தையர்க்கு ஒரே பெண்; உன்னைப் பிரிந்து வாழ அவர்கள் மனம் ஒருப்படாது; அப்பாவத்திற்கும் யான் ஆளாகேன்; நீ சிறிது முயற்சி செய்யின், அவர்கள் உன் பேச்சுக்கு மாறு பேசமாட்டார்கள்."

சுந்தரம் சம்மதக்குறியாகத் தலையை அசைத்தாள்.

***

சென்னைத் "திலகர் கட்டிடத்"தில் பிரமாண்டமான கூட்டம். எல்லா ஜாதியையும் சேர்ந்த சகல மதஸ்தரும் அங்கு விஜயஞ்செய்திருந்தனர். "காங்கிரி குருகுல" ஸ்தாபகரும் அஞ்சா நெஞ்சுபடைத்த ஆண்மையாளரும், இந்து மதத்தலைவரும் ஆகிய சுவாமி - சிரத்தானந்தஜீ அவர்களின் சொற்பொழிவு. இந்து தேசத்தின் கேவல நிலைமையையும்; இந்துக்களின் ஒற்றுமையின்மையால், அம்மதம் நாளுக்கு நாள் பலஹீனப்பட்டு வருவதையும், வைதீகர்களின் "கொடுமை"யையும் வீரச்சுவை நிரம்பிய சொற்



ளால் விரிவாகக்கூறி; துரைதாசரும், அவர் மனைவியும், அவர் மனைவியின் பெற்றோரும் இந்து மதத்தில் சேரப்போகும் விஷயத்தையும் அறிவித்தார்கள்.

***

மறுநாள் சுவாமிஜீ அவர்களின் தலைமையில் "ஹிந்து மகா சபை"க் கூட்டம் ஒன்று கூடியது. தமிழ் நாட்டுத் தலைவர்கள், தமிழ்மொழித் தலைவர் ஸ்ரீமான்—ஸ்ரீனிவாசன் முதலிய பெரியோர்கள் யாவரும் வந்திருந்தனர். செய்யவேண்டிய "கிரியை"கள் யாவும் செய்து, துரைதாசர் பழய துரைசாமியாகவும்; ஹெலென்—சுந்தரம் அரங்கநாயகியாகவும்; அருளானந்தம் பிள்ளை அமிர்தலிங்கம் பிள்ளையாகவும்; அவர் மனைவி சிவகாமியாகவும் பெயர் பூண்டு இந்து மதத்தைத் தழுவினர்.

***

துரைசாமி தனது ஊர் சென்று, தன் வீட்டையே மீண்டும் விலை கொடுத்துப்பெற்றும்; தனது பெற்றோர், மனைவி, மாமனார் முதலியவர்களோடு யாதொரு மனக்குறைவும் இன்றி வாழ்ந்து; ஸ்ரீனிவாசன் தோற்றுவித்த "தமிழ்ச்சங்க"த்திற்குத் தானும் ஓர் தலைவராக இருந்து தொண்டு செய்து வருகிறார். அத்துடன் தமது உத்யோக பதவியையும் ஏற்று நிற்கின்றார்.

***

"கதை ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது; அதோடு ஸ்ரீநிவாசனுடைய மனைவியின் பெயர் 'அரவிந்தவல்லி' என்றும்; அரங்கநாயகியின் கணவன் துரைசாமியின் பெயர் 'அரங்கசாமி' என்றும் மாற்றி வைத்திருந்தால் கொஞ்சம் பொருத்தமாகவும், அழகாகவும் இருக்கும்" என்று சகோதரர்கள் நினைக்கலாம். நியாயந்தான்; ஆனால் உண்மையில் நடந்த ஓர் சம்பவத்தின் பிரதான நாயக நாயகிகளின் சொந்தப் பெயரை நம் விருப்பப்படி மாற்றி வைக்கலாமா?

"வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே............
சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே."

பெ. இராமாநுஜன்.

## கடனைத் தீர்த்துவிட்டுப் பேசு.

நீ அவனிடம் வாங்கிய கடனை இன்னும் தீர்க்காமல் அவனிடம் அடிக்கடி பிரியமாய்ப் பேசப்போகிறாய். உன் மனதில் கபடமில்லைதான். சீக்கிரம் நீ எதிர்பார்க்கிற தொகையைக் கொண்டு அவன் கடனைத் தீர்த்துவிடவே உனது எண்ணம். ஆயினும், உனக்குக் கடன் தந்தவனோ, உனக்குக் கொடுத்தது இன்னும் வரவில்லையே என்ற சலிப்புடனேயே, உனது எவ்வளவு பிரியமான பேச்சுக்குங்கூட, மனச்சலிப்புடனேயே அவன் உன்னிடம் பேசுவோனாக ஆகக்கூடும். ஆகவே, முன்னதாகக் கடனைத் தீர்த்துவிட்டு அப்பால் அவனிடம் பிரியம் வைத்துப் குலாவிப் பேசப்போ. அவனும் அதற்குத் தகுந்த அன்புடன் பேசத்தொடங்குவான். உலகின் போக்கே இவ்விதம் தான்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# ‘லீப்—ஈய’ரின் லீலைகள்!

(லீப் ஈயர் = அதிதின வருடம்.)



ஆஹா! என்ன சொல்லுவேன்! இவ்வகிலமும் என் அப்பன் செயலும்! ஒரு குறையா, இரு குறையா?—எளிதாய்ச் சொல்லிவிட! எங்கெங்கும், எதிலும், எந்த ஆவற்படுகையிலும் அங்கங்கு ஒரு அமளி குமளி இருக்கவே வைக்கிறது. கலியாண வீட்டில் வந்த விருந்தினர்களுக்கு சந்தோஷம்; அதைச் செய்வித்தவருக்கோ அவர் வீட்டில் ஆறு மாதம் கருப்பு! இது பெரியோர் வாக்கு. சிறியோருக்கு இனி தோன்றப் போகிற அனுபோகம், தை மாதம் என்று பேர்தான்! தை பிறந்தால் வழி பிறக்கு மென்பார்கள். ஐயோ! ஒன்றையுங் காணேமே! யானை யுண்ட விளாங் கனியாய், இலவங் காத்த கிளியாய்விட்டது. எல்லா பண்டங்களையும் வாங்கி யிருப்பு கட்டுவது இந்தமாதத்திலேதான். இந்த முதலுக்கே சூனியமானால், முற்றும் நடப்பதைக் கேட்பானேன்?

* * *

இனி, இந்தத் தை மாதம் 19-ம் தேதியிலே ஒருதிருவிழா! லீப்ஈயரின் (அதிதின வருடத்தின்) மாதமான பிப்ரவரி தோன்றிய பெரிய திருவிழா! இந்த பிப்ரவரி மாதத்துக்கு இந்த தடவை ஒரு குட்டிநாளும் கூடிக்கொண்டு, வழக்கமான 28-நாட்களுக்குப் பதிலாக, 29-நாளாக விளங்கப் போகின்றது. இதை யொரு விசேஷித்த வருஷமாகப்பலர் நினைப்பதும், எதிர்பார்ப்பதும் உண்டு. “லீப் ஈயர்” என்ற ஒரு சிலாக்கினையான பெயரும் வேறே! ஆகவே, இந்த 1928-ம் வருஷத்தின் நாட்கள் 365-ஆக இல்லாமல் 366-ஆக இருக்கும். இனி இந்த லீப் ஈயரிலுள்ள நல்லது கெட்டதுகளை விகடன் என் திருவாயைத் திறந்து கொஞ்சம் மெல்லுகிறேன்.

* * *

தை மாதத் தவிப்பை மேலே அளந்தேன், லீப் ஈயரின் ஹிம்சைகளைக் கீழே கொட்டுகிறேன். மாதச்





சம்பளம் பெற்று வழக்கமாய் வேலை செய்வோர் இந்த தடவையில் அதிகமான ஒரு நாளுக்கும் சம்பள மில்லாமல் உழைத்து அழவேண்டி யிருக்கிறது! பிப்பிரவரி மாதத்தின் ஒரு நாளைய அதிக வட்டியைப் பாங்கிகளும், லேவாதேவிக் காரர்களும் இழக்க நேருகிறது. பிப்பிரவரி 28-ம் தேதி தாண்டியதும், மார்ச்சு மாதம் முதல் தேதி பிறந்து கை நிறைய சம்பளம் வாங்குகிறவர்கள் இந்த தடவை ஒரு நாள் செலவுக்குக் கையில் காசில்லாது திண்டாட வேண்டி யிருக்கிறது! வீட்டு வாடகை வாங்குவோர் ஒரு தினம் அதிகம் விட்டுக் கொடுத்து நஷ்டப்பட வருகிறது. மார்ச்சு மாதம் முதல் தேதியன்று விடுதலை பெற வேண்டிய ஜெயில் கைதி இந்த ஒரு தினத்துக்கு அனாவசியமாய் சிறையில் அடைப்பட்டுக் கிடக்க ஆகிறது. தினசரிப் பத்திரிகைக் காரர்கூட ஒரு தினத்துக்கும் அதிகமாய்ப் பத்திரிகைகளை அனுப்ப சம்பவிக்கிறது. காபி, மது பருகிவிட்டுக் கையெழுத்திடும் பெரியவர்களுக்கு இந்த மாதத்தில் கணக்கேட்டில் கூட ஒரு நாள் கணக்கு உயருகிறது. ஒரு மாதச் சாப்பாட்டுக்காக முன் பணம் பெற்ற ஹோட்டல்காரர்கள் இன்னொரு அதிக நாளைக்கும் திண்டி போட நேருகிறது. அடுத்த மார்ச்சு மாதம் முதல்தேதியில் அதற்கென்று காத்துள்ள பிரபுவுக்குத் தன் தேகத்தை விற்கவேண்டிய ஜெகதாம்பாள், இந்த அதிகப்பட்ட நாளாலே தன்னால் ஆண்டியான அழகேசனுக்கு இன்னொரு நாளைக்கும் உடன்படிக்கைப்படி தொங்க வேண்டியிருக்கிறது! கோர்ட்டுத் தீர்ப்பை எதிர்பார்ப்பவன் இந்த ஒரு நாளால் அனாவசியமாய்க் காக்கப்பட்டு இடர் படுகிறான். உபாத்தியாயர் இன்னொரு நாளைக்கும் சம்பளமின்றிப் பாடம் சொல்லித்தர வருகிறது. இந்த ஒரு நாளால் சென்ற வருஷத்திய பிப்பிரவரி மாதத்தின் ஜனனக் கணக்குகளைவிட, இந்தப் பிப்ரிவரி மாதக் கணக்கில் அதிக தொகை கூடிக்கொள்கிறது. மரணக் கணக்குகளும் இப்படியே சென்ற பிப்ரவரியைவிட இந்த பிப்ரவரியில் அதிகமாய் எடுத்துக் காட்டுகிறது. ஒரு மாதக் குடும்பச் செலவின் மொத்தத்தில் சென்ற பிப்ரவரியைவிட இந்த தடவையில் கொஞ்சம் துட்டுத் துக்காணி அதிகமாய் ஏறிக் கொள்கிறது. வருமானவரிக் கணக்கிலே ஒரு தினத்து அதிக வரவு கூடிக் கொண்டு, சென்ற வருஷத்திலும் இவ்வருஷம் அதிக லாபமெனக் காட்டுவித்து, இன்னும் வரியை மேலுக்கு உயர்த்த சிபாரிசு செய்து வியாபாரியைக் கதற வைக்கிறது. இப்படியே நெடுக நெடுக!

* * *

இனி, இந்த லீப் வருடத்தால் சந்தோஷப்படுவோரும் இருக்கிறார்கள். மார்ச்சு மாதம் முதல்தேதியில் கண்டிப்பாய்ப் புறப்பட்டு வரவும் என்று கடிதம் பெற்ற பெண்ணரசி இந்த அதிக தினத்தால்கூட ஒரு நாள் தன் தாய்வீட்டிலிருக்க முடிந்ததென்று சந்தோஷப் படுகிறான். மார்ச்சு மாதத்தில் தூக்கு சிக்ஷை என்று தீர்ப்பான கைதிக்கு ஒரு நாள் அதிகமாய் உயிர் வாழ இடம் கிடைக்கிறது. எஜமானர்கள் ஒரு அதிக நாள் உழைப்பைத் தங்கள் வேலைக்காரரிட மிருந்து பெற்று லாப மடைகிறார்கள். நாடகம் ஸர்க்கஸ்காரர்களுக்கு இந்த ஒரு அதிக நாளுக்கும் கொட்டகை வாடகையின்றியே ஆட்டம் ஆடிப் பணம் மூட்டை கட்ட முடிகிறது.

மார்ச்சு முதல் தேதிக்கு ஆபீஸ் வேலையை ஒப்புக் கொள்ளவேண்டியவன் இந்த ஒரு அதிக நாளால் அப்பாடா என்று ஓய்வு பெறுகிறான். மார்ச்சு முதல் தேதிக்கு ஒன்றை, ஒரு சாமானைக் கொண்டுவந்து ஒப்புவிக்க வேண்டியவர்கள் அதிகமாக இன்னொரு நாளைக்கும் அதை வைத்திருக்க முடிகிறது. எல்லா சௌகரியங்களும் கூடியிருந்து முதல் தேதியில் பத்திரிகையை வெளியிடுவோருக்கு இந்த ஒரு அதிக நாள் அவர்களைச் சற்று இளைப்பாற இடம் கொடுக்கிறது. திருப்பதி உண்டியிலே இந்த ஒரு நாளைக்கு இன்னும் கூடப் பணம் சேருகிறது. தினமும் உழைத்து அன்றாடம் கூலி பெறுகிறவனுக்கு இந்த ஒரு அதிக நாளின் உழைப்பு அவன் கூலியை அதிகப்படுத்தி வைக்கிறது. மார்ச்சு மாதம் முதல் தேதி வரவேண்டிய திதி கிரியைகள் இந்த ஒரு அதிக நாளால் பிப்ரவரி மீ 29-ம் தேதியில் வந்து விடுகிறது. ஓரிடத்தில் ஒரு மாதம் உட்கார்ந்து தின்ன வந்தவன் இன்னொரு அதிக நாளைக்கும் தன் கை கடிக்காத புசிப்பைப் பெற்று உல்லாசப் பட முடிகிறது. தபாலாபீஸ் கார்டு கவர் ஸ்டாம்புகளின் விற்பனை சென்ற வருஷத்தைவிட இந்த ஒரு அதிக நாளால் மிகவும் உயர்ந்து விடுகிறது. இப்படியே சர்க்கார்வருமானத்திலும் ஒரு தினத்து அதிக வருமானம் கூடிக் கொள்கிறது.

***

'சித்திரையிற் செல்வன் பிறந்தால் அர்த்த குடிக்கு அனர்த்தம்' என்பார்கள். அவ்வாறாக இச்சித்திரை கடந்து வைகாசி முதல் தேதியில் நல்ல லக்கினத்தில் பிறக்க வேண்டிய குழந்தை இந்த ஒரு அதிக நாளால் சித்திரை மீ 31-ம் தேதியே பிறந்துபோய் எல்லோருக்கும் கொள்ளி வைக்கும் குழந்தையாய் முடிகிறது. கைக் குழந்தையின் வயதில் ஒரு நாள் அதிகம் ஆகியும் ஆகாதது போலவே எண்ண வைக்கிறது. பிரஸவ காலமும் இந்த ஒரு அதிக நாளால் நிலை தடுமாறுகிறது. ஒரு வேலையை இன்ன தேதிக்குள் முடித்துக் கொடுப்பதாய் ஒப்பந்தம் பேசியவன் இந்த ஒரு அதிக நாளால் கொஞ்சம் குசாலாய் இருக்கிறான். சட்டசபை முதலியவைகளுக்குப் போய் மகா ஜனங்களுக்கு அதை இதை சாதித்து விடுவதாகப் பேசுகிற கௌரவ அங்கத்தைகளுக்குங்கூட ஒரு நாள் அதிகப்படிச் செலவுகள் 29-ம் தேதிக்கும் கிடைக்கிறது. மார்ச்சு முதல் தேதி புறப்பட வேண்டிய ராணுவங்கள் இந்தப் பிப்பிரவரியிலே மேலுக்கு ஒரு நாள் அதிகமாக முன்னிருந்த ஊரிலேயே கும்மாளமடித்துக் குதாகலிக்க முடிகிறது.

***

இப்படியாக, ஒரு நாள் அதிகரிப்பான இந்த லீப் ஈயர் என்னும் அதிதின வருடத்திலே பலருக்கு வருமானம் பெருகவும், வாழ்வு லாபங்கள் பெருகவுமாக இருப்பதையும், மற்றொரு பக்கத்திலே ஒரு நாள் விருதா உழைப்பு உழைக்கவும், வீணுக்குப் பாடு படவும் ஆக இன்னும் எத்தனையோ அலங்கோலங்களுக்கும் துணைக் கருவியாக முடிவதையும் உற்றுப் பார்க்கவுந்தான் இந்த விகடனுக்கு ஆச்சரியத்தின்

மானேஜரின் அதிகாரமும், வேலைக்காரரின் பயந்த தன்மையும் ஆபீஸிலிருக்கும் வரையில்தான். வெளிவந்ததும் எல்லோரும் ஒரு தன்மையரே.




மேல் ஆச்சரியமாய்த் தோற்றவும், அதை யப்படியே என் விகட சபையின் முன்பு என் பொக்கைவாயைக் கிழித்துக் கொண்டு வழித்து வழித்துத் தெளித்து விட்டேன்! எதையும் பழித்துப் பேசவேண்டாம், இழித்துச் சொல்லவும் வேண்டாம், அறிவுக்கு எட்டவில்லையென அழித்துப் போடவும் வேண்டாம், செழிப்பான—முன்பின் விவரம் தெரியாமல் முழிப்பதற்கான ஒரு சூக்ஷ்ம தத்துவப் பொருள் ஒவ்வொன்றினுள்ளும் இருந்து கொண்டிருக்கிறதென்பதை விழிப்புடன் நோக்குங்கள். இந்த ஒரு நாள் அதிகரிப்பின் விபரீதங்களானது, ஈசுவர நியமனத்தில் ஒரு அணுப்பிரமாணங் கூடத் தனது எல்லை மீறினும் உடனே அனைத்தும் அல்லோகல்லோலப் பட்டு விடும் என்பதைக் குறிப்பிப்பதாக இருக்கவில்லையா? விகடன் இந்த ஒரு சூக்ஷ்மத்தை மட்டும் இங்கு தெரிவித்தேன். இனி அதைப் பெருக்கிக் கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

## முதல் தாம்பூலம் அவனுக்குத் தா.

பெரிய நிலையிலிருந்து கீழே விழுந்துவிட்டவனிடம் முன்னைவிட அதிக மரியாதையுடன் நடந்து கொள். அவன் கேவலப்பட்டு விட்டதற்காக நீ வருந்துபவனாகவும், இரக்கப்படுபவனாகவும் காண்பித்துக்கொள். ஏனெனில், 'நாம் தாழ்ந்து போனோமே, முந்திய மரியாதைக்கு இப்போது இடமேது' என்று அவன் மனம் குறைப்பட்டுக் கலங்கிநிற்கும். ஆகவே, அத்தகையோனிடம் நீ என்ன தாழ்ந்து விடினும் மேன்மக்கள் மேன்மக்களே என்று சொல்லி உயர்வித்து முதல் தாம்பூலத்தையும் முதல் மரியாதையையும் அவனுக்குத் தா. முன்பு செல்வநிலையில் அவன் இருந்தகாலை நீ கவனிக்காவிடினும், இப்போது அதிகமாகக் கவனித்துக் கௌரவப்படுத்து. கடவுளுக்கு அது பிரியமாயிருக்கும். உனது நல்ல குணமும் விர்த்தியடைய இது நல்ல வழி.

வேலை வாங்குவதிலிருக்கும் சட்டதிட்டம், சம்பளம் கொடுக்கப்படுவதிலுமிருந்தால் எவ்வளவோ நன்றாய்த்தானிருக்கும். அதைத் தான் வெகு இடங்களில் காணோம்.

ஒருவர் பலரறிந்த மேதாவியாயிருந்தும் ஒன்றுமறியாதவர்போல் நடந்து கொள்ளுவதாலும், ஒன்றுந் தெரியாத மற்றொருவர் எல்லா மறிந்தவர்போல் பட்டாங்கடித்துக் கொள்ளுவதாலும் முறையே புகழ்ச்சியும் இகழ்ச்சியும் அடைகின்றனர்.






தேசங்கள் தோறும், ஆசார ஸம்பிரதாயங்கள் வேறுபடுகின்றன. வங்க தேசத்தில் பிராமணர்கள் தலையை முண்டனம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் காதில் கடுக்கன் போடுவதில்லை. நகைகளும் மயிரழகும் ஸ்திரீகட்கேயன்றிப் புருஷர் கட்கு ஏன் என்று கூறுகிறார்கள். அத்தேசத்து விப்பிரர்கள் சக்தியையாராதிப்பவர்கள். அதனால் காளிக்கு நிவேதனமாகும் மாமிசங்களைப் புசிக்கிறார்கள். உத்தரதேசத்தில் ஹிந்துஸ்தானி பாஷை பேசும் பிராமணர்கள் மாம்ஸபக்ஷணிகளல்லர். ஆயினும் ஸ்நானம், சுத்தம் இவைகளில் தென்றேயத்தார்க் கிடாகார். அங்குள்ளவர்களில் அநேகர் சிவ மூர்த்தியை வணங்குகிறவர்கள். ஆயினும் தேவாரம் திருவாசகம் என்பவற்றைக் காதாலும் கேட்டறியார். உத்தர தேசத்திலிருக்கும் வைணவர்கள் தமிழிலுள்ள திருவாய்மொழியையறிந்தவர்களல்ல. ஆயினும் தெலுங்கு அக்ஷரங்களில் பதிப்பித்தவற்றைப் படிப்போராவர். அறுபத்துமூவரின் பெருமையும், ஆழ்வார்களின் மகிமையும் தமிழ் தேசத்தாரே அறியவல்லவர். வங்க தேசத்தாருக்கு இதைப்பற்றி ஏதும் தெரியா. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரைப்பற்றித் தமிழ் நாட்டாருக்கு என்னதெரியும்? 1902-ல் வெளியான கிருஷ்ண சைதன்யத் தமிழ் நூல் விலையாவதே பரம கஷ்டமாகி, 1907-ம்வரு திராவிடதீபம் என்ற பத்திரிகையின் சந்தாதாரர்க்கு இனாமாகவும் தரப்பட்டன. மாணிக்கத்தின் பெருமையைக் கோழி அறியுமோ?

***

பூனா, பம்பாய் பிராமணர்கள் மீசை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கூர்ஜர நாட்டு விப்பிரர்களும் இப்படியே, ஆதலின் இவர்கள் ஆராதிக்கும் பரமேசுவரனுக்கும் மீசை வைத்திருக்கின்றனர். இதை ரவிவர்மா சித்திரத்தில் பார்க்கலாம். குடகு நாட்டு ஸ்திரீகள் கற்பைக் காத்துக்கொள்வதில் சூரர்கள். அவர்கள் தோட்டங்களில் வேலை செய்யும்போது யாரேனும் புருஷர் ஸ்பரிசிக்க அல்லது துச்சரிக்க வந்ததாய் அறிந்தால் தக்ஷணமே அவனைக் கத்தியால் குத்திவிடுவர். மிக்க தைரியசாலினிகள். மலையாளதேச மாதர்களின் ஸம்பிரதாயம் வேறு. சில மலைப் பிராந்தியங்களில் வசிக்கும் மனிதர்கள் வெகு கெட்டையாயிருக்கிறார்கள். தென்றேயத்தில் பாகவதர்கள் அதிகம். இவர்கள் பாகவதம், பாரதம் முதலியவற்றிலுள்ள கதைகளைக் கூறி ஜனங்களை ஸந்தோஷப் படுத்துவார்கள். ஆனால் ஒழுக்கக்குறைவு இவர்களிற் பலரிடம் உண்டு. சிறு எண்ணிக்கையினரே தாங்கள் போதிப்பதுபோல் நடத்தையிலும் பரிசுத்தராய் விளங்குவர். இவர்களன்றி வேறொரு பாகவதர்கள் உண்டு. இவர்கள் பிராமணரல்லாதாரைச் சேர்ந்த கூட்டத்தினர். பகவத் பக்தியிலும், ஆசாரங்களிலும் விசேஷ சிரத்தை காட்டுபவர். ஆனால் லௌகிகத்திலோ ஒரு காசை ஒரு பவுனாகப் போற்றி வணங்கிச் சேர்ப்பவர். பெரும்பாலோர் லௌகிக விருப்பங்களைவிட்டவர்களல்ல. சிலர் ஞானமார்க்கத்தில் நின்று உத்தம போதகம் செய்யும் உயர்நலம் கொண்டிருப்பதையும் காண்கிறோம். இவர்களில் சிலர் எத்தனை ஏழைகளாயிருப்பினும் தமது ஆசாரநீதியைப் பிராணன் போயினும் விடார்ராம்.

***

தெலுங்கர் ஒரு விதமாயும், தமிழர் ஒரு விதமாயும், சௌராஷ்டிரர் ஒருவிதமாயும் உடை தரிப்பது வழக்கம். இவ்விதமே பிராமணர்களிலுள்ள பல வகுப்பினர் பல மாதிரியில் உடைதரிப்பர். இவ்வாறு தரிப்பது தாங்கள் இன்ன வகுப்பைச் சேர்ந்தவர்களென்று குறிப்பிப்பதற்காகவேயன்றி வேறில்லை. புதிதாகப் பிராமணர்களானவர்களும் பிராமணர்களைப்போல் உடை தரிப்பர். இது வெட்கக்கேடு! பிராமணர்களில் பலவித பிரிவுகள் உண்டாயிருப்பது (மற்றவகுப்புகளிலும் கூட) ஆதிகால முதற்கொண்டல்லவென்பது வெளிப்படை. கல்கத்தாவில் பிரம்மசமாஜிகள் அதிகம். அவர்களின் கொள்கை பிரம்மம் ஒன்றே என்பது. மற்ற விதமான ஜாதிப்பிரிவுகள் பொய் என்பர். இந்த ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்திரீகளிற் பலர் வித்தியாவதிகளாவர். இவர்கட்கு ஒருவித கல்யாண விதியும் ஏற்பட்டிருக்கிறது. கோஷா ஏற்பாடு இந்த ஸ்திரீகட்கு இல்லை. பஞ்சாப் மாகாணத்தில் ஆரியஸமாஜம் ஒன்றுண்டு. இதை ஏற்படுத்தியவர் ஸ்வாமி தயாநந்தர். இந்தஸமாஜத்தார் வேதத்தையே ஆதாரவாகக் கொண்டு தங்களுடைய கொள்கைக் கிணங்க அர்த்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். புறமதத்தில் சேர்ந்த ஹிந்துக்களைப் பிராயச்சித்தம் செய்து சேர்த்துக்கொள்ளுகின்றனர். நாநா ஸ்தலங்களுக்கும் பிரஸங்கிகளையனுப்பி வேதத்தின் அர்த்தங்களை உபந்நியஸிக்கச் சொல்லுகிறார்கள். புராணங்கள் பொய், விக்கிரகாராதனை கூடாது என்பது ஸ்வாமி தயானந்தரின் முக்கிய கொள்கைகள்.

இவற்றையே தமது சத்தியார்த்தப் பிரகாசம் என்ற நூலில் விளக்கிச் சொல்லி முடிவில் தமது கொள்கைகளையும் குறிப்பிடுகிறார். சத்தியார்த்தப் பிரகாசத்தில் கண்டன பாகங்களை ஒரு குப்பையென ஒதுக்கிவிட்டு மற்ற விஷயங்களைப் படிப்பின் ஒவ்வொரு வரிக்கும் ஒவ்வொரு பொன் கொடுத்துப் போற்றலாம். அநேக உத்தம விஷயங்கள் மிக்க எளிய நடையில் வெகு தெளிவாய்ச் சொல்லப்பட்டுள்ளன. கண்டன பாகங்கள் மட்டுமே பரம ஸந்சலம். தமிழில் தற்போதுதான் சத்தியார்த்தப் பிரகாசம் வந்து தமிழர்கள் தெரிந்துகொண்டார்களென்பதில்லை. "சத்தியார்த்தப் பிரகாச"த்தின் ஆங்கிலப்பதிப்பு வெகு காலங்கட்கு முன்பே வெளியாகி தமிழ்நாட்டில் ஆங்கில முணர்ந்த அறிவாளிகளில் வெகு பேரிடம் அது இருந்து வருகின்றது.

***

ஹிந்து மதத்தைப்பற்றி வெகு காலமாக கிறிஸ்துவர்கள் கண்டனம் செய்து எவ்வளவோ நூல்கள் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். 1871-ம் வருஷத்தில் சைதாபுரம்

காசி விஸ்வநாத முதலியாரவர்களால் தமிழில் வெளியிடப்பட்ட "பிரம்ம சமாஜ நாடகம்" என்ற நூல் முற்றிலும் ஹிந்துமத கண்டனமாகும். தற்போது சத்தியார்த்தப் பிரகாசத்தின் கண்டனங்களாக வெளிவந்துள்ள புது நூல்களும் ஹிந்துமத கண்டனங்களே யாகும். இவற்றைவிட அதிகமாக ஸ்வாமி தயானந்தர் தமது சத்தியார்த்தப் பிரகாசத்தில் ஹிந்து மதத்தைக் கண்டனம் செய்து விடவில்லை. ஹிந்துக்கள், இஸ்லாமியர்கள் கிறிஸ்து மதத்தைக் கண்டனம் செய்திருக்கிறதற்கு மிஞ்சி சத்தியார்த்தப் பிரகாசத்தில் கிறிஸ்துமத கண்டனம் அதிகமாய் வந்துவிடவில்லை. ஹிந்துக்களின் கிறிஸ்துமத கண்டன நூல்கள் நாளைக்கும் விலைக்குப் பெறலாம். சத்தியார்த்தப் பிரகாசத்தில் உள்ள இஸ்லாமியக்கண்டன பாகத்தைவிட, இன்னும் படுமோசமாகவும், கேவலமாகவும், ஏகவசனப் பிரயோகமாகவும், படிப்பதற்கே மனம் தாளாத விதமாகவும், சென்னைக் கிறிஸ்துவகல்விச் சங்கத்தார் தமிழில் வெகு வருஷங்களுக்கு முன்பே வெளியிட்டுள்ள இஸ்லாமியக் கண்டன பாகம் மகா கொடுமையாயுள்ளது. முக்கியமாக "அரபியாவும் அதன் நபியும்" என்ற நூலைப் படிப்போர் சத்தியார்த்தப் பிரகாசத்திலுள்ள கண்டனத்தைவிட மிக்க வருத்தமான தென்பதை யுணர்வர். முற்றிலும் படங்கள் மூலம் கண்டனமாகும். அந்நூலிலுள்ள ஒவ்வொரு வரியையும் மறுத்து அந்த வரிக்குள்ள நேரானவும் உண்மையானவுமான பொருளை விளக்கித் தெளிவித்து எழுதினால்தான் தப்பிதமான அந்த வியாக்கியானங்களின் உண்மைப் பொருளைப் பிறர் அறிய முடியும்.

***

நடராஜ மூர்த்தி யொன்றுண்டென்று வங்காளிகள் அறியார். ஆழ்வார் நாயன்மார்களெல்லாம் நமது தமிழ்ப்பக்கத்துக்கே. வடக்கே யுள்ள சிவாலயங்களில் ஆகம விதிப்படி பூஜை கிடையாது. இவ்வளவு வித்யாஸங்கள் இருப்பினும ஹிமாலயம் முதல் ஸேது பரியந்தமுள்ள ஸகல ஹிந்துக்களும் ஒரே மாதிரியான வேதங்களை யத்யயனம் செய்வதால் வேதத்திற்குள்ள மகிமையே மகிமை. அதுவே ஹிந்து மதத்திற்கு ஆதாரமானது.

***

ஓய்வு காலங்களில் நாம் பிறந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு இடங்களையும், தெருக்கள் சந்துகளையும் கூடக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சுற்றிப்பார்த்து, முழுமையும் சுற்றித் தெரிந்த அறிவை சீக்கிரத்தில் சேகரித்துக்கொள்ள வேண்டும். இதுவே பிரதமத்தில் செய்யும் பிரதானமான பிரபஞ்ச தரிசனமாம். அதன்பிறகு மற்றப் பிரதேச ஸஞ்சாரங்கள் தொடங்குகை நன்று. தன் ஊரிலுள்ள கிராமமொன்றை யறியாமல் பம்பாயிலுள்ள வீதிகளனைத்தையும் தெரிந்து வைப்பதில் சிலாக்கியமில்லை. வீட்டிலக்கணம் தெரியாதவனுக்கு நாட்டிலக்கணம் தெரிந்து பயனென்ன—என்கிறார் வேதநாயகப் பெரியார்.

புருஷன் சினமுற்றிருக்கிறவரையிலும் மனைவியின் கெஞ்சுதல் மூலம்; மனைவி முறுக்கிக்கொண்டிருக்கிறவரையிலும் கணவனின் ஏக்கப் பார்வை கெஞ்சிய வசனம். இது இல்லற உலகத்தில் உண்டா?—இல்லையா?—

# சிறுமணித்திரள்

(482-ம் பக்கத் தொடர்ச்சி)

368. எந்த தேசத்தில் வித்தையும் நாகரீகமும் அதிகமா யிருக்கின்றனவோ அவ்விடத்தில் சிரேஷ்டமான பாஷா கிரந்தங்களும் கிடைக்கும்.

369. எவ்விஷயத்திலும் அவற்றை அபிவிர்த்திக்குக் கொண்டுவரும் சிந்தனையோடு முயன்று, எல்லோரும் ஐக்கியத்துடன் இருந்து உழைத்து சிரேயஸ்ஸை அடைய வேண்டும்.

370. அமைதியிலும் உயர்ந்தது அகிலத்திலில்லை. அமைதி எனில் யாது? நமக்கு என்று ஒரு சுதந்தரமுமில்லை; எல்லாம் கடவுள் விட்ட வழியெனக் கருதி அநேகர் அதுதான் அமைதி என நினைக்கின்றனர். அது முழு அமைதியாகாது. ஒவ்வொரு பதார்த்தத்தினதும் உற்பத்தி லயாதிகளை யுணர்ந்து, அவ்வுணர்ச்சியையும் அநுபவத்திலாக்கி, இன்ன விஷயத்தினை அடைதல் வேண்டுமோனால் இன்னமாதிரி நடத்தல் வேண்டுமென எண்ணி, அதன் குறைகுறைகளை அறிந்து காலதேச வர்த்தமானங்களுக்கு இசைந்து நடந்து கொள்ளுதலே அமைதி.

371. கால்ராவில் வீட்டிலேயே வைத்தியம் செய்துகொள்ளுகிறவர்களுக்குள்தான் மரணம் அதிகமாய் இருப்பதாய் சென்னை கார்ப்பரேஷன் சுகாதார உத்தியோகஸ்தர் கூறுகிறார்.

372. மனித ஸமூகத்திற்கே நாலு பெரிய தீமைகள் உண்டு. அவை அறியாமை, வியாதி, வறுமை, கூடா வொழுக்கம் எனப்படும். அறியாமையால் வியாதியும், வியாதியால் வறுமையும், வறுமையால் கூடா வொழுக்கமும் ஏற்படுகின்றன.

—திவான்பகதூர் ரங்காச்சாரியார்.

373. சுருட்டுக்குடி :—"பார்ப்பவர்களுக்கு அசங்கியம், மூக்குவெறுக்கத்தக்க வாசனை, மூளைக்குக் கெடுதி செய்யும், சுவாஸாஸயத்துக்கு அபாயமுண்டாக்கும், அதிலிருந்து வரும் புகையோ நரகத்திலுள்ள பள்ளத்திலிருந்து உண்டாகும் வாடையை நினைப்பூட்டுகிறது."

—1-வது ஜேம்ஸ் அரசர்.

374. "கோயில் கட்டடமானது ஆத்மபரிசுத்தத்தின் ஒரு அறிகுறியாகவே இருக்கவேண்டும்."

—மகாத்மா.

375. "நமது தமிழர்களிடை ஒரு கெட்ட வழக்கமிருக்கிறது. நாம் அயலாரையே எப்பொழுதும் தெய்வம் மாதிரிப் போற்றிவருகின்றோம். நம்மவர் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர்களை நியாயமான அளவுக்குக்கூடப் போற்றுவதில்லை"

—ஸ்ரீமான் சத்திய மூர்த்தி.

376. "நமது சக்திக்குட்படாமல்

சோவணுண்டியாய் வந்தவனுக்கு வேஷ்டிகொடுத்தாதரித்துப் பின்னர் கலியாணமும் செய்து வைத்த அவனையே 'விட்டேனே பார்' என்கிறான் இந்த விசுவாசத்துரோகி. இது இக்காலத்தில் அதிசய மல்லவே?—

சில காரியங்கள் நிகழ்ந்து வருகின்றன."
—மகாத்மா.

377. உன் நண்பனுக்குச் செய்வதை நீயே உன் காலும் கையும் துணைகொண்டு செய். பிறரைக் கொண்டு செய்விப்பதில் குறைகளே பெருகிவிடும்.

378. உன் நண்பனைப்பற்றித் தூஷணையும் பழிப்புமாக எவனேனும் கூறினால் "ஆம்" என்று தலையசைத்துவிடாதே. நீ தலையசைத்ததை உன் நண்பனைப் பழித்தவனே உன் நண்பனிடம் போய்ச் சொல்லிக் கலகமூட்டுவான்.

379. உன் பொய்க்கட்டுக் கதையை அவன் நம்பிவிட்டதாக எண்ணாதே. உன்னால் ஏமாற்றப்பட்டோமென்றும் உன்னுடைய இந்த பொய்-கபட-அண்டப்புழுகு புத்தி எப்போதுபோகுமோ வென்றும் அவன் சிந்தித்துக்கொண்டிருப்பதாக நீ எண்ணு.

380. உன் இடமும், உன் விரோதி யிடமும் நேசமாயிருப்போனிடம், அவனுடைய கும்பிடுகளால் மயங்காமல் சாக்கிரதையாக நில். உன்னிடமிருந்து எந்த விஷயமும் அவன் அறியாதபடி பார்.

## ஓர் வண்ணனுக்குக் கூறிய கவி.

வெள்ளாவிபத்து வெளுக்க விருபதுநாள்
முள்ளாடிக் கஞ்சிதனில் முப்பதுநாள்—தள்ளாடி
வண்ணாவஞ்சி வருந்தியெடுத்த வெள்ளை
புண்ணுக்குப் போலிருக்கும்போ.

சிலர் யாரிடமும் பேசாது மௌன ஸ்வாமி போலிருக்கிறார்கள். அது அவர்களுக்குப் பிரியம். இத்தகையோரைப் பிறர் மக்கு என எண்ணுகிறார்கள். அவர்களின் மனம் புத்தியுடன் கலந்து வேலை செய்துகொண்டிருப்பதை இவர்கள் கண்டார்களா ?—

ஓரோர் சுபாவக்காரருக்கு ஆரம்பத்திலேயே சிடு சிடுத்த பதில் வந்துவிடுகிறது. சிற்சிலருக்கு ஒரு முறை கேட்டு விளங்காமல் மறு முறை கேட்பின் அதுவே போதும்! அபூர்வமான இரண்டொருவர் பல முறை கேட்பினும் சாந்தமாகவே பதிலளிக்கின்றனர். இது பிறவிக்குணம் போலும்.

கையிலோ காசில்லை, இருக்கவோ வீடில்லை, உண்ணவோ வழி யேதுமில்லை, அவன் வாயில் வரும் மொழிகளோ--? வெகுவெகு தடபுடல்கள் தான்.

அண்ணன் தம்பி,—மாமி மருமகன், முன்னர் விரோதமாயிருந்து இப்போது கூடிய இவர்கள் பரஸ்பரம் அன்பாகப் பேசிக்கொள்ளுவதைக் காண மனசுக்கு எவ்வளவோ குளிர்ச்சியா யிருக்கிறது. இதன் அந்தரங்கம் யாது ?—



மார்க்கங்கள் என்ன ? இவ்வித அக்கிரமங்களினின்றும் குழந்தைகளை எப்படிகாப்பாற்றுவது? இவ்விஷயத்தில் மட்டும் பெற்றோர்கள் ஏன் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ளல்வேண்டும் ?

46. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள்வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள். ஏனென்றால் அங்கும் ஏமாற்றமடையாமல் இன்பங் காண்பதற்கு அநேக வழிகளுண்டு.

47. ஸ்திரீ ரோகங்கள் இவைகளிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது.

நண்பர்களே ! இது காறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசியங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மை செய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்டபுத்தகமல்ல.

முக்கிய குறிப்பு:—எங்கள் புத்தகம் நன்றாக விற்பனையாகிறதென்று கண்டு எமக்குப் பின்னால் அநேகப் போலிப்புத்தகங்க[illegible] பலர் அச்சிட்டு விற்க எத்தனிக்கின்றனர். எனவே நீங்கள் [illegible]தகம் வாங்கும்போது "இல்வாழ்க்கையின் இரகசியங்கள் [illegible] என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள். பெயரில் சிறிது மாற்றம் இருந்தாலும் வாங்க மறுத்து விடுங்கள்.

**"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம்தான்.**

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

Kesari Printing Works Madras.

சில காரியங்கள் நிகழ்ந்து வருகின்றன.''
—மகாத்மா.

377. உன் நண்பனுக்குச் செய்வதை நீயே உன் காலும் கையும் துணைகொண்டு செய். பிறரைக் கொண்டு செய்விப்பதில் குறைகளே பெருகிவிடும்.

378. உன் நண்பனைப்பற்றித் தூஷணையும் பழிப்புமாக எவனேனும் கூறினால் "ஆம்" என்று தலையசைத்துவிடாதே. நீ தலையசைத்ததை உன் நண்பனைப் பழித்தவனே உன் நண்பனிடம் போய்ச் சொல்லிக் கலகமூட்டுவான்.

379. உன் பொய்க்கட்டுக் கதையை அவன் நம்பிவிட்டதாக எண்ணாதே. உன்னால் ஏமாற்றப்பட்டோமென்றும் உன்னுடைய இந்த பொய் - கபட - அண்டப்புழுகு புத்தி எப்போதுபோகுமோ வென்றும் அவன் சிந்தித்துக்கொண் டிருப்பதாக நீ எண்ணு.

380. உன் இடமும், உன் விரோதி யிடமும் நேசமாயிருப்போனிடம், அவனுடைய கும்பிடுகளால் மயங்காமல் சாக்கிரதையாக நில். உன்னிடமிருந்து எந்த விஷயமும் அவன் அறியாதபடி பார்.

ஓர் வண்ணானுக்குக் கூறிய கவி.

வெள்ளாவிபத்து வெளுக்க விருபதுநாள்
முள்ளாடிக் கஞ்சிதனில் முப்பதுநாள்—தள்ளாடி
வண்ணாரவஞ்சி வருந்தியெடுத்த வெள்ளை
புண்ணாக்குப் போலிருக்கும்போ.

சிலர் யாரிடமும் பேசாது மௌன ஸ்வாமி போலிருக்கிறார்கள். அது அவர்களுக்குப் பிரியம். இத்தகையோரைப் பிறர் மக்கு என எண்ணுகிறார்கள். அவர்களின் மனம் புத்தியுடன் கலந்து வேலை செய்துகொண்டிருப்பதை இவர்கள் கண்டார்களா ?—

ஓரோர் சுபாவக்காரருக்கு ஆரம்பத்திலேயே சிடு சிடுத்த பதில் வந்துவிடுகிறது. சிற்சிலருக்கு ஒரு முறை கேட்டு விளங்காமல் மறு முறை கேட்பின் அதுவே போதும் ! அபூர்வமான இரண்டொருவர் பல முறை கேட்பினும் சாந்தமாகவே பதிலளிக்கின்றனர். இது பிறவிக்குணம் போலும்.

கையிலோ காசில்லை, இருக்கவோ வீடில்லை, உண்ணவோ வழியேதுமில்லை, அவன் வாயில் வரும் மொழிகளோ--? வெகுவெகு தடபுடல்கள் தான்.

அண்ணன் தம்பி,—மாமி மருமகன், முன்னர் விரோதமாயிருந்து இப்போது கூடிய இவர்கள் பரஸ்பரம் அன்பாகப் பேசிக்கொள்ளுவதைக் காண மனசுக்கு எவ்வளவோ குளிர்ச்சியா யிருக்கிறது. இதன் அந்தரங்கம் யாது ?—


வெளிவந்து விட்டது ! வெளிவந்து விட்டது !
காலத்திற்கேற்ற நூல் ! காதலர்கள் தேடும் நூல் !
மர்மங்களை வெளியிடும் நூல் ! மாந்தர்க்கு அவசியமான நூல் !
நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த
இரகசிய புஸ்தகம் தயாராகி விட்டது !

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

(3-ம் பதிப்பு)

சுமார் 400 பக்கங்கள் மேற்கொண்ட பெரிய புத்தகம்.
அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.
அழகான பயிண்டு. நேர்த்தியான அச்சு

விலை ரூபா. **2—0—0**

நண்பர்களே ! பல வருஷங்களாக நூற்றுக்கணக்கான பண்டை சாஸ்திரங்களையும், மேனாட்டுத் தத்துவ மாசிகைகளையும் ஆராய்ந்து பார்த்து ஆங்காங்கு மலிக்கிடந்த இரகசியங்களைத் திரட்டி யெடுத்து காலத்திற் கொத்தவாறு குடும்பஸ்தர்களுக்குப் பயன் கொடுக்கும் வண்ணம் தாற்பரியங்களுடன் சேர்த்து ஓர் அரிய புத்தகத்தைத்தமிழ் நாட்டாரிடத்தில் பரப்ப வேண்டு மென்னும் எண்ணங் கொண்டு இப்புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உடனே ஓர் பிரதிக்கு ஆர்டர் கொடுத்து அதைப் படித்து வாழ்க்கையின் இரகசியங்களை யறிந்து கொள்ளுங்கள்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன ?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது ?
3. இல்லறத்தி லிருந்து மோக்ஷ மடைவ தெப்படி ?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று ?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந்தரக் கூடியவள்.
9. ஒவ்வொருதேசத்திலும்நாணம்எந்தநிலைமையிலிருக்கிறது?
10. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும் ?
11. நிர்வாணமாயிருப்பதின் தத்துவ மென்ன?

12. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?

13. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?

14. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்கு முள்ள வித்தியாசம்.

15. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?

16. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப் படுத்துவது?

17. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப் படுத்துவது?

18. தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?

19. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?

20. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?

21. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.

22. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.

23. ஸ்திரீ புருஷர்களின் மர்ம அங்கங்களின் அமைப்பும் அவைகளின் நேர்மையான உபயோகமும்.

24. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?

25. சங்கம காலத்தில் கடிப்பது, கிள்ளுவது, தலைமயிரைப்பிடித்திழுப்பது இன்னும் பல தொழில்களால் அதிகமான இன்பம் பெறல்.

26. வாழ்க்கையில் முக்கியமாய்ப் பெண்கள் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்.

27. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப் போக்கடிக்க சுலபமான வழிகள்.

28. மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.

29. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?

30. தம்மனோபாவனையின்படி ஆண், பெண் உற்பத்தி செய்து கொள்ளும் தன்மை.

31. கர்ப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.

32. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.

33. அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.

34. சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரக்ஷிக்கும் கிரமம்.

35. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.



36. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.

37. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?

38. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதைமட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய விடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுகொலை அநியாயம்.

39. கலியாணமான புது தம்பதிகள் தமது வாழ்க்கையை சமூகத்திற் கொத்தவாறு எப்படிச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

40. பலராலும் புகழப்படும்படி தம்பதிகள் நடந்து கொள்வதெப்படி?

41. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பலமாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமர்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்?

42. குழந்தைகள் விஷயத்தில் தாய் தந்தையர் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

43. மூன்று வயது குழந்தைக்குக்கூட காதலுணர்ச்சி உண்டாகிறதென்று எப்படிக் கண்டுபிடிக்கப் பட்டது? அவைகள் சுயமாகவே என்னென்ன வழிகள் இன்பமடைகின்றன?

44. சிறுவர் சிறுமிகள் சுயமாகவே எப்படி இன்பம் பெறுகின்றனர்? குதிரை சவாரி செய்யும் போதும், ஸைகில் சவாரி செய்யும் போதும், தையல் இயந்திரத்தில் வேலை செய்யும் போதும் குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு நடக்கும்போது அவைகளின் கால் மர்ம அங்கத்தில் அடிக்கடி படும்போதும், தூண்பேரிலோ, நாற்காலியின் பேரிலோ சாய்ந்து கொண்டிருக்கும் போதும் எப்படி இன்பம் அனுபவிக்கப் படுகிறது? அமெரிக்காவிலும், ப்ரான்ஸிலும் சிறுவர் சிறுமிகள் செய்த இயற்கை விருத்தமான செயல்கள் இந்நாட்டிலும் பரவி விட்ட விஷயம். இது விஷயமாக ஒரு தென்னிந்திய பிராமண ஸ்திரீ தன் அநுபவத்தை எழுதியுள்ள வரலாறு.

45. இந்த இயற்கை விருத்தமான செயல்களால் ஜனங்கள் எப்படித் துன்புறுகின்றனர்? இத்துன்பத்தைப் போக்கடிக்கும்

மார்க்கங்கள் என்ன ? இவ்வித அக்கிரமங்களினின்றும் குழந்தைகளை எப்படிகாப்பாற்றுவது? இவ்விஷயத்தில் மட்டும் பெற்றோர்கள் ஏன் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ளல்வேண்டும் ?

46. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள்வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள். ஏனென்றால் அங்கும் ஏமாற்ற மடையாமல் இன்பங் காண்பதற்கு அநேக வழிகளுண்டு.

47. ஸ்திரீ ரோகங்கள் இவைகளிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது.

நண்பர்களே ! இது காறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசியங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மை செய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்டபுத்தகமல்ல.

முக்கிய குறிப்பு:—எங்கள் புத்தகம் நன்றாக விற்பனையாகிறதென்று கண்டு எமக்குப் பின்னால் அநேகப் போலிப்புத்தகங்களைப் பலர் அச்சிட்டு விற்க எத்தனிக்கின்றனர். எனவே நீங்கள் புஸ்தகம் வாங்கும்போது "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள். பெயரில் சிறிது மாற்றம் இருந்தாலும் வாங்க மறுத்து விடுங்கள்.

**"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம்தான்.**

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

Kesari Printing Works Madras.

## பெரியாரின் மொழிகள்

(507-ம் பக்கத் தொடர்ச்சி.)

198. How poor are they that have not patience!

SHAKESPEARE.

பொறுமை யில்லாதவர்கள் எவ்வளவு எளியவர்கள் !—ஷேக்ஸ்பியர்.

199. Our bodies are our gardens, of which our wills are gardeners.

SHAKESPEARE.

நமது தேகங்களாகிய தோட்டங்களுக்கு மனது தோட்டக்காரர்.
—ஷேக்ஸ்பியர்.

200. A soul without reflection, like a pile Without inhabitant, to ruin runs.

YOUNG.

யோசனையில்லாத ஆத்மா குடியில்லாத வீட்டைப்போல் நாசமடைகிறது. —யங்.

201. Each morning sees some task begun,
Each evening sees its close:
Something attempted, something done,
Has earned a night's repose.

LONGFELLOW.

ஒவ்வொரு காலையிலும் ஏதாவது வேலை ஆரம்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாலையிலும் அந்த வேலை முடிக்கப்படுகிறது. ஏதாவது செய்யப் பிரயத்தனப்பட்டு முடிந்தால் பிறகு அமைதி ஏற்படும்.

—லாங்பெல்லோ.

202. In every person who comes near you, look for what is good and strong: honour that; rejoice in it, and as you can, try to mate it. RUSKIN.

உன்னை அணுக வருகிற ஒவ்வொருவரிடத்திலும் உள்ள நல்லதைக் கவனித்து மரியாதை கொடு. அதைப்பற்றி ஸந்தோஷப்படு. அதன்படி நடந்துகொள்ளப் பிரயத்தனப்படு. —ரஸ்கின்.

203. Heaven suits the back to the burden. What a nice thing it is to think that it should be so, is n't it?

DICKENS.

கடவுள் மனிதனுக்கு பாரத்துக்குத் தகுந்தாற்போல் தாங்கும் சக்தியைக் கொடுக்கிறார். அதைப் பற்றி நினைப்பது எவ்வளவு நேர்த்தியா யிருக்கிறது. —டிக்கன்ஸ்.

204. Surely it is a characteristic trait of a great and liberal mind that it recognises humanity in all its forms and conditions.

LONGFELLOW.

ஒரு பெரிய தாராளமான மனிதனுடைய சுபாவம் என்னவென்றால், மனுஷத்தன்மையை ஸர்வாவஸ்தையிலும், ஸர்வ நிலைகளிலும் அறிந்து கொள்வது. —லாங்பெல்லோ.

205. I recommend you to take care of the minutes, for the hours will take care of themselves.

LORD CHESTERFIELD.

அற்ப காரியங்களில் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டால், பெரிய காரியங்கள் தானாகவே முடியும்.

—லார்ட் செஸ்டர்பீல்ட்.

206. The purest treasure mortal times afford,
Is spotless reputation.

SHAKESPEARE.

அநித்யமான காலம் கொடுக்கக்கூடிய சுத்தமான புதையல் மாசில்லாத கீர்த்தி. —ஷேக்ஸ்பியர்.

207. Every right action and true thought sets the seal of its beauty on person and face; every wrong action and foul thought its seal of distortion.

RUSKIN.

ஒவ்வொரு நல்ல காரியமும், உண்மையான எண்ணமும், ஒவ்வொரு மனிதனுக்கும் முகத்தில் அழகைக் கொடுக்கிறது. ஒவ்வொரு கெட்ட காரியமும் கெட்ட எண்ணமும் முகத்துக்கு அவலக்ஷணத்தைக் கொடுக்கிறது. —ரஸ்கின்

208. Breakings up are capital things in our school days, but in after-life they are painful enough.

DICKENS.

சண்டையிட்டுப் பிரிதல் நம்முடைய பாலியத்தில் நல்லதாகத் தோன்றுகிறது, முதிர்ந்த வயதில் வருத்தத்தை விளைக்கிறது.

—டிக்கன்ஸ்.

209. There is always room for a man of force, and he makes room for many.

EMERSON.

வீம்பு உள்ளவனுக்கு எப்பொழுதும் இடம் உண்டு. அவனும் அநேகம் பேர்களுக்கு இடம் உண்டுபண்ணுகிறான். —எமர்ஸன்.

210. O, speed the moment on
When Wrong shall cease, and
Liberty and love,
And truth and Right throughout
the world be known
As in their home above.

JOH. GREELEAF WHITTIER.

தப்பானது சீக்கிரம் முடியட்டும். ஸ்வயேச்சையும், அன்பும், உண்மையும் சரியாயுள்ளதும் உலகம் முழுவதும் சுவர்க்கத்தில் இருப்பதுபோல் பரவட்டும்.

—ஜோ. கிரீன்லீப் விட்டர்.

211. Defend your reputation, or bid farewell to your good life for ever

SHAKESPEARE.

உன் கீர்த்தியைக் காப்பாற்றிக்கொள், இல்லாவிட்டால் உன் வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக்கொள்.

ஷேக்ஸ்பியர்.

P. E. பாஷியம் நாயுடு

---

கோபங்கொண்டோரிடம் பதில்சொல்லாதிருப்பது அவர்களின் கோபத்தைத் தணிக்கவல்ல ஒரு நல்ல மருந்து. இதை யறியாததினாலேயே அண்ணனுக்கும் தம்பிக்கும் சண்டை; மனைவிக்கும் பூசல்; மாமிக்கும் மருமகளுக்கும் மண்டையுடையும் சங்கதி. இதுபோல் நெடுக உண்டு.

அடுப்பங்கரையிலிருக்கும் பெண்கள்தான் என்றாலும், அவர்களறிந்திருக்கும் வைர்வம்பு செய்தியை வெளியில் அலைந்து வரும் ஆடவன் அறிவானா?

# ஆசிரியருக்குக் கடிதங்கள்.

காங்கிரஸ் நகரில் மாதர் மகாநாட்டுக்கு நான் போயிருந்தேன். பெண்மக்களின் நிலைமையைப்பற்றி வெகு அழகாய்ப் பேசினார்கள்தான். ஆனால் செய்கையில் வருவது எப்போதோ! எனினும் ஒன்று; வாசித்த அங்கனாமணிகள் இப்போது அதிகரித்து வருகிறார்கள்; இத்துடன் பெண்களைக் கூட்டி, வாசித்த வனிதைகள் மேடைமீது வெகு அழகாய்ப் பேசுவதைக் காணும்போது பெண்மக்கள் இவ்வளவு முன்னேற்றத்துக்காவது வந்துவிட்டார்களே என்று சந்தோஷமே.

காங்கிரஸ்நகரில் கதர்காட்சிச்சாலையைப் போய் பார்த்தேன். வெகு அழகான புடவைகளும், நைசான துணிகளும் அநேகம் இருந்தன. பஞ்சாப் தேசத்தார் தான் வெகு நைசாகநெய்த புடவைகளும் ஜிகினா வேலைகள் செய்த கரைகளுடன் கொண்டுவந்திருந்தனர். வெகு அழகா யிருந்தது. இவ்வளவு நேர்த்தியாக கதரில் நெய்துவிட்டது பார்க்க சந்தோஷமா யிருந்தது கோட் துணிகளும் வெகு தினுசு தினுசாக இருந்தது. எல்லாம் வடதேசத்தில் நெய்தவைகளே. நம் ஊர் கதர் அவ்வளவு நன்றாயில்லை. தம்பி கோட் எடுப்பதற்கு விலை கேட்டதற்கு அப்படியே பீசாக 20—கெஜம் வாங்கினால் தான் தருவோம் சில்லரை கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். வாங்கவில்லையே என்று வருத்தம் அவனுக்கு. அவ்வளவு நைசாக மேகவர்ண கலரில் இருந்தது. நம் ஊர் கதரல்ல. மற்ற கதர் கடையிலும் அப்பேர்ப்பட்ட துணியில்லை. அகில இந்திய கதர் காட்சி யாகையினாலேதான் எல்லாவித நேர்த்தியான துணிகளும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்துக் குவிக்கப்பட்டிருந்தன.

பிரிட்டிஷ் சாமான்களின் காட்சியை முதல் இடத்தில், யாவருக்கும் நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் வைத்து விட்டு கதர் காட்சியை எங்கோ ஓர் மூலையில் பந்தல் போட்டு வைத்துவிட்டார்

---

உப்புப் பெறாத விஷயத்தைக் கணவன் வரையிலும் எட்ட வைத்து வீணே குடும்ப மனஸ்தாபமுண்டாக்கும் அறிவற்ற பேதைப்பெண்களை என்னென்று சொல்ல!

2-23 169833

கள்! வெகு பேருக்குக் கதர் காட்சிச் சாலையிருந்த விடமே தெரியாததால் பார்க்காமல் போய்விட்டார்கள். நானும் அதில் சேர்ந்தவள்தான். அப்பால் மறுநாள் ஒருவர் எங்களைக் கதர் காட்சிக்கு இட்டுக்கொண்டு போனார்கள். எல்லாருக்கும் தெரிந்த முன்பக்கத்திலிருந்தால் வெகுபேர் போய்பார்த்து இருப்பார்கள். எங்கோ ஓர் மூலையிலிருக்கவே பலருக்கும் தெரியாமல் போய்விட்டது. இப்படிகூட காங்கிரஸ்காரர்கள் செய்வார்களா? கதர் சாலையை முன் அணியில் வைத்துப் பிரிட்டிஷ் காட்சியை அப்பக்கத்தில் வைக்க இது தெரியாமற் போனதென்ன? இவர்கள்தானா பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிப்பவர்கள் என்று ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டார்கள்.

அவசியம் ஒவ்வொருவரும் கதர் காட்சியைப் போய்ப்பார்த்து இருக்கவேண்டும். ஏனெனில் இவ்வளவு நேர்த்தியாகவும் நைசாகவும் கதரிலேயே நூற்று நெய்கிறார்களா என்று தெரிந்துகொள்ளுவதற்குத்தான். கதரையே உடுப்பவர்கள் அக்காட்சியைப் பார்த்திருந்தால் எவ்வளவோ கொண்டாடுவார்கள். உள்ளதை வரைந்தேன்.

ஸகோதரி மனோரஞ்சினி தேவி.

## அவரவர் கௌரவம் அவரவரோடே!

தகப்பனார் தாசில்தார் என்றால் மகனுக்கும் அந்த கௌரவம் வந்துவிடுமோ? "நாங்கள் தாசில்தார் குடும்பம்" என்று மகன் சொல்லிக் கொள்வானானால் அதனால் ஏதேனும் பெருமை யுண்டோ? அவனே தாசில்தாராக ஆவானானால் அப்போதுமட்டும் அவனுக்கு அந்தக் கௌரவம் கிடைக்கும் தான். குட்டிக் கரணம் போட்டாலும் இந்த ஜென்மத்தில் தாசில்தார் ஆவதற்கு வழிகிடையாத—அதற்கேற்ற படிப்புமில்லாத இவன் தன் தகப்பனார் தாசில்தாராயிருந்ததை எண்ணிக்கொண்டு "நாங்கள் தாசில்தார் குடும்பம்" என்றால் அதில் ஒரு பெருமையுமில்லை. தகப்பனாரின் தாசில்தார் கௌரவம் அவரோடே போயிற்று! குமஸ்தாவாயிருந்து 26-ரூபா சம்பளத்தில் இருமிக்கொண்டுள்ள பெருமைதான் இப்போது இவனுக்குச் சொந்தம். இது தெரியாமல் கண்டபடி உளராதே!

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு.

(511-ம் பக்கத் தொடர்ச்சி.)

87. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

என்பது தமிழ்ப் பழமொழி. "செடியில் வளைந்தால் மரத்தில் வளையு" மென்பது ஆங்கிலப் பழமொழி. ஒரே பொருளைக் கருதி வியவஹரிக்கும் இப்பழமொழிகளின் கருத்தை விசாரிக்கப் புகுந்தால் சிறுவர் சிறுமியர்களுக்கு இளமையில் படியும் குணமும், எண்ணமும், ஒழுக்கமும் பிறகு எக்காலத்திலும் மாறுவது அருமையாமென விளங்கும். இது நமது அநுபவத்தில் எவ்வளவு ஒத்திருக்கிறதோ பார்ப்போம். முற்றும் கல்வியின்றி, பெற்றவளிடுப்பிலிருந்து ஐந்து வருஷத்தில் ஒரு சிறுவன் கற்கும் பதங்கள், பின்னைந்து வருஷம் அவன் பாடசாலையில் வெகு சிரமப்பட்டுக் கற்கும் பதங்களைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாய் இருக்கும் என்பதற்கு சாக்ஷியும் வேண்டுமோ? தமது சுக ஸந்தோஷங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் அயலாருடன் கூடிக்கலந்து அநுபவிக்க வேண்டுமென்னும் விருப்பம் இம்மானிடப் பிறப்புக்குரித்தான பல குணங்களிலொன்றல்லவா? இது மற்ற குணங்களைப்போல வயது வந்தபின் தோன்றாமல் பசி தாகங்கள் ஆரம்பமான இளமைப் பருவத்திலேயே ஜனிக்கின்றது. ஒரு சிசு பிறந்து சில நாள் கழிந்தவுடனே தான் புலம்புவதினாலும் நகைப்பதினாலும் தன் கருத்து அயலாருக்கு நன்கு விளங்காமைகண்டு, நாம் எப்போது பேசக்கற்று சகவாசயோக்கியராகப் போகிறோமென்று ஏக்கமுற்றுப் பல நாள் இரவும் பகலும் வருந்தி ஓரெழுத்தை யுச்சரிக்க அறிந்துகொண்ட மாத்திரத்தில் தனக்குப் பிரம்மபட்டம் வந்துவிட்டதுபோல் மகிழ்ந்து வேறு பல பதங்களின் உச்சரிப்புகளையும் கற்க முயல்கின்றது. சிசுப்பிராயத்திலுள்ள இந்த உணர்ச்சியானது பிறகு குறைந்துவிடுகின்றது. ஆயினும் இந்த சுறுசுறுப்பின் சாயல் பால்யம் முற்றிலும் இருப்பதால் எவ்விதவித்தையும் சுலபத்தில் பதிந்துவிடுகின்றது. இவ்வித இளமையிலேயே பிறர்மீது அன்பாயிருக்கவேண்டிய தத்துவத்தையும் போதித்தால் எவ்வளவு சிலாக்கியமாயிருக்கும்! அவ்விதம் போதனை பெற்று ஐந்தில் வளையாவிடில் ஐம்பதில் ஒருபோதும் வளையா. அன்பு என்ற பெரிய விஷயத்தைக் குழந்தைகட்கு எப்படிப் போதிப்பது? பெற்றோர்கள் நடந்து காட்டியே

போதிக்கவேண்டும். அன்பைப்போலவே சத்தியம், கீழ்ப்படிதல் போன்றவற்றையும் போதிக்கவேண்டும். இவ்விதம் போதித்து அன்பின்மணிகளாக்கிவிட்டால் அந்தக் குழந்தை பிற்காலத்தில் உலகுக்கே அன்பின் களஞ்சியமாக விளங்குதல் கூடும். இது தாய் தந்தையரிடமிருந்து பழகி யறியவேண்டிய பயிற்சியாகும்.

***

ஆதியில் குணங்களமைவது பழக்கத்திலேயாகிலும், பிறகு அவை மாறிவிடுவதும் உண்டு. அதற்கும் தாய் தந்தையரே காரணம். அப்பாவும் அம்மாவும் கீரியும் பாம்பும்போல் நிற்கும் வீட்டில் குழந்தைகள் அன்பைக் கற்றுக்கொள்வது எப்படி? தம்பதிகள் ஒருவரையொருவர் எதிர்க்கும் அவ்வளவு அந்யோந்யத்தில் பாலபாலிகைகள் உத்தம சீலங்களை யுணர்தல் யாங்ஙனே? வெகு பிரயாசைப் பட்டும் நற்குணங்கள் கைகூடாவிடினும், துற்குணங்கள் யாதொரு பிரயாஸமுமின்றித் தாமாய் அமையுமென்பதற்குப் பயிரும் களையும் விளைவதே போதுமான திருஷ்டாந்தமாகும்.

***

தாய் தந்தையர் பிறரிடத்து அன்பு காட்டுவதில் ஒரு நிச்சய புத்தியற்றவர்களாய் அடிக்கடி மாறுவார்களாகில், அவர்களிடமிருந்து அக்குணங்களைப் பயிலும் அவர்களின் குழந்தைகளும் அவ்விதமே குட்டிக்கரணங்கள் போடுவதில் தேர்ந்தவர்களாகி விடுவார்கள். ஒரு காலத்தில் சிலரிடத்து அன்பாக இருந்து எவ்வளவோ ஆதரவாய் நடத்தும் பெற்றோர், அந்த நாளில் தம்மக்களும் அவர்களிடத்து அத்யந்த வாத்ஸல்யமுடையோராக விளங்கக் காண்பர். பின்னிட்ட நாட்களில் அந்தப்பெற்றோர் நிஷ்காரணமாக முந்திய அந்த சிலரிடத்து அன்பு குன்றிப்போய் அதைப் பலவழிகளிலும் அலக்ஷியத்திலும், நிஷ்டூரத்திலும் காட்டிக்கொள்வார்களானால், அதைப்பார்த்து அவர்களின்மக்களும் இச்சிலரிடத்துப் பழகிய அன்புமாறி அன்னியர்கள் எனப் பாவிக்கத்தொடங்கி, இவர்களுக்குக் கொட்டுகிற அன்னத்தைப் பந்துக்களுக்குப் போட்டாலாவது ஒரு பேர் இருக்குமே என்று அச்சிலரின் முன்பே வாய் விட்டுச் சொல்லவும் தொடங்கிக்கொள்கிறார்கள். ஏன் அப்படிச் சொன்னாயென்று பெற்றோர் கேட்கவும் போகிறதில்லை. அச்சிலர் அன்னியர்கள் என்று ஏற்கெனவே தாம் பலமுறை கூறியுள்ள சாதாரண (?) பதத்தைத் தமது மக்கள் உச்சரித்தால் அது ஒரு குற்றமா என்றே நினைத்து மவுனமாயிருந்துவிடுவர். இதைப்பற்றி அந்தச் சிலர் மனம் நொந்து நாங்கள் என்ன அன்னியர்களா என்று அக்குழந்தைகளின் பெற்றோரைக் கேட்கவந்தால்——— "என்னவோ குழந்தை சொன்னதற்கு இவ்வளவு பிரமாதம் செய்கிறீர்களே"—என்று



அவர்களையே குத்தித் துளைத்து வாயைப்பூட்டி அனுப்பிவிடுவர். இவர்கள் அன்பு கெடவே அவர்களின் மக்களும் அன்பு கெட்டுவிடுகிறார்கள். கடைசியில் அவர்களின் வீடே அந்த ஏமாறிய அன்பின்மணிகளான சிலருக்கு அன்னிய வீடாய் விடுகிறது. இவ்வித ஏமாற்றுகை மகா தோஷகரமான பாவச் செயலாகும். பிறர்பால் அன்பாயிருந்த மக்களைப் பிறகு அவர்கள்பால் வெறுப்புக்கொள்ளும்படி பெற்றோரே தம் காரியங்களால் அவர்களைத் தூண்டுவிப்பதை இங்கு உணர்க. அவ்விதமே, அம்மக்களும் முந்திய அன்புநிலைமாறிக் கல்நெஞ்சினராய், செட்டுப் பேர்வழிகளாய், விலங்குந்தன்மையராய், சுயநல நோக்கினராய் முடிகின்றனர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது பழமொழியாயினும், ஐந்தில் வளைந்ததும்கூடப் பிந்திய ஸகவாச தோஷத்தால் வளைதலின்றி வேறு விதமாய் முடிவதையும் இங்கு ஒருவாறு காண்க.

88. அன்புள்ள குணம், அலையில்லா நதி.

அலையில்லா நதியானது மிக்க சாந்த வடிவினதாய் விளங்கும். அவ்விதமே அன்பான குணம் பொருந்தியவர்கள் எதிலும் அமைதியும் சாந்தமுமாயிருந்து தமது அன்பாலேயே அனைவரையும் சந்தோஷப்படுத்துவார்கள். இந்த அன்பின் தன்மை அவசரப்புத்தியுள்ள அற்பகுணமுள்ளவர்கட்குப் பொருந்துவது கஷ்டம். அவசரப்புத்தி எத்தகையோர்மீதும் சந்தேகப்பட வைக்கும். சீறி மீறிக் கடிதங்கள் எழுதச்செய்யும். ஒரு விஷயம் நடவாதிருக்கு முன்னமே அது நடந்ததுபோல் தமது அவசரப்புத்தியில் நினைத்துக்கொண்டு கண்டபடி தூற்றத் தொடங்கிக்கொள்ளும். அவசரப் புத்தியினருக்கும் அன்புக்கும் வெகு தூரம். இந்த அவசரப் புத்தியினர்களின் சகவாசமில்லாமலே ஒதுங்கிக்கொள்வதுதான் மானமாய் வாழ்வதற்கான வழி. அவசரப்புத்திக்காரன் பணம் படைத்தவனாயிருக்கலாம். அவன் வாசல் வலாக்கும், அவன் பெருமை யடித்துக்கொள்ளட்டும். அதை யொருபொருட்டாக எண்ணி அவனை லக்ஷியம் செய்யப் போவதில்லை. அவன் என்றைக்காயினும் அவசரப் புத்தியையொழித்து நல்வழிக்குத் திரும்பினானென்று கேள்விப்படின் அப்போதும்கூட அவனிடம் ஜாக்கிரதையாகவே பழகவேண்டும். அன்பு என்ற அழகிய குணத்திற்கு வேண்டியது அமைதி, சாந்தம், சகிப்பு, கருணை போன்றவைகளே. அவசரப்புத்தி, பதட்டமான வார்த்தைகள், திட்டிவிட்டுத் தித்திப்பான வார்த்தைகளில் மயக்கவரும் வஞ்சகம், இழிவுபடுத்தி எழுதும் மூடத்தனம் முதலியவற்றால் அன்பு கெடுவதன்றிப் பெருகுவதென்பது ஒருநாளுமில்லை.

(தொடரும்.)

---

சிலருக்குப் படித்துக்கொண்டிருக்கிறேனே யென்கிற விவேகமிருப்பதில்லை. அப்பொழுதுதான் தொணதொணவென்று பேச வந்துவிடுகின்றனர்.

# ஆங்கில—தமிழ்க் கடிதங்கள்

(All Rights Reserved.)

## Letter X.

### The Answer.

*Sir,*

Your's just to hand and regret to hear of your—inconveniences owing to the failure of two principal creditors, the account between us remind unsettled. I am glad to say that I could answer your demand as I have just received a remittance from Natal. I enclose herewith an order on Mr. Nanu Iyer, the Banker, for the balance of Rs. 50/- due by me which I hope will cover your difficulty.

Your sincere-well-wisher,
*Ramanujam.*

## 10-ம் கடிதம்.

### அதற்குப் பதில்.

ஐயா,

உமது காகிதம் எனக்கு இப்போதுதான் சேர்ந்தது. உமக்கு நேரிட்ட தொந்தரையைக் கேட்டு விசனமடைந்தேன். நமக்குள் இருக்கும் கணக்கு சீக்கிரத்திலே தீராதிருந்ததானது எனக்குக் கொடுக்க வேண்டிய இரண்டு பெரிய கடன்காரர் கொடாமற் போனதினால்தான்; நெட்டாலிலிருந்து பணம் எனக்கு இப்பொழுதுதான் வந்ததால் உம்முடைய கடன் முழுமையும் செலுத்திவிட என்னாற் கூடும்படி இருப்பது எனக்கு மெத்த சந்தோஷம். நான் கொடுக்கவேண்டிய பாக்கிரூபாய் 50-தான்; இதற்கு ஒரு உண்டியல் மிஸ்டர் நானு ஐயர் எனும் பாங்கர் பேருக்கு அனுப்பியிருக்கிறேன். இந்நேரம் வந்திருப்பதையும் அல்லாமல் மற்ற சகல தொந்தரையையும் நீக்கிக் கொள்ளுவீரென்று நம்பி யிருக்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையாக உமக்கு,
க்ஷேமம் கோரும்,
இராமாநுஜம்.

---

ஒருவன் தெரியாத்தனமாய் செய்துவிட்ட பிழையை பலர் முன்னிலையில் இழித்துப்பேசி ஆநந்தப்படும் மௌடீகர்களின் குணம் என்னவோ?—இது ஒரு போக்கு.

---

எல்லாம் போய் மண்கலயமே மீதியிருந்தும், 'நாங்கள் அப்பொழுது அப்படி வாழ்ந்தோம்' என்கிற பேச்சைச் சப்பிக்கொண்டே இருப்பினோடு காலத்தைக் கழித்துவிடுகின்றனர் சிலர்.

---

ஆரம்பத்தில்தான் அறியாமுகம். நாலு நாள் பழகினதும் வெகு காலம் அறிந்த முகம் போலாய்விடுகிறது.

# செடிகள் பரவும் விதம்

மேன் மேலும் விஸ்தரித்துப் படரும் குணம் செடிகளுக்கு உண்டு. சில நாளிருந்து பட்டுப் போகும் செடிகளானாலும் சரி, வெகு நாள் நீடித்திருக்கும் செடிகளானாலும் சரி, அவைகளினின்று இலை, காய், பூ, முதலியன உண்டாவது பக்கத்தில் மற்றொரு செடியை உற்பத்தியாக்குவதற்கென்றே தோன்றுகிறது. செடிகள் வளரும் விதம் ஒன்றன்று; பல உண்டு. சிலவற்றினின்று விதைகள் உண்டாகின்றன. சில வேரிலிருந்து நரம்பு போன்ற காம்புகள் விடுகின்றன; சில கீழ் நோக்கிக் கிளைகள் விட்டு, அக்கிளைகளினின்றும் பூமியில் வேரூன்றுகின்றன; உதிர்ந்து போன இலைகளும், செடியிலிருந்து வெட்டப்படும் துண்டுகளும் வேர்விட்டு முளைக்கும்படியாகச் செய்யலாம்.

***

செடிகளின் விதைகள் வளரும் பருவத்தை அடைவதற்கு முன் எளிதில் சேதப்படாமலிருக்கும்படியாக மிகவும் பத்திரமாய்க் காப்பாற்றப் படுகின்றன. இலந்தையின் விதை எவ்வளவு ஜாக்கிரதையாய் பழத்தின் நடுவில் அமைக்கப்பட்டு ரசம் தங்கிய பருத்த சதையினால் மூடப்பட்டிருக்கிறது; மாம்பழத்தின் கொட்டை அதற்குள்ளிருக்கும் விதையை சூரியனுடைய வெப்பத்தினின்றும், மழையினுடைய குளிர்ச்சியினின்றும் காக்கிறது. இவ்வண்ணமே ஸகல விதமான விதைகளும் தீங்கு நேரிடாதபடிக்கு அடக்கம் பண்ணப்பட்டிருக்கின்றன. கெட்டியான மூடியில்லாத விதைகளுக்கு வலிமையான தோலாவது இருக்கும். தேங்காயின் கொட்டை நாரினாலும், அதன் மேல் பலமான தோலினாலும் மூடப்பட்டிருக்கிறது. மனிதர்கள் சாமான்களைச் சேதப்படாதவாறு இன்னின்ன விதமாய்ப் பத்திரப் படுத்தி யனுப்ப வேண்டுமென்பதைக் கூட, கடவுள் தமது சிருஷ்டிப்பொருள்களின் ஜீவதாதுவைப்

---

சிலருக்குப் பொருள் தேடுவதில் பைத்தியம்; சிலருக்கு ஆடம்பரத்தில் பைத்தியம்; சிலருக்குப் புஸ்தக வாசிப்பில் பைத்தியம், ... பைத்தியச் செய்கைகள் பலவுண்டு. இதில் நல்லதுமுண்டு.

கும். வியாதி முதலிய தீங்கு ஒன்றும் வரவொட்டாமல் காத்துக் கொள்ளும். அன்றியும் சரீரத்துக்கும் மனதுக்கும் கெடுதியான அநேக துர்க்குணங்கள் அதற்குப் பகையாதலால், அது நிலையாய்க் குடிகொண்டிருக்குமிடத்தில் அவைகள் நெருங்க மாட்டா. சரீரம் சுத்தமாயிருந்தால் மனதுக்கும் சுத்தமுண்டு. தன்னைச் சுற்றிலும் இருக்கிறபொருள்களின் நிறத்தைத் தன்னிடத்தே பதிந்துகொள்வது மனிதனுடைய மனதின் இயல்பு. ஆகையால் நமக்கு அடுத்திருக்கிற பொருள்கள் அழகாகவும் சுத்தமாயுமிருந்தால், திவ்யமான தோற்றங்களும் எண்ணங்களும் உண்டாகி நற்குணங்களும் நற்செய்கைகளும் அமைந்தவர்களா யிருக்கலாம்.

### சுத்தம்—ஒரு வசீகர மருந்து.

---

பெண்மணியே! உனது பர்த்தாவின் மனதைக் கவர விரும்பினால் உனது சுத்தத்தினால் அதைப்பெறலாம். உடைகளில் சுத்தம், உள்ளத்தில் சுத்தம், நடத்தையில் சுத்தம், வாழ்க்கையில் சுத்தம், வீடு—பாத்திரங்கள் இவற்றில் சுத்தம்—இவ்விதம் யாவும் சுத்தமாயிருப்பின், அதனினும் கணவனை வசியப்படுத்திக் கொள்ளத்தக்க வசியமருந்து உலகில் வேறெதுவுமில்லை.

வேலை செய்யுமிடத்திலோ நேரம்போவது பாரமாகத் தோன்றுகிறது. வெளி வந்ததும் அதே நேரம் ஒரு நிமிஷமாகப் பறந்து விடுகிறது. அது போலவே எதிர்பார்த்திருந்த நாள் வருவதுதான் வெகு காலம்போல் என்னை வைத்து விடுகிறது. அந்த நாள் வந்ததும் பொழுது விடிந்தாற்போல் ஒரு மாதப் பொழுது போய்விடுகிறது.

---

‘நான் செத்துப் போய்விட்டாலும் தேவலாம்’ என்று சலித்துச் சொல்லுகிறவர் நெஞ்சைத் தொட்டுப்பார்த்தால், நெடுங்காலம் இருக்கவேண்டுமென்கிற அவர்களது எண்ணம் நன்றாகத் தெரியும்.

---

சாப்பிடச் சோறிருக்க, அநுபவிக்கச் சொத்து, மனைவி, பிள்ளை குட்டிகளிருக்க, அவன் தான் சீக்கிரத்திலேயே கண்ணை மூடிக்கொள்கிறான். ஒரு [illegible] ஆகாரத்திற்கோ—கோவணத்திற்கோ ஆவலாய்ப் பறப்பவனோ?—[illegible] தான் நூறு வருஷ ஆயுள்!

# ஸ்ரீ ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி

## — அவரது கொள்கைகள் —

(505-ம் பக்கத் தொடர்ச்சி.)

16. பூர்வ வினைப்பிரகாரம் விளையும் விதியெனப்படுபவைக்கு விடுத்துச் சும்மா யிராமல் சுறுசுறுப்புடனிருத்தலே சிறந்தது. ஏனெனில் மறுபிறப்பில் கர்மங்களைத்திருத்தி அதுவே யமைக்கிறது. பிரயத்தனமன்னியி லிருப்பது யாவற்றையும் கெடுத்துவிடும். எனவே குருட்டுத் தலைவிதியைக் காட்டிலும் இப்பிறப்பில் செய்யும் கர்மங்களே சிறந்தது.

17. பிறருடைய இன்ப துன்பம் லாப நஷ்டம் முதலியவைகளை இரக்கத்துடன் நோக்கி, குணங்களுக் கேற்றவாறு அறிவதினாலேயே மனிதனின் சிறந்த சுபாவம் வெளியாகும். இதற்கு மாறானது வெறுக்கத் தக்கதே.

18. எதில் மனோ வாக்கு காயம் மூன்றும் மேம்படுகிறதோ அதுவே சம்ஸ்காரம். தொட்டிலிலிருந்து சுடுகாடுவரையிலுமுள்ள சம்ஸ்காரங்கள் 16. இவைகளை மனிதன் நடத்தியே தீரவேண்டுமென எண்ணுகிறேன். இறந்தவர்களுக்குத் தகனத்திற்குப் பின் ஒன்றும் செய்யக்கூடாது.

19. தகுதிகளுக்குத் தக்கவாறு அறிஞர்களை அபிமானித்தல்; தொழில் முறை; சிற்ப சாஸ்திரம்; இரசாயனம் முதலானவைகளைப் பயிற்சி செய்து பயன்படுத்திக் கொள்ளல்; கல்வியறிவை யூட்டுதல்; அக்னிஹோத்திரத்தின் மூலமாக வாயு, வானம், மழை, காற்று, முதலியவைகளையும் பரிசுத்தமாக்கல்; இவைகளே யக்ஞம். கடமைகளில் சாலச் சிறந்தது இதுவே.

20. சத்திய சிக்ஷையையும் வித்தையையும் கிரகிப்பதற்கு அருகனும், அதை அடைவதற்கு இச்சையுள்ளவனும் ஆசாரியனிடத்தில் பிரியத்தை உண்டு பண்ணுகிறவனுயு மிருப்பவனே சிஷ்யன்.

---

‘தற்கால நவீன வாழ்வு முன்னோர் முறைக்கு மிக்க விபரீதம். அதனால் வினையும் கேடுக ளனந்தம்’ என்று பிரசங்கி வியாக்கியானித்துப் பேசுகையில் [illegible]த்தில் வெகு பேர் சிரிக்கின்றனர். அதையொரு வேடிக்கைப் பேச்சென நினைக்கின்றனர் போலும்!

21. தாய் தகப்பன், சத்தியத்தைக் கிரகிக்கச் செய்து அசத்தியத்தை விடச் செய்கிறவன் இவர்களே குரு.

22. தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு நன்மை செய்து சத்யத்தை உபதேசிக்கின்றவர் புரோகிதர்.

23. வேதத்தில் ஒரு பாகத்தையாயினும், அங்கத்தையாயினும் கற்றுக் கொடுக்கிற்வர் உபாத்தியாயர்.

24. தர்மாசரணையின் பிரகாரம் பிரம்மசரியத்திலிருந்து வித்தைகளைக் கற்றுப் பிரத்தியட்சாதிப் பிரமாணங்களினால் சத்தியா சத்தியங்களை நிர்ணயித்து அசத்தியத்தை விட்டொழிப்பதே சிஷ்டாசாரம். இத்தகையவர்தான் சிஷ்டர். உண்மையைப் பேசுகிறவன் தர்மாத்மா. சகலருடைய சுகத்தின் பொருட்டும் பாடுபடுகிறவன் ஆப்தன்.

25. பரீட்சை ஐந்து வகைப்படும்:— (1) ஈச்வரன் குணகர்ம ஸ்வபாவம் வேதவித்தை. (2) பிரத்யக்ஷாதி எட்டுப் பிரமாணம், (3) சிருஷ்டிக்கிரமம், (4) ஆப்தர்களுடன் விவாதம், (5) ஆத்மவித்தை இவ்வைந்து பரீக்ஷைகளினால் சத்யாசத்யத்தை நிர்ணயித்துச் சத்தியத்தைப் பின்பற்றி அசத்தியத்தை ஒழிக்கவேண்டும்.

26. மனிதனின் துராசாரம் கலக்கம் இவைகளிலிருந்து நீங்கிக் கொண்டு சிரேஷ்டாசாரத்தையும் சுகத்தையும் விருத்தி பண்ணுவதே பரோபகாரம்.

27. ஜீவன் தன்னுடைய காரியங்களைச் செய்வதில் சுதந்திரன். கர்மங்களுடைய பலன்களை அநுபவிப்பதிலோ பாதந்திரன். ஈசுவரன் தன்னுடைய சத்யாசார முதலிய காரியங்களைச் செய்வதில் சுதந்திரன்.

28. தடையில்லாது சுகவிசேஷங்களை அனுபவிப்பதும், அதற்குத் தகுந்தவைகளைப் பெறுவதுமே சுவர்க்கம்.

29. துன்பங்களை அநுபவிப்பதும், அதற்கு வேண்டியவைகளைச் செய்வதுமே நரகம்.

30. சரீரத்துடன் உலகில் பிரவேசிப்பதே (பிறப்பு) ஜன்மம். காலக்கணக்கில் இறந்த காலம் நிகழ்காலம், வருங்காலம் எனப் பிரிக்கப் படுகிறது.

---

'ஆ! அப்படியா!' என்று அதிசயித்துக் கேட்போரிடம் சங்கதி சொல்லுகிற அநேகர் ஒன்றுக்குப் பத்தாகப் புளுகிவிடுகின்றனர்.



31. ஜீவன்—சரீரம் இவைகளுடைய சம்யோகம் (சேர்க்கை) பிறப்பும், வியோகம் (பிரிவு) இறப்பும் ஆகிறது.

32. நியாயப் பிரகாரம் பகிரங்கமாய் பரஸ்பர சம்மதத்துடன் சம்பந்தம் செய்து கொள்வதே விவாகம்.

33. ஞாபகமிருக்கவேண்டி குணங்களைப் பாடிப் புகழ்வதே ஸ்துதி. அதனால் அன்பும் அதை யொத்த நன்மைகளும் பிரகாசிக்கும்.

34. சுயப் பிரயத்தனங்களினால் கைகூடாத அறிவு முதலிய வரங்களைக் கேட்பதே பிரார்த்தனை. இதனால் விளைவது நிரபிமானம், வணக்கம், சக்தி இவைகளே.

***

35. ஈசுவரனுடைய குணகர்ம ஸ்வபாவங்களைப் போல் தனது குணகர்ம ஸ்வபாவங்களைப் பரிசுத்தமாகச் செய்துகொண்டு, அவரைச் சர்வ வியாபியாக எண்ணி, ஈசுவரனின் சமீபத்தில் தானும், தன் சமீபத்தில் ஈசுவரனும் இருப்பதை யோகாப்பியாசத்தால் பிரத்தியட்சம் செய்து கொள்வதே உபாசனை. இதனால் அறிவைப் பெற மனம் இடம் கொடுக்கும்.

36. மெய்யுரைத்தல், பொய் பேசாதிருத்தல் முதலிய தத்துவங்களை யொத்துக் கொள்ளுகிறேன். ஆனால் பல மதப் பிரிவினைகளையுடைய சண்டைகளை வெறுக்கிறேன். ஏனெனில் அதன் பயன் வீண்கோபமும், மதத்தின் பெயரால் முரட்டுத்தனமான சித்தாந்தங்களுமே. எனவே, எனது வாழ்நாளின் நோக்கங்களாவன:— மனோவாக்கு எண்ணங்களில் சத்தியத்தை நிலவச் செய்தல்; சமய சேர்க்கை; பரஸ்பர பகை யொழித்தல்; நேச பாவத்துடன் தர்க்கித்தல்; மானிட குடும்பத்தின் க்ஷேமத்திற்குக் கீழ்ப்படிந்து பொது நன்மையை வளர்த்தல்.

[இந்த 36-குறிப்புகளினின்றும் ஸ்வாமிகளின் உயர்நல மிக்க உத்தம சிந்தை ஒருவாறு புலனாகும். மற்றபடி அவாது பிற அபிப்பிராயங்களில் நாம் கலந்துகொள்ள விரும்பவில்லை.—ப-ர்.]

---

வேலையாளுக்கு எஜமானனின்பேரிலுள்ள கோபம், அவர் கோபமாயிருக்கிற வரையிலுந்தான். முணுமுணுப்புக்கூட அவர் அருகிலில்லாத சமயந்தான். எஜமானர் எதிரில் வந்து சிரித்த முகத்துடன் பேசவந்தால் இவனும் பல்லிளித்துவிடுகிறான்!

குடும்பத் தலைவன் மனைவி மக்கள் முதலியோரைக் காப்பாற்று நிமித்தம் பொருள்தேட வெளியிற் சென்று களைத்து வந்தால், வீட்டிலோ பெரிய விவகாரமொன்று அவனுக்காக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது! ஆ! அவன் களைத்த மனசு அப்போது என்ன பாடுபடுகிறது?

# பிரபஞ்ச நவீனங்கள்

1. வயதுக் கிரமம் :—

வியாதி, ஆகாரமின்மை, சத்துருக்கள் உபத்திரவம், அகால மரணம், நாகரீகம் இவைகளின் தொந்தரவு இல்லாமலிருந்தால் ஸாதாரணமாக மனிதன் ஏறக்குறைய எண்பது வருஷம் ஜீவித்து இருக்க முடியும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு கணக்கு செய்தால் யானைக்கு இருநூறு வயதும், ஹிப்போபடமஸ் என்னும் நீர் யானை, முதலை, தேரை, குதிரை, ஒட்டகம், காடி, காண்டா மிருகம் முதலிய மிருகங்களுக்கும் நாற்பதிலிருந்து ஐம்பது வயதும், கார்ப், பைக் முதலிய மீன்களுக்கு நூற்றைம்பது வயதும், ஆமைக்கு முன்னூறு வயதும், காட்டுப்பன்றிக்கு முப்பது வயதும், வீட்டுக் கோழிகளுக்கு பதினைந்து வயதும், ஆந்தைக்கு அறுபத்தைந்து வயதும், ராஜாளிக்கு நூற்றறுபதும், கழுகிற்கு நூற்றிருபதும், வாத்து, காக்கை, கிளி முதலியவைகளுக்கு முன்னூறு வயதும், நாய், ஓநாய் முதலியவைகளுக்கு பதினைந்து வயதும், அணிலுக்கு பத்து வயதுமாம்.

2. தானே பற்றிக்கொள்ளும் சிகரெட்டுகள் :—

ஸிகரெட்டுகள் இப்பொழுது உலகமெங்கும் ஸாதாரணமாக எல்லா ஜாதியாராலும் உபயோகப்பட்டு வருகின்றன. அவைகளைப் பற்ற வைக்க முதலில் தீக்குச்சியை உபயோகித்தார்கள். பிறகு நாகரீகம் முற்றவே ஸிகரெட் ஏற்றும் பெட்டியென்று ஒரு சிறிய பெட்டி கண்டு பிடிக்கப்பட்டது. இதை ஏற்றுவதற்கு எண்ணெய் திரி முதலியவை யில்லாமல் மேற்புறம் இருக்கும் சக்கரத்தைத் திருப்பினால் பக்கத்திலிருக்கும் திரியில் கொழுந்து விட்டு எரியும்படியாய் அமைக்கப்பட்டு சென்னையில் சாதாரணமாக பத்தணாவிற்கு விற்கப்படுகிறது. இப்பொழுது சீமையில் தானாகவே பற்றிக்கொள்ளும் ஸிகரெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஸிகரெட்டில் நெருப்பு வைக்கும் பக்கமென்றும் வாயில் வைக்கப்படும் பக்கம் என்றும் இரண்டு பக்கமுண்டு. நெருப்பு வைக்கு முனையில் உருண்டை வடிவமாக ஸிகரெட்டு அளவிற்கு கத்தரிக்கப்பட்டு அதன் மத்தியில் ஒரு ஊசியின் தலையளவு பெருமனாய் கந்தகத்தை வைத்து ஆங்கிலத்தில் டச் பேபர் (*Touch Paper*) என்று சொல்லப்படும் காகிதத்தை ஒட்ட வைத்திருக்கிறதாம். ஸிகரெட்டை வாயில் வைத்துக்கொண்டு இதை கையால் தடவினால் தணல்மாதிரி [illegible] ஸிகரெட்டு பற்றிக்கொள்ளுமாம்.



ஒரு பாஷைக்கு இருவித அக்ஷரங்கள் :—

எல்லா தேசங்களின் பாஷைகளைப்போல் நமது தமிழ் பாஷைக்கும் ஒரேவித எழுத்து வரிசைகளே (*Alphabet*). ஆனால் ஜப்பானிய தேசத்தில் ஜப்பானிய பாஷைக்கு ஒரே காலத்தில் இரண்டு வித எழுத்து லிபிகள் உண்டு. புருஷர்கள் எல்லாரும் 'கடனக' (*Katanaka*) என்கிற ஜாதி எழுத்து லிபிகளையும், (*Alphabet*) ஸ்திரீகள் எல்லோரும் ஹிரணக (*Hiranaga*) என்னும் எழுத்து லிபிகளையும் உபயோகப்படுத்துகிறார்களாம். இதே மாதிரி நமது தேசத்திலும் பூர்வ நாகரீக காலங்களில் ஸம்ஸ்கிருத பாஷைக்கு ஒரே அர்த்தமுள்ளதாய் தேவநாகரம், கிரந்தம் என்று இரண்டு லிபிகள் ஏற்பட்டு இப்போதும் வழங்கிவருகின்றன.

4. நமது முன்னோர்கள் சூரியன் நிலையிலிருந்தும் நக்ஷத்திரங்களின் நிலைகளிலிருந்து எவ்வளவு நாழிகை, மணி, முதலியவைகள் சென்றன என்று அறிந்து கொண்டு தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது நாம் அவைகளை எல்லாம் மறந்துவிட்டு கையில் கைகடியாரம் கட்டிக்கொண்டு அவைகளை பார்த்துக் கொண்டுதான் காலத்தை செலுத்துகிறோம். ஆனால் நமக்கு இருக்கும் 'அவஸர வேலைகளினால்' கடவுள் சிந்தனையை மறந்தது மாதிரி கடிகாரத்திற்கு சாவி கொடுக்கவும் அடிக்கடி மறந்துவிடுகிறோம். சென்னையிலிருந்தால் கோட்டை மணி குண்டும், ரயில் ஸ்டேஷனிற்கு அருகிலிருந்தால் ஸ்டேஷன் மணியும் நமது கடிகாரத்தை மறுசாவி கொடுத்துத் திருப்பிவைக்க உதவுகின்றன. உள்நாட்டு குக்கிராமத்திலிருப்பவர்கள் சாவி கொடுக்க மறந்துவிட்டால் என்ன செய்வது? இந்த கஷ்டத்தை நிவர்த்திக்கவே, லங்காஷைர் மாகாணத்தில் ஒருவர் ஒரு புதிய கடிகாரம் கண்டுபிடித்திருக்கிறார். அக்கடிகாரத்திற்கு சாவி கொடுக்கவே வேண்டியதில்லை. கையில் கட்டிக்கொண்டு நடக்கும் பொழுது மனிதனுக்கு இயற்கையாயுள்ள கைவீசுகளினால் கடிகாரம் தானாகவே சாவிகொடுத்துக் கொள்கிறதாம். பரீக்ஷை செய்து பார்க்க ஐந்து கடிகாரங்கள் செய்து அவ்வைந்தும் சென்ற மூன்று வருஷங்களாய்ச் சரியாய் செல்கின்றனவாம்.

5. தட்டாரப் பூச்சியின் கண்ணில் ஐம்பதினாயிரம் நரம்புகள் இருக்கின்றனவாம்.

6. தங்கசாலையிலிருந்து வெளிக்கிளம்பி நாளடைவில் தேய்ந்து கடைசியில் செல்லாது என்று கஜானாவில் துண்டிக்கப்படும்வரையில் ஒரு காலணா சுமாராக ஒன்றரை லக்ஷம் கைகள் மாறுமாம்.

S. A. ஸ்ரீநிவா[illegible].




## சிறுமியர் வகுப்பு.

37-வருஷங்கட்கு முன்னர் பாலர் வகுப்புக்கென்று வெளியிட்டிருந்த புஸ்தகத்திற்கு 'பாலாதாரம்' என்று பெயரிட்டிருந்தனர். பின்னால் கற்கப்புகும் நூல்களுக்கெல்லாம் இந்த அ, ஆ, இ, ஈ, என்பவைகளும் சிறு பதங்களுமே பிரதான ஆதாரமென்று பொருள்படுமாறு மேற்கண்ட அழகிய பெயரை அமைத்தனர். அது போலவே பெண் கல்விக்கு முக்கிய ஆதாரமும் அஸ்திவாரமுமாய் இருப்பது சிறுமியர் வகுப்பு, அதாவது முதல்வகுப்பே யாகும். இவ் வகுப்பில், அம்மி,—அரிவாள்,—என்றும், டப்பி,—பம்பரம் என்றும் பாடங்கள் ஆரம்பமாகின்றன. இவற்றை உபாத்தினிகள் கருப்புப் பலகையில் எழுதிவிட்டு, அவ்வாறாக எல்லாச் சிறுமிகளையும் படித்துக் கொள்ளுமாறு சொல்லிவிடுகின்றனர். அறிவுள்ள சிறுமிகள் தான் தெரிந்து கொள்ளுகிறார்கள். மந்தபுத்தியுள்ள சிறுமிகளோ ஏதும் தெரியாமல் விழித்துவிட்டு மௌனமாய் வீடு வந்து சேர்கின்றனர். அவர்களை உபாத்தினிகள் கவனிப்பதுமில்லை, சிரத்தையுடன் கற்பித்துத் திருத்துவதுமில்லை. தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்குச் சிறுமிகள் சென்று வருவதே யன்றி அக்ஷர ஞானம் அவர்கட்குச் சரிவர அமையக் காணோம். தமிழ் பாஷையிலுள்ள உயிர் மெய் எழுத்துக்களை வருஷம் ஒன்றாகியும் அவர்கள் பூர்ணமாய் அறிந்துகொள்ள முடிகிறதில்லை.

இந்தச் சிறுமியர் வகுப்புக்கென்று வரும் உபாத்தினிகளோ, அவர்களும் சிறு பெண்களாகவே பல இடங்களிலும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு என்ன கல்வியறிவு அநுபோகம் இருக்குமோ ஈச்வரனுக்கே வெளிச்சம்! அக்ஷராப்பியாசமானது மிகவும் கஷ்டமான ஒரு போதனை. பழய நாளில் இந்த ஸ்தானத்திற்கு மிக்க கல்வி யறிவு வாய்ந்தவர்கள் அமர்ந்து குழந்தைகளைப் பயிற்றுவித்து ...ன்னத நிலைக்குக் கொண்டுவந்தனர். இப்பொழுதோ இந்த முக்கிய விஷயம் சரிவரக் கவனிக்கப்படுவதில்லை. உபாத்தினிகள் ஒப்புக்குப் பாடம் சொல்லித் தந்து நழுவும் நிலையில் காணப்படுகின்றனரே யன்றி சிரத்தையுடன் ஒவ்வொரு சிறுமியையும் தனித்தனிப் பாடம் கேட்டு, அந்தந்த சிறுமியின் மதி நுட்பத்திற்குத் தகுந்தபடி கஷ்டப்பட்டுப் போதித்து அக்ஷரஞானம் உண்டாகும்படி செய்வதில்லை. சில சிறுமியர் ஒன்றரை வருஷ காலமாய் பள்ளிக்



கூடம் சென்று வந்தும், இன்னும் அவர்களுக்குத் தமிழ் எழுத்துக்
களில் பாதிகூடத் தெரிந்தபாடில்லை. கேட்கப்புகின் டப்பி, பம்பரம்
என்பர். இதென்ன பரிதாபம்! அவர்களுக்கு இந்த உபாத்தினிகள்
அக்கரையுடன் ஏதும் கற்பிப்பதில்லை. இது பெரிய வயிற்றெரிச்சல்!

பெண்மக்கள் பாடசாலையிற் பயிலும் காலமோ கொஞ்சம்.
அதிலும் இவ்விதம் வீணாக நாட்கள் கோலை செய்யப்பட்டுப் பய
னின்றிச் சென்று விடுவதாகில் இது அநியாயத்திலும் பெரிய அநி
யாயமாகும். பொதுவில் கற்பலகையில் எழுதிவிட்டு மேலுக்கு
ஒரு மெழுகு மெழுகிவிட்டு எப்போது மணியாகுமோ என்று எதிர்
பார்த்து, மணியானதும் பாடசாலையை மூடிக்கொண்டு வீட்டுக்குப்
புறப்பட்டுவிடுவதாகில், இவர்களை நம்பிய சிறுமிகளின் கதியென்ன?
சிறுமிகளின் முதல் வகுப்புப் போதனை பாகம் மிகப் பொறுமையுட
னும், சாந்தத்துடனும், சகிப்புடனும் கற்பித்துத் தந்து நிறைவேற்ற
வேண்டிய பெரிய காரியம். அத்தனைப் பொறுமையை இச்சிறு
உபாத்தினிப் பெண்கள் கற்றுக்கொள்வதற்கு வயதின் அநு
போகமே போதாது. பல சமயங்களில் உபாத்தினியைக் காண
பதே அரிதாகி, சிறுமிகள் மட்டும் கூட்டம் போட்டுக்கொண்டு உட்
கார்ந்திருப்பதையும் பார்த்திருக்கிறோம். உபாத்தினியம்மாள்
உள்ளே யிருக்கிற உபாத்தினிகளுடன் ஏதோ ஊர் கதை பேசிக்
கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சில சமயங்களில் 3, 3½-மணிக்
கும் கூட மாலையில் பள்ளிக்கூடம் மூடப்பட்டு விடுவதும் சில இடங்
களில் கண்டதே.

சிறுமியர் வகுப்புக்குச் சொன்ன மாதிரியில் மற்ற வகுப்புக
ளும் சிரத்தை கெட்டு நடத்தப்படுகின்றன. இவ்வாறாயின் சிறுமி
கள் போகும் கதி யென்ன? அவர்கள் தங்களுக்குள்ள சொற்ப
காலத்தில் படித்துத் தேர்ந்து அறிவு பெற்று உயர்வது யாங்ஙனம்?
இவ்விதமாகச் சில பெண் பள்ளிக்கூடங்களில் நடைபெறுகின்றன.
இவற்றை வித்தியாதிகாரிகள் கவனிக்கவேண்டும். சிறுமிகளைச்
சிரத்தையுடன் கவனித்துக் கற்பிக்கும் பாடசாலைகள் எத்தனையோ
உள்ளனவாயினும், இச் சில பள்ளிக்கூடங்களின் அநியாயங்கள்
சகிக்க முடியவில்லை; இவற்றைத் திருத்தவேண்டும். X. Y. Z.

---

ஒரு குணம் படிந்தபின்பு அதை மாற்றுவது கஷ்டம். ஒரு அழுக்கற்ற
புதுச் சேலையில் ஒரு சாயமேறிய பிறகு அதைப் போக்கி மறுசாயமேற்று
வது எவ்வளவு சுலபமோ அது எல்லோருக்கும் தெரியும். நன்றாய்க் கற்று
ணர்ந்த பண்டிதர்களும் பால்யத்தில் பல பிழைகளுடன் கற்ற ஸ்தோத்திர
பாடங்களைத் தினந்தோறும் பாராயணம் செய்கையில் அப்பிழைகளை நிவர்த்
திப்பது அருமையெனில் சாதாரண ஜனங்களெல்லாம் தொன்றுதொட்டு
வந்த பழக்கத்தின் வாசனையைக் கைவிடுவதெப்படி சாத்தியம்? இதில்
நித்திய முயன்றால் திருத்திக்கொள்ளலாமெனிலோ, துர்க்குணத்தில் அடி
யோடு நிவர்த்தி யுண்டாகும்வரையில் சற்குணங்களில் பிரவர்த்தியுண்டாகா
திருப்பது நிச்சயம்.

# நமது கையொப்ப நேயர்கட்கு

நமது கையொப்ப நேயர்களில், அநேகர் புது வருஷத்திற்காக இப்பொழுது முதற்கொண்டே தங்களின் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவருகிறார்கள். அதுதான் லாபகரமான மார்க்கம். வி. பி. அனுப்புவதானால் ரூ. 1–5–0 ஆகிறது. மணியார்டர் செய்தால் ரூ. 1–2–0 மட்டுமே ஆகும். இந்த சௌகரியத்தை நமது அன்பர்கள் கவனிக்கவேண்டுகிறோம். மேலும் 1928-ம் வருஷ மார்ச்சுமீ 31-ம் தேதிக்குள் புதுவருஷ சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடுவோருக்கு நாம் முன்பு தெரிவித்திருக்கிறபடி அதிசிலாக்கியமான நான்கு அணா விலையுள்ள "ஆநந்த குணபோதினி" விபவ வருஷத்திய பஞ்சாங்கம் ஒன்றும் இனாமாக அனுப்பப்படும்.

☞ அத்துடன் மார்ச்சுமீ 31-ம் உக்குள் மணியாடர் மூலம் தங்கள் சந்தாவை யனுப்பிவிடுவோரின் பெயர்களுக்குத் தொடர்ச்சியான நெம்பர்கள் கொடுத்துப் பதிவுசெய்துவந்து, முடிவில் அப்பெயர்களைச் சேர்த்துச் சீட்டுக்குலுக்கிப்போட்டு அவற்றில் 100 சீட்டுகளை எடுத்து அச்சீட்டுகளில் குறிப்பிட்டவர்களுக்கெல்லாம் புதுவருஷக் கொண்டாட்டத்திற்காக ஒரு டைம்பீஸ் இனாமாக அனுப்புவோம். இதைப்பற்றி விவரமாகச் சென்ற தை மாதப் பத்திரிகையில் 483-ம் பக்கத்தில் தெரிவித்திருக்கின்றோம்.

☞ மணியார்டர் கூபனில் பழைய சந்தா நெம்பரையும், முழு விலாசத்தையும் தெளிவாக எழுதவும்.

ஆகவே, நமது கையொப்ப நேயர்கள் மணியார்டர் மூலமாகவே புது வருஷ சந்தாவை யனுப்பி லாபத்தையும் பரிசுகளையும் பெறுமாறு கோருகிறோம்.

☞ பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளிலுள்ள அன்பர்கள் இந்த மாசி மாத ஸஞ்சிகையைப் பெற்றவுடன் தங்களின் புது வருஷ சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம். இனி அவர்கட்குப் பங்குனி மாதப் பத்திரிகை மட்டுமே கிடைக்கும். அத்துடன் அவர்களின் சந்தா பூர்த்தி பெறுவதனால், சித்திரை மாதத்திய ஸஞ்சிகை அவர்களுக்குக் கிடைக்க மாட்டா. இதைக் கவனித்து உடனே தங்களின் புது வருஷ சந்தாவை அனுப்பிவைத்து நமது பரிசுகளைப் பெற்று ஆநந்திப்பார்களாக.

பத்திராசிரியர்.

# பணத்தை யநுசரித்துக் கௌரவம்

எந்தத் தொழிலுக்கும் வரும்படியை அபேக்ஷித்தே கௌரவ மேற்படுகிறது. ஒருவன் செருப்பு தைத்து அதனால் ஆயிரம் ஆயிரமாகப் பணம் ஸம்பாதித்தால் அந்தத் தொழிலைக் கௌரவமான தொழிலென்று ஜனங்கள் நினைக்கின்றனர். வேதங்களை அத்யயனம் செய்தும் ஸம்பாத்தியம் சுருங்கிவிட்டதால் அதைச் சிறந்த காரியமாக எண்ணுவதில்லை. ஏனெனில் அத்தொழிலால் வரும்படி கிடைக்காமற் போயிற்றன்றோ? இது போலவே உலகத்திலுள்ள ஸகல உத்யோகங்களுக்கும் வரும்படிக்குத் தக்கபடி கௌரவமேற்படுகிறது. பணத்தின் பெருமை அப்படிப்பட்டது. பணக்காரனாயிருப்பவன் தாயை நிந்தித்தால் உலகத்தார் அவனுடன் சேர்ந்து கொண்டு தாயின் மேல் குற்றம் சாட்டுகிறார்கள். "என்ன தான் தாயாராயிருந்தாலும் பிரபுவின் ஸமயமறிந்து பேசாமல் அஸந்தர்ப்பமாய் வார்த்தையாடலாமோ" என்பார்கள். இந்தப் பிரபுவை அம்பலத்திற்குக் கொண்டு வந்தவள் அன்னையாயிற்றே, அவள் விஷயத்தில் அபசாரப்பட்டது பிரபுவின் க்ஷேமத்திற்குக் குறைவன்றோ வென்பதைக் கொஞ்சமேனும் ஜனங்கள் யோசிக்கிறதில்லை. யாரேனும் ஓர் தரித்திரன் தன் தாயைக் கோபித்தால் அண்டை அயலார் உடனே அவனைத் தடியால் மொத்துவார்கள். அடபயலே! உன் பவுஷுக்குத் தாயைத் திட்டவும் வேண்டுமா வென்று மூஞ்சியில் இடிப்பார்கள். அவனிடம் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' — 'தாயார் வயிறெரிய [illegible] வாழ்ந்தார் ?' என்ற பழமொழி [illegible] படிப்பார்கள்.

இவ்விதமே, செல்வம் படைத்துள்ள மாமி தன் எளிய மருமகளை எவ்வளவோ துவேஷித்துக் கொடுமையாய் நடத்தினும், மருமகள் எளிய வீட்டுப் பெண் என்ற காரணத்தால், யாவரும் மாமியின் பக்கமே சேர்ந்துகொண்டு மருமகளை நிந்திக்கவும், அவளுக்கு நற்புத்தி கூறவும் முற்படுவர். சமையல் அறையில் அந்த எளிய மருமகளிடம் திருப்தியாகப் புசித்துவிட்டு, மாமியிடம் வந்து தங்களை அவள் நன்றாய்க் கவனிக்கவில்லையென்று கோள் கூறுவர். இவ்வாறே ஐசுவரிய ஸம்பன்னையான மருமகள் பக்கம் சேர்ந்து கொண்டு எளிய மாமியைப் பழிக்கும் பாபிகளுமுளர். மரண ஸம்பவம் நேரிட்டு மாதம் இரண்டு கழிந்தபின், பணக்காரர்கள் தாங்கள் ஊருக்குச் செல்லும் வழியில் நடுவே இறங்கித் துக்கம் விசாரிக்க வந்தாலும் அதை எளியவர் குற்றம்பேசாது அன்புடன் ஏற்பர். காரணம் செல்வத்தின் மகிமையே! இது உலக இயல்பு. பணமானது பாபத்தைப் புண்யமாகத் தோன்றும்படி செய்கிறது! அநீதியை நீதியாகவும், அக்கிரமத்தைக் கிரமமாகவும் தோற்றுவிக்கின்றது!

***

இன்னொரு உதாரணம் கொடுக்கிறோம். பணம் அவலக்ஷணத்தைக் கூட இலக்ஷணமாகக் காண்பிக்கிறது. எப்படி யெனில், பணக்காரன் வீட்டுக் குழந்தையின் கண்ணில் பீளையும், மூக்கில் சளியும்ஒழுக, கோணவாயும் குறுகிய நெற்றியும் சுருண்ட மயிரும் கொண்டு குரூபமாயிருந்தாலும் ஜனங்கள் அக்குழந்தையை அப்பா கண்ணே, இராஜவடிவே யென்று வாரி முத்த

# யாத்திரையின் பயன்

**யா**த்திரை என்பது சுதேசம் அல்லது சொந்தக் கிராமத்தை விட்டு, பிரதேசங்களில் ஸஞ்சரித்தலாம். இது பொது வாய் வெகு நாட் பிரயாணத்தை அல்லது வெகு தூர ஸஞ்சாரத் தைக் குறிக்கும்.

**யாத்திரைக்கு வேண்டிய ஆவசியகம் :—**

**முதலாவது:**—சரீரசௌக்கியமும் தேகபலனும்.

**இரண்டாவது :**—மனோதைரியம்

**மூன்றாவது :**—மானஸ்தருக்குப் பணமிகுதியும், மானத்தைத் துறந்தோருக்கு முற்கூறிய இரண்டுமே போதுமானவை.

**யாத்திரையின் பலன் :**—யாத்திரையின் பிரயோஜனம் முக்கிய மாய் இரண்டு பிரிவினை யுடையது.

**முதலாவது :**—பிரயாணி பிறதேசங்களினின்றும் அடைவது:

**இரண்டாவது :**—பிரயாணியால் பிறதேசத்தா ரடைவது.

**முதலாவது :**—மூன்று வகைப்படும்; அவைகளாவன :—

(1) மத சம்பந்தமானது

(2) இராஜாங்க சம்பந்தமானது

(3) மற்றைய நாகரீக சம்பந்தமானது

இவற்றுள் முதலாவதைப் பற்றிப் பேசுவோம்; அதாவது ஒரே மதத்தைப்பற்றி மட்டும் அறிந்து, அந்த மதஸ்தரையே சிநேகித்து, அதற்கு உட்பட்டே ஸகல உலக வியாபாரங்களையும் நடத்துவதினால் தங்கள் மதம் ஒன்றே உண்மையானதென்றும், மற்ற மதங்கள் யாவும் பொய் யென்றும் எண்ண நேர்கிறது. இவ்வாறு நினைக்கவைத்துக் கண்ணை மூடுகின்ற பனியானது பிற தேச ஸஞ்சாரமாகிய சூரியன் முன்னே நிற்காது. யாத்திரையால் பிரயாணியின் கொள்கைகளும், பக்தியும், ஸமரஸ புத்தியும் விஸ்த ரிக்கும். யதார்த்த மார்க்கத்தின் விசாரணைக்கும் அவனைத் தூண்டும். பிரயாணம் செய்வதினால் அரசாங்க முறைமையைப்பற்றித் தன் சுதேசத்தில் இருப்பதைத் தவிர, இன்னும் அநேகவற்றைக் காண

சோற்றுக்குத் திண்டாடுகிறவர்களுக்கு கொஞ்சம் இனிமையாகப் பாடத் தெரிந்திருந்தால் அதுவே சோறு போட்டுவிடும்.—சங்கீதம் மனிதர் களை வசீகரித்துவிடுகிறது.



லாம். இரண்டு அரசாங்கத்தையும் ஒத்துப் பார்த்து நியாயா நியாயத்தைத் திருத்தலாம். நல்ல புத்தியுள்ள பிரயாணிகளுடைய யாத்திரை யவ்வளவும் ஸகல தேசங்களுக்கும் நன்மையை அளிக்கும்.

யாத்திரையானது பலவிதமான நடை உடை பாவனைகளைக் கற்பிக்கின்றது. அநேக பாஷைகளின் ஞானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாவது அபிவிர்த்தி செய்கின்றது. பல யந்திர வேலைகளைக் கற்க ஹேதுவாகும். மனதிலுள்ள வீண் பிரமைகளையும் கெட்ட எண்ணங்களையும் நீக்கும். மனிதருடைய குணாகுணங்களைத் தீர் மானிக்கும். ஞான சக்தியைத் தீட்டுவிக்கும். யாத்திரை செய் பவர்கட்கு அதிக ஆலோசனைகளையும் அதிக ஐசுவரியத்தையும் சொரியும். ஔவையாரும் “ **திரைகடலோடியுந் திரவியந் தேடு** ” என்று கூறி யிருக்கிறார். இதனால் செல்வ விர்த்திக்கு முக்கிய மார்க்கம் கப்பல் யாத்திரை என்றாகிறது. செல்வ விர்த்திக்கு மட்டுமல்ல; கல்வி விர்த்திக்கும் அப்படியே. மனோ விருத்திக்குங் கூட. இவ்விடத்தில் படித்தவர்களைவிட, இவ்விடமிருந்து சீமைக்குப்போய் அவ்விடத்தில் படித்துத் திரும்புவோர் செல்வம், கல்வி, அநுபவம், விசால ஹிருதயம் யாவற்றிலும் மேன்மைப்பட்டோராய்க் காணப் படுகின்றனர். இது அவர்களுடைய தைரிய லக்ஷ்மியின் கிருபையா லாம். யாத்திரையினாலே, ஒரு கனத்த துரைத்தனத்தின் பலத்திற் குச் சரியான காரணத்தைக் கண்டு பிடிக்கலாம். மேலும், ஒரு மனிதன் பிறதேசத்திலேதான் அதிக கௌரவத்திற்கும் செல்வத்திற் கும் தகுதியுள்ளவனாகிறான். ஸகல நவீன யுக்திகளும் ஆராயுங்கால் யாத்திரையின் பலனே ஆகும்.

**இரண்டாவது :**—பிறதேசத்தார் அடையும் லாபமாவது ; இந்தப் பிரயாணியின் நடை முதலியவற்றால் இவன் தேசத்தையும் ஜாதியையும் அவர்கள் நிதானிப்பார்கள். “ பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் ”—என்றபடி, இந்த ஒரு பிரயாணி பிறதேசிகளுக்கு ஒரு ஜாதியின் மாதிரியாகத் தோற்றுகின்றான். இவனை வேற்றார் மனிதனென்று சிலர் பரிகஸிக்கலாம்; சிலர் துதிக்கலாம். இவனுக்கு முன்னிருந்த ஞானத்தையும் தைரியத்தையும் யாத்திரையானது மிகவும் உயர்த்தும். இதன்றி குறிப்புப் பாஷையிலும் அதிக வல் லவனாவான். முடிவாய் இவனுக்கு ஒரு முயற்சியை உண்டு பண் ணும். அது கடைசியில் அவனை உயர்ந்த நிலையில் இருத்திக் கீர்த்தி வந்தனுக்கும். சில கூர்மையுள்ள புத்தியுடையோர்க்கு தேசாசாரங்க

மோட்டார் ஓட்டியைப் பின்னால் எஜமானன்போல் உட்காரவைத்துக் கொண்டு எஜமானனே மோட்டாரை ஓட்டிக்கொண்டுபோவது இக்காலத்திய நாகரீகங்களிலொன்று.

ளின் முக்கிய பாகங்களில் பேதித்தலைக் கொண்டு, உண்மையும் நீதியும் இன்னவென்று அறியவேண்டு மெனும் அவாவைத் தூண்டிவிடும். ஆங்கிலேயர் இருதாரம் ஒரு நாளும் தேடுகிறதில்லை. அதை யறிந்து நாமும் அவ்வாறு தேடாதிருந்தால் நலமடைவோ மென்பதை யாத்திரையன்றி வேறெது விளக்கும்? நம்மிடத்திலிருந்து பிறதேசத்தார் அறிதலும், அவர்களிடமிருந்து நாம் உணர்ந்து பயன் பெறுவதும் யாத்திரையால் சுலபமாய்க் கூடும்.

## சரி, இவனிடம் வேலை யில்லை.

"உடம்புக்கென்ன இப்படி யிருக்கிறீரே" என்றார் வழியிற் சென்ற ஒருவரைப் பார்த்து ஒரு வைத்தியர். 'ஆம் ஐயா! மார்பு நோய், மிக்க வாதனை' என்று தன் பாடுகளைச் சொல்லத் தொடங்கினார் பிணியாளி. அவர் வார்த்தை முடிவதற்குள் அவர் கையில் வைத்திருந்த ஆஸ்பத்திரிச் சீட்டும் புட்டியும் வைத்தியர் கண்ணுக்குத் தெரிந்துவிட்டது. சரி, இவன் நம்மிடம் வைத்தியம் செய்து கொள்ளான், இவனிடம் நமக்கு வேலையில்லை, லாபமுமில்லை யென்று, சொல்லிக் கொள்ளாமலே ஒரு சந்தில் நுழைந்து மறைந்துபோய்விட்டார். பாதிப் பேச்சிலிருந்த பிணியாளி வைத்தியர் திடீரென்று போய்விட்ட குறிப்பைத் தெரிந்து சிரித்துவிட்டு அவரது சுபநலத்திற்கு அதிசயித்தவராய்ச் சென்றார். இந்த வைத்தியருக்கு வைத்தியபதி என்கிற பட்டமும் வேறே! இரண்டு மாத்திரைகளைக் கொடுத்துவிட்டுப் புது மருந்து செய்ய ஐந்து ரூபாய் வேண்டுமென்று அப்பொழுதே கேட்கும் வைத்தியரிடம் ஏழைகள் படும்பாடு ஈசனே அறிவான்! வீட்டிற்கு வந்தால் ஒரு இரு ரூபாய் தந்துவிட வேண்டுமாம்! வைத்தியத்திற்கு ஜனங்கள் படும் கஷ்டம் பட்டவர்களைக் கேட்டால் தெரியும்.

தென்தேயத்தில் சில பெண்கள் உடை யுடுத்துக்கொள்ளும்போது எல்லா அவயவங்களையும் மூடிக்கொள்ளாமல் முதுகைத் திறந்துகொண்டு போகின்றனர். இது வெகு அநாகரீக வழக்கம். சுமங்கலிகளிற் சிலர் எனி மாதிரியிருந்து முழங்காலுக்குமேல் புடவையை யுடுத்திக்கொண்டு திரிகின்றனர். இவர்களுடைய அவலக்ஷண நடையும் குரலும் ஆபாஸப் பேச்சும் வெறுக்கத்தக்கவை. இவற்றைச் சீர்திருத்தத் தெரியாத ஆண்பிள்ளைகள் அணிப்பிள்ளைகளே யாவர்.




### பக்தி மார்க்கம்:—

[ஸ்வாமி ராமாநந்தர் அருளியது. ஸ்ரீமான் R. இராமகிருஷ்ணன் பி. ஏ. அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. விலை அணா 4.]

இந்நூல் ஒருவரது பிரயோஜனார்த்தமாக எழுதப்பட்ட கடிதங்களினின்றும் ஒன்று சேர்க்கப்பட்ட ஒருதனித் திரட்டாகும். ஆதலின் இதன் சுவை அதிகரிக்கின்றது. பக்தி மார்க்கத்தை மிக்க ஆழமாகவும், தெளிவாகவும் சுலபமாகவும், மனதில் ஊன்றும் வண்ணமாகவும் இந்நூல் போதனை புரிகின்றது. இதனை ஒரு மொழி பெயர்ப்பு நூல் என்று சொல்வதற்கியலாதவாறு அத்தனை அருமையாக நம்து நண்பர் இதுவே முதல் நூல் என்று கருதும் விதமாக அமைத்துள்ளார். சுலபமான நடை. கம்பீரமான வாக்கு. ஸ்ரீமான் R. இராமகிருஷ்ணன் பி. ஏ. மொழிபெயர்ப்பில் மிக்க மேதாவியாவர்.

### சர்வவருண சமரஸ விளக்கம்:—

[திரிச்சிராப்பள்ளி ஸ்ரீமான் C. P. இராஜகோபால பாரதி அவர்கள் இயற்றியது. விலை ரூபா 1.]

இது ஒரு ஆராய்ச்சி நூல். ஹிந்து சமயச் சார்பில் உள்ள பல குறைகளையும், தவறுதலான கொள்கைகளையும் ஆசிரியர் வெகு விஸ்தாரமாக எடுத்து விளக்குகின்றார். ஒருவகைச் சார்பாகப் பேசப்படுகின்ற பலவற்றையும் நெடுகக் கண்டனம் செய்து செல்லுகின்றார். வர்ணபேதம் தொழில் முறையில் வந்ததன்றி பிறப்பினால் வந்ததன்று என்பது ஆசிரியரின் வாதம். "எக்குடியிற் பிறந்தவரேனும் நற்குண நற்செய்கைகளால் பிராமணராகலாம்" என்கிறார். "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற நூலின் கண்டன பாகப்போக்கு வழியில் இந்நூல் சென்று இறுதியில் வர்ணபேதமில்லை யென்ற சமரஸ போதனையுடன் பூர்த்தி பெறுகின்றது. இதை அனைவரும் வாசித்து யோசிக்கலாம். உலகம் பலவிதம். அதில் இந்நூலும் ஒருவிதம்.

### கலா விலாசம்:—

[வடமொழியிலிருந்தும், மாஜி "ஆரியா" பத்திராசிரியர் ஸ்ரீமான் தி. அ. சாமிநாத ஐயரவர்கள் மொழி பெயர்த்தது. விலை அணா 10.]

இது ஒரு அறிவு நூல், அநுபவ நூல். உலக ஆராய்ச்சி நூல். "பிரபோத சந்திரோதயம்" என்ற மகா கிரந்தம் செல்லும் வழியில் இந்நூலின் அமைப்பு உளது. உலகின்கண் நிகழும் அநந்தமான விஷயங்களை சாரசங்கிரகமாகச் சுருக்கி வெகு விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அறிவுக்கு இந்நூல் ஒரு நல்ல உணவு. இதன் வசன நடை மிக்க அர்த்த புஷ்டியுள்ளது. ஒவ்வொருவரும் படித்துணரத்தக்க அரும்பெருங் கருத்துகள் இதன்கண் நிறைந்துள்ளன. வாசித்துணர வேண்டிய பிரதான நூல்களில் இதுவும் ஒன்று.

---

எத்தனையோ பெயர்களிடம் செ[illegible]வருதவனென்று மரியாதை பெற்றவனாயினும், ஒருவரிடமேனும் செ[illegible] சொல் தவறிவிடும்படி நேர்ந்துவிடுகிறது.

**எனது குருநாதர் :—**

[மொழிபெயர்த்தவர் ஸ்ரீமான் R. நாராயணஸ்வாமி ஐயரவர்கள். விலை அணு 8.]

இது ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் செய்த அரிய உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பாகும். குரு சிஷ்ய தத்துவங்களையும், தமது குருநாதரிடமிருந்து தாம் பயின்ற விவரணங்களையும் ஸ்வாமிகள் வெகு அழகாகச் சொல்லுகின்றார். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது வைபவத்தின் சாரமான பாகம் இவ்வுபன்யாசத்தின்கண் ததும்பி நிற்கின்றது. அமெரிக்கர்களின் மனத்தை இவ்வுபந்யாசங்களின் மூலமாகத்தான் முதன் முதலிற் கவர்ந்து ஸ்வாமிகள் வெற்றிகொண்டார்.

## என்னைத் தூண்டிவிட்டு நீ மட்டும் நல்லவனாகவா?

உன்னைத் தூண்டிவிடுவோனைப் பார்த்து — மேலே கண்ட வார்த்தைகளை உடனே கேள். கேட்டுவிட்டு அந்த நிமிஷமே வேறிடத்துக்குப் போய்விடு. அதுவே நீ நல்லவனாக வழி.

“அவன் பேசுவதைப் பார்த்தாயா? கேட்டாயா அவன் சொல்லுகிற வார்த்தையை? இன்னுமா கேட்டுக் கொண்டிருக்கிறாய்? அதோ உன் கண்ணாலேயே நீ பார். இனி நீ சும்மா இருப்பது சரியல்ல”—என்று ஒருவன் உன்னைத் தூண்டி விடுகிறான். உடனே நீ பொங்கிய ஆத்திரத்துடன் எழுந்து மற்றொருவனை தூஷிக்கவோ அடிக்கவோ போய்விடுகிறாய். அதன்பிறகு உன்னைத் தூண்டியவனே உன்னிடம் வந்து, அந்த மனிதனை நீ அவ்வளவு வைதிருக்கக் கூடாது, அப்படி யடிக்க வந்திருக்கப்படாது, நீ செய்தது சரியல்ல என்று உனக்குப் புத்தி சொல்ல வந்து, தான் எல்லோருக்கும் நல்ல மனிதனாகிக் கொள்கிறான். உனக்கோ நான் ஏன் ஆத்திரப்பட்டு இதிற் பிரவேசித்தேன் என்று மனதிற்குத் தோற்றி வருத்தமும் நாணமும் தருகிறது. உன் மனவருத்தத்தோடுகூட உனக்கு சமத்வமற்ற அந்தத் தூண்டிய மனிதன் சொல்லுகிற புத்திமதிகளுக்கும் மௌனமாய் உன் செவிகளைச் சாய்த்துக் கேட்கவேண்டி வருகிறது. இது எவ்வளவு தொல்லையும் கஷ்டமும் பார். இவ்வளவுக்கும் நீ தப்புவிக்க ஒரு வழி யுண்டு. அதாவது உன்னை முதலில் தூண்டி விடுகிற அந்த மனிதனைப் பார்த்து—“என்னைத் தூண்டிவிட்டு நீ மட்டும் நல்லவனாகவா?” என்று திருப்பிக் கேட்டுவிட்டு உடனே வேறிடத்துக்குச் சென்று விடு. அதுவே தப்பும் வழி. இது ஒரு அநுபவமாம்.

“ஆநந்த குணபோதினி பிரஸ்”, 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பத்திரப் படுத்தி யிருக்கும் விசித்திரங்கள் மூலமாய்க் குறிப்பிடுகிறார் போலும்!

***

உருளைக் கிழங்குகள் விதையினின்று உண்டாவது மல்லாமல் வேரினின்றும் உண்டாவதுண்டு. புல் நான்கு பக்கங்களிலும் தரையின் கீழ் கொடிவிட்டுப் படருகிறது; மற்றச் செடிகளைப் போலப் புல்லைத் தனித் தனியாகப் பிடுங்க முடியாது. ஆல மரமானது அதன் விழுதுகள் பூமியில் இறங்க அவை வேரூன்றிப் புது மரங்களாகின்றன. செடிகள் எங்கும் ஒரே மாதிரியாய் வளராமல், பூலோகத்துக்குத் தக்கபடி வளருகின்றன; அவைகளை விருத்தி செய்யும் வழிகள் மனிதர்களுக்குத் தெரிந்திருந்தால் மிகவும் உபயோகம். சில கறிகாய் செடிகளும், பூஞ்செடிகளும் சுபாவத்தில் செழிப்பாய் வளராமல், மனிதன் படுகிற பாட்டாலே தழைத்தோங்கி வளரும்.

Love all = எல்லோரிடத்திலும் நேசமாயிரு.
Trust a few = சிலரிடம் மாத்திரம் நம்பிக்கை வை. [தே.
Do wrong to none = ஒருவருக்கும் தீமைசெய்ய நினையா

ஷேக்ஸ்பியர்.

'நீ தான் அங்குவேலைசெய்கிறாயே, அந்த சாமானைக்கொண்டுவாயேன்;—இந்த வஸ்துவை எடுத்து வந்து கொடேன்' என்கிறார்கள். வேலை செய்வோருக்கு ஆபீஸிலிருக்கும் சாமான்கள் என்ன அவர்கள் அப்பன் வீட்டுடையதா?—என்னே இவர்கள் மதி!

---

நூல்கள் எழுதுவது மிகவும் பிரயாசை. அவ்விதம் எழுதும் நூலாசிரியர்களைப் பழிப்போர் மிகுதி. சிலர் நூலாசிரியர்களுக்கு ஏதேனும் சில குறிப்புகள் எழுதிக்கொடுக்கின்றனர். அவை ஒரு மூலையிற் கிடக்கின்றன. இடையே நூலாசிரியர்கள் தாங்கள் பலகால் யோசித்துப் பல புது கற்பனைகளைத் தம்முன் உண்டாக்கிக்கொண்டு, ஒரு கதையாக எழுதிச் செல்லுகையில் அந்தக் குறிப்புகளையும் இடையே புகுத்துவித்து ஒரு பெரும் நூலைத் தயாரித்து முடிக்கின்றனர். இவ்வளவு பாடுபட்டு நூல் முடிந்த பிறகு, முன்பு சில குறிப்புகளை உதவியவர்கள் நானே அந்த நூலாகிய வீட்டைக் கட்டினேன், அந்த மனுஷ்யன் அவ்வீட்டைச் சிங்காரித்தான், அந்நூலின் முழுக் கௌரவம் எனக்கே உரியது என்று பேச முற்பட்டுக்கொள்கிறார்கள். இந்தக் கர்ண கடூரமான பேச்சுகளைக் கேட்பதைவிட, அந்த சில குறிப்புகளை ...ர்கள் முகத்திலேயே வேண்டாமென்று வீசி எறிந்துவிடுவது மேல்.

# பரிசுத்தமே பாக்கியம்



பரிசுத்தம் என்பது நாகரீகத்துக்கு அடுத்த முக்கியமான லட்சணங்களில் ஒன்று. சுத்தமென்னும் ஆபரணத்தை அணிந்துகொள்ளாமல் நாலு பேர் கூடியிருக்கிற சபைக்கு ஒருவனும் போகக்கூடாதவனாவன். ஏனென்றால் அது சபையாருக்கு அவமரியாதை பண்ணுகிறதுபோலாகும். இந்த விஷயத்தை ஒப்புக்கொள்ளாதவர் ஒருவருமில்லை. இவ்வுலகத்தில் பற்பல ஜாதியார்களும் தேசத்தார்களும், சாஸ்திரப் பயிற்சியினாலும் வேலைத்திறமையினாலும் மற்ற மேலான காரியங்களினாலும் ஒருவரை ஒருவர் அதிசயிக்க ஆசைப்பட்டுக் கீர்த்தி யடையவேண்டுமென்று எப்படிப் பாடு படுகிறார்களோ, அப்படியே சுத்தமென்பதும் பெருமையைக் கொடுக்கத் தகுந்தவைகளில் ஒன்று. நாகரீகம் அதிகமாக அதிகமாக அதற்கு இன்றியமையாத் துணையாகிய இந்த லக்ஷணமும் ஏற்றமடையும்.

அன்பு என்னும் குழந்தைக்குத் தாய்போல நின்று அதை ஆதரித்து வளர்ப்பது சுத்தமாம். அன்பு அல்லது விசுவாசத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருப்பது அழகு; அதைப் பிற்பாடு காப்பாற்றி நீடித்திருக்கச் செய்வது சுத்தம். ஒரு பாத்திரம் பழகினதானாலும் பளபளப்பாயும் நேர்த்தியாயு மிருந்தால் அதைப் பார்ப்பது மிகவும் இனிப்பாயிருக்கும். புதுப் பாத்திரமானாலும் துருப்பிடித்து விகாரமாயிருந்தால் அதைக் காண வெறுப்புண்டாகும். அதுபோலவே, சுத்தமில்லாத சிறுவனைப் பார்ப்பதைவிட, சுத்தத்தோடுகூடிய வயதுசென்றவனைப் பார்ப்பது மனதுக்குப் பிடித்திருக்கும்.

நம்மிடத்திலுள்ள சுத்தம் பிறருக்கு நம்மை இஷ்டமாகச் செய்வது தவிர, நம்முடைய மனதுக்கே ஒரு ரம்மியத்தைக் கொடுக்

---

கையில் காசில்லாதபோதுதான் 'அது வாங்கவேண்டும், இது வாங்க வேண்டும்' என்கிற பேச்சு! பணங் கிட்டினதும் எங்கு செலவழிந்துவிடுமோ வென்கிற திகிலில் வாயையுந் திறக்கிறதில்லை.

# நூலாசிரியர்களும் அவரது நண்பர்களும்.

பத்திராசிரியர்களிடமோ, நூலாசிரியர்களிடமோ பழகும் நண்பர்கள் அவர்களைக் காணும்போதெல்லாம் படிப்பதற்கு ஏதாவது ஒரு புஸ்தகம் கொடுங்கள் என்று கேட்பதும், அவ்விதமே பெற்றுச் செல்வதும் சாதாரணம். எனினும் அது தர்ம விரோதமானகாரியமாகும். இவர்களுக்கு இனாமாகத் தரும்படி நேருகிற புஸ்தகம் அந்தப் பத்திராசிரியரிடமே இருந்தால், அதை அவர் விலைக்கு விற்றோ, வி. பி. யில் அனுப்பியோ பணம் பெற்றுத் தமது ஜீவனத்துக்கு அதை உதவிக் கொள்வார். அவ்விதம் அவருக்கு உதவும்படியான ஒரு வியாபாரப் பொருளை இனாமாக இந்த நண்பர்கள் பெற்றுக்கொண்டு வந்துவிடுவது நியாயமாகமாட்டாது. அவரை நாகரீகமாகப் பட்டினி போட்டுக் கொல்லுவதற்குச் செய்கிற சின்னஞ்சிறிய ஆரம்பக் காரியமாகவே அது கருதப்படும்.

இன்னும் இந்த நண்பர்களுக்கு அந்த நூலாசிரியர் கொடுக்கும் புஸ்தகத்தின் விலை ரூபா மூன்று நான்கு இருக்கலாம். அதில் ஒரு சல்லி, ஒரு பைசாவாவது இந்த நண்பர்கள் அவருக்குக் கொடுக்கப்போகிறார்களா? ஒருபோதும் இல்லை. நட்புக்கு அறிகுறியாக இனாமாகக் கொடுத்தார் என்கிறார்கள். இப்படிச் சொல்வது நியாயமா? இவர்களிடம் அந்த நூலை இனாமாகக் கொடுத்துவிட்ட பிறகு, அந்த நூலை விரும்பி ஒரு ஆர்டர் நூலாசிரியருக்கு வருகிறது. அப்போது அந்த ஏழை நூலாசிரியரின் மனம் என்னபாடு படுகிறது தெரியுமா? ஆ! அந்த இனாமாகத் தந்த நூல் இருந்தால் இப்போது வி. பி. யில் அனுப்பி ரூபா நாலு பெற்று வீட்டுச்செலவுக்கு உதவிக்கொள்ள முடியுமே; அந்தப் பால் பாக்கியைக் கொடுத்துத் தீர்த்துவிடக்கூடுமே; அவர்களின் தொந்தரை தாளாமல், எங்கு நட்பு கெட்டுவிடுமோ வென்று ஏங்கி அந்தப் புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டோமே என்று எண்ணி அங்கலாய்க்கிறார்கள். இவ்விதமாக ஆறு ரூபாய்ப் புஸ்தகத்தை ஒரு நண்பருக்கு இனாமாகக் கொடுத்த ஒரு ஆசிரியர் மறுதினமே அதற்கு வந்த வி. பி. ஆர்டரைப் பார்த்து, ஐயோ! புஸ்தகம் அனுப்பக் கையிலில்லையே, ஆறு ரூபாயை இழந்தோமே, இப்படி நாம் ரூபா ஆறு நஷ்டப்பட்டதாக அதை இனாமாகப்பெற்ற நண்பர் உணரப்போகிறாரென்று சஞ்சலப்பட்டுவிட்டு மௌனமாய் இருந்துவிட்டார். இப்படி நூலாசிரியர்களைத் தவிக்கவிடுதல் இந்த "இனாம் நண்பர்"களுக்குச் சரியா? அவர்கள் ஆசிரியர்களை நேசிப்பது இப்படித்தானா?

இப்படி இனாம் பெறுகிற நண்பர்களோ தங்கள் கடையில் நூலாசிரியர் இரவலாக ஒரு பித்தளைப் பூட்டு பெற்றுப் போயிருந்தாலும், அதை மறவாமல், அவர் கணக்கில் அதற்கு பத்து அணா என்று எழுதிவிடுகிறார்கள். நூலாசிரியர் பெறுகிற காலணா அரையணாவுக்கும் விட்டுவிடாமல் கணக்கு எழுதிக்கொள்கிறார்கள். தாங்கள் கொடுப்பதற்கு மட்டும் பணக் கணக்கிலே மதிப்பிடுகிறார்கள். அந்த நூலாசிரியர்களிடம் பெற்றுவந்த இனாம் புஸ்தகங்களுக்குக் கணக்கு எண்ணுவதேயில்லை. அவைகள் அந்த நூலாசிரியரிடமே இருந்தால் அவருக்கு அது பணமாகி அவரது வயிற்றுப்பாட்டுக்கு உதவி இருக்குமே என்று இவர்கள் நினைப்பதில்லை. இன்னும் நூலாசிரியர் எழுதி வெளியிடும் ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் காத்திருந்து இனாமாகவே பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள், அதில் பாதி விலை தானும் கொடுப்பதேயில்லை. அந்த நூலை வெளியிடுவதற்கு அந் நூலாசிரியர் தமது மனைவியின் கழுத்து நகைகளைப் பாங்கியில் வைத்திருப்பதை, புஸ்தகங்கள் விற்று அவற்றைத் திருப்புவதற்கு முன்னதாகவே, இவர்களுக்கு இனாம் புஸ்தகங்கள் கொடுத்தாக வேண்டி யிருக்கிறது. இதுதானா இந்த நண்பர்கள் நூலாசிரியருக்குச் செய்யும் உதவி? அந்தோ! கொடுமையினும் கொடுமை!!

ஆகவே, நூலாசிரியர்களின் நண்பர்களே! அவரிடம் வெகு பிரியமாகப் புஸ்தகம் பெற்றுப்போகிறவரையிற் பேசும் இஷ்டர்களே! நீங்கள் தயவுசெய்து நூலாசிரியரிடம் இனாம் புத்தகம் கேளாதீர்கள். நூலாசிரியர் இருக்குமிடம் ஒரு புஸ்தக வியாபாரஸ்தலம். உங்களுக்குப் புஸ்தகங்கள் வேண்டுமென்றால் நண்பர்கள் என்ற முறையில் கமிஷன்தள்ளி சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளுங்கள். அது தான் நியாயம். மற்றபடி நூலாசிரியரை ஏமாற்றி இனாமாகப் புஸ்தகத்தைப் பெற்றுக்கொண்டு போய்விடப் பார்க்கிற அதர்மமான — கேடுகெட்ட — ஒழுங்கற்ற — நூலாசிரியரைப் பட்டினிபோட்டுக் கொல்லுகிற — மிக இழிவான காரியத்தை இனிச் செய்யாதீர்கள். உங்கள் பணத்துக்குக் காலணாகூட விட்டுவிடாமல் கணக்குப் பார்ப்பதுபோலவே, நூலாசிரியர் உங்கட்குத் தந்த புஸ்தகங்கட்கும் கணக்கு பார்த்து அவரிடம அந்தப் பணத்தைச் சேர்ப்பிப்பீர்களானால் அப்போதுதான் நீங்கள் அவரது சரியான உண்மை நண்பர்களாவீர்கள். அப்படிச் செய்யவோ, இதுவரை பெற்ற புஸ்தகங்கட்குப் பணம்தரவோ மனம் வராவிட்டாலும், இனியாவது இனாம் புஸ்தகம் கேளாமல் தர்மமார்க்கத்தில் நடவுங்கள். ஒரு அணா கரப்பி வாங்கி நூலாசிரியருக்குக் கொடுத்துவிட்டு ஒரு ரூபாய் புஸ்தகத்தைச் சுற்றிக்கொண்டு போகப் பார்ப்பது சரியாமா? நான் சொல்வது உங்கள் மனதிற்கு வருத்தமா யிருந்தால் அது உங்கள் சொந்தக் குற்றமே.

குலசேகரன்.

# அநுபவ முறைகள்

(484-ம் பக்கத் தொடர்ச்சி.)

12. தினந்தோறும் சிறு குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெயைத் தருதல் நன்மை. மலபந்தம், வாயு, மாந்தம் இவைகள் அணுகாமலிருக்கும்.

13. குழந்தைகளின் தலையுச்சியில் ஆமணக்கெண்ணெயைப் பூசுதல் மூளையை விருத்திசெய்யும்.

14. **பால் குடிக்கும் சிறு குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைக் காட்டிலும் நல்ல ஆகாரம் சிருஷ்டியிலில்லை.**

15. வீட்டிலுள்ளவர்கள் புசிக்கும்போதெல்லாம் குழந்தைகளை அவர்களிடத்திலுள்ள பிரீதியினால் புசிக்கச்செய்யும் வழக்கத்தைக் குறைக்கவேண்டும்.

16. தாய்மார்கள் கொடும்நோய்களால் வருந்திக்கொண்டிருக்கும்பொழுது குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைக் கொடுப்பதால் அந்த நோய்கள் குழந்தைகளுக்கும் சங்கிரமிக்கும். ஆதலால் அப்பொழுது தாய்ப்பாலைக் கொடுக்கலாகாது.

17. பால்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, சிறுகீரை, வெள்ளைசாரணை, சக்கரவர்த்திக்கீரை, இவ்வைந்து கீரைகளையும் உபயோகிப்பவர்களுக்கு ஆரோக்கியத்தன்மையானது மேன்மேலும் அபிவிர்த்தியாகும். கண்களுக்கு மேன்மையுண்டாக்கும். இவை ஸாத்விக குணமுள்ளவைகளாக எண்ணப்பட்டு யோகிகளாலும் கூட உபயோகிக்கப்பட்டதுபோல் யோக சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

18. மூல நோய்க்குக் கருணைக்கிழங்கைத் தினந்தோறும் காரம் குறைத்து நெய்யில் வறுத்துச் சாப்பிடுதல் நல்லது. (காரம் இல்லாமை மிக நன்று.)

---

**‘நாலு காசு சம்பாதிக்கவேண்டுமென்றுதானே அந்த ஏழைகள் காய்கறிகளை வெகு தொலைவிலிருந்து தூக்கிவந்து விற்கிறார்கள்’ என்று எண்ணாது ஒரு காசுக்கு ஒன்பது நாழிகையாக வாதுக்கு நிற்கும் பணக்காரப் பிரபுவின் சொத்து எந்த ஊதாரிகளுக்கோ கடைசியில் போய்ச் சேருகிறது.**



19. கசகசா, பனைவெல்லம், ஓமம், மாசிக்காய், ஜாதிக்காய் இவற்றை அரையணா வீதம் வாங்கி அரைத்து அவற்றை நெய்யில் லேகியமாய்ச் செய்துகொண்டு வேளைக்கு இரண்டு நெல்லிக்காய் அளவு காலைமாலையில் புசிப்பின் வயிற்றுக்கடுப்பு தீரும்.

20. மூத்திரம் வெளிவராமல் துன்பப்படும்பொழுது நெல்லிக்கல்கத்தை அடிவயிற்றின்மீது பற்றுபோட்டுக் கொண்டிருந்தால் நோய் குணமாகும்.

## வைத்தியர்

வைத்தியரிடம் எந்த வியாதிக்கென்று போனாலும், புதிதாய் மருந்து தயாரிக்கவேண்டுமென்றும், கைவசம் இருந்த மருந்து செலவாகிவிட்டதென்றும், ஒருசமயம் தனக்குத்தெரிந்த மற்றொரு வைத்தியரிடம் இருக்கலாமென்றும், கேட்டுப் பார்ப்பதாயும், அங்கு இல்லாவிடில் புதிதாகச் செய்தே ஆகவேண்டுமென்றும், முதலில் மருந்து செய்வதற்கு ஆறு ரூபாய் தரும்படியும், எதற்கும் நாளையதினம் தெரிந்து சொல்வதாயும் கூறுகிறார். இவ்வளவும் பொய்க் கதை! மருந்து அவரிடம் இருக்கிறது. பணம் பெறுவதற்காக இவ்வளவு சமர்த்து வார்த்தைகள்!

இவன் ஊரைவிட்டுப் புறப்படும்பொழுது மனஸ்தாபத்துடன் சென்றானாயினும், அங்கு சென்றதும் அவனிடமிருந்து அன்பொழுகும் கடிதம் வருகிறது. எதுவும் தூரத்திலிருந்தால்தான் வாசனை.

---

இவன் கடைக்காரனை ஏமாற்றியவனாதலால், தான் கடை வைத்தாலும் ஜனங்கள் ஏமாற்றுவார்களோ என்கிற திகில் இவனுள்ளத்தில் தோன்றுகிறது. தான் திருடி அயல் வீடு நம்பானல்லவா?—அவரவர் எண்ணம்போல் உலகமுமிருக்குமென்பது சிலர் நினைப்பு.

---

ஜாக்கிரதையாய்ச் செய்யப்போகும் காரியந்தான் இடர்பட்டழிகிறது. சாதாரணமாகச் செய்யும் காரியம் விக்கினமின்றி நிறைவேறிவிடுகிறது.

மிட்டுக் கொள்ளுகிறார்கள். இதற்குக் காரண மென்ன? குழந்தையின் இலக்ஷணமன்று. குழந்தை பணக்காரனுக்குப் பிறந்ததே காரணம். ஏழை வீட்டுப் பிள்ளை வெகு இலக்ஷணமா யிருந்தாலும் அதை யெடுப்பாரில்லை; கொஞ்சுவாரில்லை. என்ன காரணம்? 'பணம்'என்னும் பேரழகு அதனிட மில்லாததுதான்! 60-வயது ஆன விருத்தன் பெண் வீட்டாருக்குப் பால மன்மதனாகத் தோற்றி அவனுக்குத் தங்கள் பெண்ணைத் தர ஒப்புவதேன்? பெண் கருத்துக் கோர ரூபியாயிருப்பினும் உயர்ந்த இடத்தில் தக்க மருமகன் வாய்ப்பதேன்? லாவண்ய மயியான எளிய பெண்ணுக்கு பெரிய இடத்து ஸம்மந்தம் கிடைக்காமற் போவதேன்? மாப்பிள்ளையை எருமைக்கடா வெனப் பெண் பழித்துப் பேசினும் அவனுக்கே அவளைத் தருவதேன்?——எல்லாம் பணத்தின் பிரதாபத்தால்! அதன் மகிமையால்! பணக்காரன் மது வருந்திலும், ஸ்திரீ லோலனாய்த் திரிந்தாலும், அவனுக்கென்ன மகாராஜன் எதுவும் செய்யலாம் என்பர். ஏழையையோ ஏசுவர். ஆகவே, பணத்தை யநுஸரித்துக் கௌரவம் ஏற்படுகிறது போலும்!

# சென்ற மாதம்

**மண்டபம் ஸ்டேஷனில் படும்பாடு.**

இலங்கைக்குச் செல்வோர் மண்டபம் ஸ்டேஷனில் வெகு பாடு படுகின்றனரென்று ஸ்ரீமான் எம். பி. கே. மூஹம்மது நமக்கு விஸ்தாரமாய் எழுதுகின்றார். ரயில் மண்டபம் ஸ்டேஷன் வந்ததும் டிக்கட் பரிசோதனையாம். 1-வது 2-வது வகுப்புப் பிரயாணிகளையும், அவசரப் பாஸ் பெற்றுள்ள 3-ம் வகுப்புப் பிரயாணிகளிற் சிலரையும் இறக்காமல் வண்டியில் அனுப்பிவிட்டு, மற்ற 3-ம் வகுப்புப் பிரயாணிகள் அனைவரையும் இறக்கி ஓரிடத்தில் அடைத்துப் பூட்டி விடுகின்றனராம். 1½-மணி நேரத்துக்குப் பிறகு பதிவு உத்தியோகஸ்தரிடமும், டாக்டரிடமும் கொண்டுபோகப்பட்டு, பிறகு ஒரு மைதானத்தில் நிறுத்தி சிவப்புத் துணியொன்றை உடுத்திக்கொள்ளத் தந்து, அணிந்துள்ள யாவற்றையும் கழற்றி, பெட்டியிலுள்ள துணிமணிகளையும் சேர்த்து ஒரு மூட்டையாகக் கட்டித் தரும்படி வற்புறுத்துகின்றனராம். பிறகு உப்பு ஜலத்தில் குளிக்கச் செய்து, ஒருவித திராவகத்தை அருந்தும்படி கட்டாயப்படுத்தி, அப்பால் அம்மைகுத்தி இன்னும் பலபாடுகள் படுத்திவிடுகின்றனராம். அதன் பிறகுதான் ரயிலில் ஏற அனுமதிக்கின்றனராம். இது நித்திய ஸம்பவமாம். நமது பெரிய தலைவர்கள் இக்கஷ்டங்களை நிவர்த்திக்கப் பார்க்க வேண்டும்.

***

**3-ம் தேதி ஹர்த்தால்.**

அரசியல் கமிஷனைப் பஹிஸ்கரிக்கும் நோக்கத்துடன் 3—2—28ல் இந்தியா வெங்கணும் 'பெரும்பான்மையாய்' கடைகள் மூடப்பட்டும்



வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டும் 'ஹர்த்தால்' நடந்தனவாயினும் கலகங்களும் நேராதிருக்கவில்லை. சில இடங்களில் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. சென்னையிற் பெருங் கலகங்கள் நேர்ந்து கல்லடிகளும், மோடார் வண்டிகளுக்குத் தீ வைத்ததும், இவற்றை யடக்கப் போலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகமுமாய் அலங்கோலமாகிவிட்டது. தலைவர்களின் உத்தம நோக்கத்தைக் கெடுக்க நினைத்துச் சில சகுனி மாமாக்கள் கட்டு சாதத்திற்குள்ளாகவே இருந்துகொண்டு செய்த காரியங்களின் பலனே இவைகள்.

***

**ஸ்ரீரங்கம் தை மாத ரதோத்ஸவம்.**

ஸ்ரீரங்கம் தென்னிந்தியாவில் பெரிய க்ஷேத்திரம் என்று பெயர். ஆயினும் பொங்கல் பிரஸாதத்திலுள்ள சிரத்தையை ரங்கநாதரின் மீது வைத்திருப்பதாகத் தோற்றவில்லை. கோயிற் கதவுகளையெல்லாம் திறந்து வைத்து எல்லா ஏற்பாடுகளுடனும் இருந்தால் பக்தர்கள் விருந்தினர் போல் வந்து சேவித்துச் செல்வார்கள் போலும்! தைமாதத்தின் ரதோத்ஸவ தினத்தன்று விடா மழையா யிருந்ததாயினும் பகலுக்குமேல் மழையில்லை. ஆயினும் ரதம் இழுக்கப்படாமலே போயிற்று. ரதத்தில் வீற்றிருக்கச் செய்த ரங்கநாதரை ரதம் இழுக்கப்படாமலே கோவிலுக்குள் எழுந்தருளச் செய்துவிட்டனர். ஜனங்களுக்குள் உண்மையான பக்தி சிரத்தையும் ஊக்கமும் இருந்திருப்பின் அவசியம் ரதம் இழுக்கப்பட்டிருக்கும். திரை எடுக்கப்படும் வரையிற்கூடக் காத்திருக்கச் சோம்பல்கொண்டு நேரமாய்விட்டதே என்று அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தபடியே ஸ்வாமி தரிசனத்தை எதிர்நோக்கும் நாகரிக பக்தர்களும், அடியார்களும் பெருத்துப்போன இக்காலத்தில் ரதம் இழுக்கப்படாமற்போவது ஒரு அதிசயச் செயலாகமாட்டா. அநாகரீகர்களென்று பழிக்கப்படும் கிராமவாசிகட்குள்ள பக்தி சிரத்தையில் ஒரு பாகம்கூட இந்த நாகரீக பக்தர்களிடம் இல்லையே யென்று வியஸனிக்கிறோம். ஒரு இரவுக்குமேல் ரங்கநாதர் வெளியில் இருககக்கூடாதென்ற கண்டிதமான ஐதீகத்தை முன்னிட்டும் இவ்விதம் நேரலானதென்றும் பிரஸ்தாபம்.

### பாத்திரம் அறிவதில்லை

உலகத்தில் உண்மையான உருக்கம் எங்கே காட்டப்பட வேண்டுமென்று கடவுள் விரும்புகிறாரோ—அங்கு மனிதர்கள் காட்டுவதேயில்லை. அதற்குப் பதிலாக அந்த இடத்தில்தான் பிடி சோற்றுக்கும் கணக்கு பார்க்கிறார்கள். இருக்கும் போது இவ்வளவு கஞ்சிக்கு உதவி செய்யாமல், செத்துப்போன பின்பு கண்டபடி உருகி யாவதென்ன?